Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா
4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஷு ஆவணி மீ 10 உ சனிக்கிழமை முஹறம் 1410 ஷவ்வால் பிறை 23 (26-08-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 66

# தென்பகுதியில் ஒரு வார கால வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு

## நாளை மறுதினம் திங்கள் முதல்

கொழும்பு, ஆக. 26

நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு, தென்னிலங்கையில் பரந்த அளவில் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளும்படி. மக்கள் விடுதலை முன்னணி [ஜே. வி. பி.] நேற்று அழைப்பு விடுத்தது.

இலங்கை அரசு படுகொலைகள் செய்வதைக் கண்டித்தும் —

இந்தியப் படையின் வெளியேற்றத்தை வலியுறுத்தியும் — இந்த ஒரு வாரகால தேசிய வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளும்படி, ஜே. வி. பி. நேற்று வெளியிட்ட அறிக்கையில் கேட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் ஜே. வி. பி. தலைவர் ரோகண விஜேவீர, பொதுச் செயலாளர் உபதிஸ்ஸ கமனுயக்கா ஆகிய இருவரும் கையெழுத்திட்டிருந்தனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவத்திலும் ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிலையங்களிலும் வேலை செய்பவர்கள் உடனே வெளியேற வேண்டும்; துரோகிகளுக்கும் கொலைகாரர்களுக்கும் நாம் பாடம் புகட்டுவோம் — என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாம். (அ எ)

## பொலீஸ் அதிகாரிகள் வடக்கே வர அவசரம்!

கொழும்பு ஆகஸ்ட் 26

தென் பகுதியில் கடமை புரிந்துவரும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் மற்றும் பொலீஸ் நிலைய உத்தியோகத்தர்கள் பலரும் வடபகுதிக்கு இடமாற்றம் கோரியுள்ளதாக அறியவருகிறது.

தென் பகுதியில் ஜே.வி.பி யினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதும், பொலீஸில் கடமையாற்றுபவர்களை இராஜினாமா செய்ய வேண்டும்; இல்லையேல் அவர்களது உறவினர்கள் கொல்லப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டுள்ளதுமே இதற்குக்காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடபகுதியில் கடமையாற்றும் சிங்களப் பொலீஸார் தமது உறவினர்களை இங்கு அழைத்துவர முயற்சித்து வருகின்றனர் என்றும் சொல்லப்பட்டது. (ஒ-10)

## நிவாரணம் பெறுவதற்கு போலிச்சான்றிதழ் இணைப்பு!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 26

இராணுவ நடவடிக்கைகளின்போது குடும்பத் தலைவர்களை அல்லது உறவினர்களை இழந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பணம் பெறுவதற்காக சிலர் போலிச் சான்றிதழ்களை இணைத்து விண்ணப்பித்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணம் வழங்கவென யாழ். செயலகத்தினால் 3 ஆயிரம் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. வி. பி. பங்குபற்றாத தேசிய அரசால் பயனில்லை

### நாடாளுமன்றில் அத்தபத்து

ஜே. வி. பி. பங்குபற்றாத தேசிய அரசால் பிரயோசனம் ஏற்படாது என்று அமைச்சர் ரஞ்சித் அத்தபத்து நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இன்றைய பிரச்சினைகள் அனைத்தையும் பொறுப்பு ஏற்று தீர்வு காணக்கூடிய ஓர் அரசியல் தலைவர் நமக்குத் தேவைப்படுகிறார்.

அந்தத் தலைவர் யார் என்று தெரிவு செய்வதற்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு உரிமை கிடையாது என்று டாக்டர் அத்தபத்து மேலும் சொன்னார். (ஒ-எ)

## சுன்னாகம் மக்கள் வங்கியில் அடகு நகை மீளளிப்பு

### முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்: ஆக 26

சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் அடகுவைத்த நகைகளை மீளளிக்கும் நடவடிக்கை எதிர்வரும் முதலாம் திகதி திகதி தொடக்கம் ஆரம்பமாக உள்ளது.

1988 செப்டெம்பர் 6 ஆம் திகதி முதல் 1989 ஏப்ரல் 19 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களின் நகைகளே மீளளிக்கப்பட உள்ளன.

சம்பந்தப்பட்டவர்களுக்கு வங்கி நிர்வாகம் தனித்தனியே கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

கடிதத்தில் குறிப்பிட்ட திகதியில் வந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடிதத்தில் குறிப்பிட் தினத்தன்று வாடிக்கையாளர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள்கள் மாயமாக மறைகின்றன!

### யாழ் நகர வீதிகளில் சம்பவங்கள்

யாழ்ப்பாணம்: ஆக 26

யாழ் நகர வீதிகளில் நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் திடீர் திடீரென மாயமாக மறையத் தொடங்கியுள்ளன.

கடந்த சில தினங்களில் யாழ் ஆஸ்பத்திரி பகுதியிலும் கே. கே. எஸ். வீதியிலும் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திடீரென காணாமற் போய்விட்டன.

போலித் திறப்புகளுடன் நடமாடும் திருட்டுக் கோஷ்டியே மோட்டார் சைக்கிள்களைத் எடுத்துக்கொண்டு மறைந்துவிடுவதாகக் கூறப்பட்டது.

ஆகையால் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் தமது சைக்கிள்களைப் பாதுகாப்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## சைப்பிரஸ், லெபனான் நிலைமை இலங்கையிலும் வரப்போகிறது

### நாடாளுமன்றத்தில் காமினி அபாய அறிவிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 26

லெபனான், சைப்பிரஸ் நிலைமை இலங்கையில் ஏற்படவுள்ளது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு அபாய அறிவிப் விடுத்திருக்கிறார் அமைச்சர் காமினி திசநாயக்கா.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது அமைச்சர் திசநாயக்கா பேசினார். அவர் தொடர்ந்து சொன்னதாவது:-

அதிகாரம், பாரம்பரியம் ஆகியவற்றில் இருந்து நாம் விலகிச் செல்லவேண்டி உள்ளது. பிரச்சினையின் இரு பக்கங்களையும் நாம் பார்க்க வேண்டும்.

இப்போது உயிருக்குப் போராடும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் ரி-56 ஆயுதத்துக்குப் பதிலாக வேறு நவீன ஆயுதம் வந்து சேரக்கூடும்.

#### பேச்சும் குண்டும்

நூறு பேச்சுக்களுக்கு எடுபடாது போன மக்கள் இன்று ஒரு குண்டுக்குப் பயந்துபோய் இருக்கின்றனர்.

இன்று கிராமங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சொல் எடுபடாது இருப்பதற்குக் காரணம் இதுதான்.

நுகேகொட, மஹரகம ஆகிய இடங்களில் கூட்டங்களை நடத்துவதன் மூலமும் சுவரொட்டிகளை ஒட்டுவதன் மூலமும் இந்தியப் படையை எவராலும் அனுப்பிவிட முடியுமா? தனது கதையைச் சொல்ல ஒருவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணிக் கூட்டறிக்கையின் மூன்று முக்கிய அம்சங்கள்

கொழும்பு, ஆக. 26

எதிர்க்கட்சிகள் கூட்டாக விடுக்க இருப்பதாக எதிர்பார்க்கப்படும் யுத்த நிறுத்தக் கோரிக்கை சம்பந்தமான அறிக்கையில் மூன்று முக்கிய கோரிக்கைகள் இடம்பெறலாம் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்பட்டது.

★ புதிதாக ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

★ அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் சில மேற்கொள்ளப்படவேண்டும்.

★ தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட சர்வதேச ஸ்தாபனங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். (ஒ-எ)

## புதிய மீளாய்வு யோசனைகள்; இந்திய அதிகாரிகள் பரிசீலனையில்!

புதுடில்லி, ஆகஸ்ட் 26

ஜனாதிபதி பிரேமதாஸாவின் மீளாய்வு யோசனைகள் கடந்த புதன்கிழமை இரவு புதுடில்லிக்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய அரசு அதிகாரிகளால் புதிய மீளாய்வு யோசனைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக புதுடில்லி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையில், எதிர்வரும் அக்டோபர் மாத முடிவுக்குள் அமைதிப்படையினரை விலக்கிக்கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா புதுடில்லிக்கு அனுப்பியுள்ள மீளாய்வு யோசனையில் கேட்டிருக்கிறார் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### வாரத்துக்கு மூவாயிரம் பேர்

வாரத்துக்கு மூவாயிரம் துருப்புக்கள் விதம் துருப்புக்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மேலும் கேட்டிருக்கிறார்.

இரண்டொரு தினங்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

[26 - 8 - 1989]

ஆவணி—10 சனிக்கிழமை

நக்ஷத்திரம்: மிருகசீடம்

சுபநேரம்:

03-05 முதல் 04-35 வரை ராகுகாலம்.

09 05 முதல் 10-35 வரை இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஜனாதிபதிக்கு பாதுகாப்பாகசென்ற வாகனங்கள் மீது குண்டு வீச்சு!

### ஐவர் காயமுற்றனர்

கொழும்பு, ஆக. 26

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு பாதுகாப்பு அளித்துச் சென்ற படையினரின் வாகனம் மீது குண்டு வீசப்பட்டது. அதன் விளைவாக ஐந்து பேர் காயமுற்றனர்.

இந்தக் குண்டு வீச்சுச் சம்பவம் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

ஜனாதிபதி பிரேமதாசா காரில் சென்றுகொண்டிருந்த சமயம், அவருக்கு பாதுகாப்புக் கொடுத்து பாதுகாப்புப் படையினர் முன்னும் பின்னும் (பைலட்) வாகனங்களில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அதில் ஒரு குண்டு பாதுகாப்பு வாகனம் ஒன்றின் மீது பட்டு வெடித்தது.

அதனால் ஐந்து பேர் காயமுற்றனர். [அ-எ]

## விரிவுரையாளர் விடுதலையானார்

கொழும்பு. ஆக. 26

பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சோமரத்தின பாலசூரியா கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டார். (ஒ-எ)

## வடக்கு-கிழக்கு பகுதிகளில் முதற்கட்ட ஜனசக்தி உதவி

கொழும்பு, ஆக 26

வடக்கு- கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பதினொரு பிரதேச [உதவி அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த உணவு முத்திரை பெறுபவர்களுக்கும் ஜனசக்தித் திட்டத்தின் உதவி பெறும் முதல் தொகுதியில் இடமளிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாத இறுதியில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்களின் முதலாவது தொகுதியில் உணவு முத்திரை பெறுபவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதிலும் மொத்தம் 28 பிரதேச உதவி அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் முதல் தொகுதியில் இடம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 26

ஓய்வூதிய வவுச்சர்களும், பணமும் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளைக்கு நேற்றுப் பகல் கிடைத்தன.

ஓய்வூதிய வவுச்சர்கள் கிடைத்தவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தமது கணக்கில் வரவு வைத்து, மறுநாள் செவ்வாய்க்கிழமை பணத்தைப் பெறலாம் என்று வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-3)

## ● சிமெந்து 210 ரூபா

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 26

ஒரு பைக்கட் சிமெந்து வெளிச்சந்தையில் 210 ரூபாவுக்கு நேற்று விற்பனையானது.

மின்சாரத் தடையை அடுத்து சிமெந்து கூட்டுத்தாபனம் லங்கா சிமெந்து நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் உற்பத்தி மற்றும் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே. (ஒ-3)

## இராமநாதன் உயர் நீதிமன்ற நீதியரசரானார்

கொழும்பு ஆகஸ்ட் 26

நீதியரசர் திரு. பி. இராமநாதன் உயர் நீதிமன்ற (சுப்ரீம் கோர்ட்) நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது காலவரை இவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைமை நீதியரசராகப் பணியாற்றி வந்தார்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்கா மேன்முறையீட்டு நீதியரசராக நியமிக்கப்பட்டார். (அ-எ)

## செய்திச் சாரம்

### இளைஞர் சுட்டுக் கொலை

குருநகர், ஆக. 26

யாழ். பெரியகோவிலடியில் நேற்று மாலை 4-30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் மத்தியூஸ் வீதி ஒழுங்கையைச் சேர்ந்த அழகு யேசுராசா (வயது 32) என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-51)

### எஸ். டி. யின் அறிக்கை

கொழும்பு, ஆக 26

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தென்னிலங்கைப் போராளிகள் நடத்தும் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான இலங்கை முன்னேற்ற முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ எ)

### பரந்தன் பகுதி வெறிச்சோடியது

யாழ்ப்பாணம், ஆக 26

பரந்தன் சந்திப் பகுதிக் கடைகள் யாவும் நேற்று பூட்டப்பட்டு மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. (ஒ-76)

## இந்திய அதிகாரி எவரும் இப்போது வரமாட்டார்!

புதுடில்லி, ஆகஸ்ட் 26

ஜனாதிபதி பிரேமதாசாவின் புதிய யோசனைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த, இலங்கைக்கு உடனடியாக அதிகாரி ஒருவரை அனுப்பும் அவசியம் ஏற்படவில்லை என்று புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

க. பொ. த. ப (சாத. தரப்) பரீட்சை 1989 விடைத்தாள், பரீட்சார் தொடர்பான விபரங்களை மீளாய்வு செய்வதற் கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் இடம்: கிளின் கட், இல. 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (1711)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] களைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல் களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல. 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

கண்ணாடி அலுமாரிகள், புடைவைக்கடை, மருந்துக் கடைக்கு உகந்தவை: 6 அடி உயரம், 5 அடி அகலம், கிழ்லாச்சி 2. 5½ அடி உயரம் 4½ அடி அகலம் 6, 7, 8 அடி 24 கேஜ் தராம் 120 கியன விற்பனைக்குண்டு. எந்நேரமும் சந்திக்கலாம். சி. கந்தசாமி நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி, மானிப்பாய். (1807)

பழைய புத்தகங்கள் விற்கப்படும் வாங்கப்படும். Second Hand Book House 13/6 ஸ்ரான்லி ரோட், (யூரசொலி, இலங்கை வங்கிக்கு முன், பட்டப்படிப்பு கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (1811)

### கோழிக் குஞ்சுகள் விநியோகம்

V. M. S. R Hen Farm பிரிமா கலையின் பிலிமத் இனங்களை உடைய ஒருநாள் புறொயிலர் வெள்ளை கறுப்பு சிவப்பு பேட்டுக்குஞ்சுகள். சேவற்குஞ்சுகள் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சகல இறைச்சிக் கோழி ஒப்பந்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். பதிவு செய்யும் இடங்கள்: 36 பலாலி ரோட், கந்தர் மடம், (இலுப்பையடி) துர்க்காதேவி கிளினிக் இருபாலைச் சந்தி, இருபாலை (1810)

Golden Comet பிறவுண் பேடு குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30 ஆம் திகதி புதன் கிழமையும், 31 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1725

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புறொயிலர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும் எம்மை நாடுங்கள். ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802. பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

### மீண்டும் விற்பனையாகிறது

ஜெயகாந்தனின் சில நேரங்களில் சிலமனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் ஜெகசிற்பியனின் கடைசி நாவல் ஆருவது தாகம், சாண்டில்யனின் அவனி சுந்தரி - ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1681)

### மயூரதி கணித வெளியீடுகள்

10 வருடங்களுக்கு மேலாக கணித நூலாக்கத்தில் அநுபவமுடைய ஆசிரியர் வி. சச்சிதானந்தனின் ஆக்கங்கள் தான் மயூரதி வெளியீடுகளாகும். G. C. E. (O/L) மாதிரி வினாத்தாள்கள் ரூபா 13.75, ரூபா 17.50. கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேசனர்ஸ் [1390]

### இறைச்சிக்கோழி விற்பனை

Broilers எல்லா வகையான கோழி இறைச்சியும்எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 பருத்தித்துறை ஒழுங்கை, முத்திரைச் சந்தி. [11778]

### மூக்குக் கண்ணாடிகள்

+ 1.00 முதல் +3.50 வரையிலான வெளிநாட்டு மூக்குக் கண்ணாடி வகைகளை (Reading Glass) குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள பெண்ஸி ஹவுஸ், 68, பெரிய கடை, யாழ்ப்பாணம். (C/3557)

### தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள வெட்டுனர், தையல் வேலை தெரிந்தோர் பயிலுனர்கள், உதவியாளர் மேற்பார்வையாளர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 86 C/o உதயன், யாழ்ப்பாணம். (1597)

### மணமகன் தேவை

இந்து உயர்வேளாளகுல B A பட்டதாரியும் கணடிய பிரசையும் கணக்காளருமாகிய 31 வயது நிரம்பிய உதயத்தில் செவ்வாய் அமைந்த மணமகனுக்கு 28 வயதிற்கு உட்பட்ட பொருத்தமான அழகிய பட்டதாரி மணப்பெண் உடன்தேவை. நேரடித் தொடர்பு: T. தியாகராசா 117/3 அரசடி வீதி, யாழ்ப்பாணம். (11749)

### மணமகள் தேவை

கொழும்பில் அரசாங்க உயர்பதவி வகிக்கும் 30 வயது மணமகனுக்கு கோவிய இந்து குலத்தைச் சேர்ந்த அழகான பண்பான படித்த மணமகள் தேவை: படம் குறிப்புப் பிரதியுடன் விண்ணப்பிக்கவும் 578, C/o உதயன், யாழ்ப்பாணம். (1682)

### சோதிட, மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள். 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும் மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (வியாழக் கிழமை விடுமுறை) (1701)

### சோதிடம்

உங்கள் எதிர்காலத்தை உணர்ந்து கொள்ள திருக்கணிதவியல் சோதிட நிபுணர் T Shanmuganathan, Sempadolai, Emayanan, East Udupiddy. (1584)

### தாதி பயிலுனர்

அண்மையில் விஸ்தரிக்கப்பட்டுள்ள Medical Clinic இற்கு தாதி பயிலுனர் தேவை. 3 மைல் சுற்றுடலில் உள்ளோருக்கு முன்னுரிமை. தொடர்பு: Mrs J. சொர்ணலிங்கம் Medical Clinic, மூளாய் ரோட், வட்டுக்கோட்டை (1687)

### புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு 5

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (எட்டாவது) 27 - 08 - 89 ஞாயிறு 10 - 30 மணி 1 - 30 மணி நேரங்களில் நடைபெறவுள்ளது: பதிவு செய்யவும். நடந்தேறிய பரீட்சை விடைத்தாள் களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1670)

### Matrimonial

Jaffna Vellala Catholic Parents Seek Suitable partner for pretty looking steno daughter aged 89 yrs. Accountants, prefered substantial dowry available hindus also considered. Mangala Agency, Jaffna. SriLanka. (1673)

Hindu vellala Brothes Seek A suitable Qualified partner Accountant, Engineer) for Their sister 22 years old (pretty) working in Canada. As a Canadian Citizen. 580, C/o Uthayan. (1706)

### சேவை

திருமண சேவைக்கு விவாகப் பொருத்தம் பார்ப்பதற்கு காணி வாங்குவதற்கு விற்பதற்கு எதுவானாலும் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம் புதிய மாங்கல்யா மல்ரி சேவிஸ் 14, விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை: மேற்கு. (1724)

## இயந்திரப் படகுகள்

தீவுப்பகுதிக் கடற் போக்குவரத்துக்கு இரண்டு புதிய இயந்திரப் படகுகள் கிடைக்க உள்ளன.

இதுகுறித்து புனர்வாழ்வுத் துறை அமைச்சின் இம்மாதம் 16 ஆம் திகதியிடப்பட்ட உறுதி செய்யும் கடிதம் ஒன்று யாழ் செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு இயந்திரப் படகிலும் சுமார் நூறு பிரயாணிகளை ஏற்றிச்செல்ல முடியும். இந்தப் படகுகள் குறிகாட்டுவானிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இரண்டு படகுகளும் புதிதாகக் கட்டப்படஉள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-10)

## தபால் மூலம் ஆங்கிலம்

படித்தோர் பலரினால் பாராட்டப்பெற்ற தபால் மூலம் ஆங்கிலம் மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க முடியும் விபரங்கட்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE.**

P.O. Box 162, Colombo. (சி/ 3521)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
செல்வத்தம்பி
செல்வராணி

தோற்றம்:
14-06 1932


மறைவு:
28-07-1989

ஆசைக் கனவுகள் நிறைவேறமுன் காலன் வசப்பட்ட எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடையவும் இறைவன் அருள்பெறவும் பிரார்த்திக்கும்;

அன்புக் கணவன், பிள்ளைகள்.

செல்வவிளி,
உடுப்பிட்டி (1719)

## 120 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சின்னத்துரை பிரபாகரன்

(யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை இறுதி வருட மாணவன்)

மலர்வு: 23. 11. 1963 — உதிர்ப்பு 30, 04 1989

துயரம் மனதில் முட்டுகிறது!
உன் நினைவுகள் காயத்தைச் சீண்டுகிறது!
நாம் பெருமூச்செறிகிறோம்! ஆற்றாமை தலைதூக்க
குமைகையில் புரைத்து இளகிறது மனசு!
உன் ஞாபகங்களில் சாவதற்கே
உன் வாழ்வில் மலர்ந்தோம் என்றானது!
ஓர் அதிசயம் நிகழக் கூடாதா?
நீ எழுந்து வரக்கூடாதா?

27 - 08 - 1989 (ஞாயிறு) அன்று முள்ளியவளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

தாய், சகோதரர்கள்.

துரை வீதி.
முள்ளியவளை.

(1722)

## ஓராண்டு நினைவஞ்சலி



தையிட்டி

### கார்த்திகேசு சிவபாதசுந்தரம்

(Retd, A. M. C / F. A)

அன்னை மடியில்: 11- 02 - 1931 — ஆண்டவன் அடியில்: 04- 09- 1988

திதி: 26- 08- 1989 (அபரபக்க தசமி)

அப்பா...! ஆண்டு ஒன்று பறந்துவிட்டது உங்களைப் பிரிந்து - நாட்கள் நகர்கின்றன! நாமோ நகரவில்லை! நீங்கள் விட்டுச்சென்ற அதே தனிமைதான்; எத்தனை பேருக்கு நிழல்தரும் விருட்சமாக இருந்தீர்கள்...... இன்று உங்கள் பிள்ளைகள் நிற்க நிழல் இல்லையே...... அது ஏன் அப்பா......? நீங்கள் செய்த வார்த்தொண்டும், கோயில் தொண்டும் தான் காரணமா...? நிழல் தந்த மரத்தையே சாய்த்து விட்டார்களே!

நம்பிக்கை இழந்து வாடும் எங்களுக்கு ஆறுதல்தர உங்களைத் தவிர வேறு யார் அப்பா இவ்வுலகில்...?

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவால் என்றும் வாடும்;

மனைவி, பிள்ளைகள்.

தையிட்டி,
காங்கேசன் துறை. (1563)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 15 - 01 - 1965

உதிர்வு: 30 - 05 - 1 89

### திருமதி ச. இராஜேஸ்வரி

பச்சிளம் பாலகனின் வாயின்
பால் மணம் மாறவில்லை
படுக்கையில் நீ படுத்து - பலகாலம்
படு நோயில் வருந்தவில்லை
பெற்ற நான்கு குழந்தைகளை மறந்து
கொடுங் கூற்றன் தனைக் கண்டு - பாசக்
கயிற்றின் வலைதனில் வீழ்ந்தாயோ?
பெற்ற மனம் பித்து என்றும்
பிள்ளை மனம் கல்லு என்றும்
பேசி வைத்த அறிஞரையும் திகைக்க வைத்து
பிள்ளை மனம் வெதும்பச் சென்ற - உன்
பேதை மனம் கல்லாச்சோ?
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டி நிற்கும்;

அன்பு ஐயா, அம்மா, கணவர், மகன்மார், மகள்மார், அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், அத்தான்மார், தம்பிமார், உறவினர்கள்.

க. மாணிக்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி -
வடக்கு.

(1814)

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 22-10-1963

விண்ணில்: 25-08-1988

### செல்வி யசோதா சச்சிதானந்தன்

கலைப்பீடம் வந்திரண்டு
வருடங்கள் முடியுமுன்னே யசோதா - நீ
எம்முடனே களித்திருக்க விருப்பமற்றோ
கண்ணிலிருந்து மறைந்து விட்டாய்! யசோதா!!

3ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்
யாழ்/பல்கலைக்கழகம்,

(1805)

## 63 ஆம் நாள் நினைவஞ்சலி



### சுப்பிரமணியம் சத்தியானந்தம் [சச்சி]

தோற்றம்: 07 05 - 1955 — மறைவு: 25- 06- 1989

அன்புடன் எம்மை ஆதரித்து வளர்த்தீர்கள்
குடும்ப முன்னேற்றத்துக்காக அயராது பாடுபட்டீர்கள்
உங்களை எப்போது காண்போம் என்றிருந்தோம்
வந்ததுவோ மரணச் செய்தி கனடாவில் இருந்து
ஆறவில்லை எம் மனது ஆண்டவனை வேண்டுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற எமது கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்:
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவரின் பிரிவால் வாடும்;

அன்பு மருமக்கள், மனைவி, பிள்ளைகள் (கனடா), தாய், சகோதரர், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிமார் மற்றும் உறவினர், நண்பர்கள்.

மாரிட்டி,
அளவெட்டி தெற்கு: (1712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுப் போட்டி இல-30

பரிசு பெற்றோர் விவரம்

முதலாவது பரிசு:
செ. சூசையா,
26, தண்ணீர்த்தாங்கி வீதி
குருநகர், யாழ்ப்பாணம்;

இரண்டாவது பரிசு:
திரு. கே. அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

மூன்றாவது பரிசு:
கிருஷாந்தினி சகாதேவன்,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.


## PERSONAL CLASS

கணக்கியல்:
ஆரம்பம்: 27 - 08 - 1989 Sun 2 30
89 — நிதிப்பாய்ச்சல் கூற்று
90 — பங்குடைமை
91 — கணக்குப் பதிவியல்
S. K. பிரபாகரன்

தொடர்பு-
NEW SCIENCE ACADEMY
B.M.C. LANE, JAFFNA.
(சி/3552)


## அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
அலுவலகம் · யாழ்ப்பாணம்
பாவித்த வாகனங்களின் ஏலவிற்பனை

மேற்படி திணைக்களத்தினால் 24 - 08 - 89 காலை 10 00 மணியளவில் இடம்பெ விருந்த பகிரங்க ஏலவிற்பனை தவிர்க்கமுடியாத காரணங்களால் 31 - 08 - 89 காலை 10.00 மணியளவில் 304/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள எமது மருந்துக் களஞ்சியத்தில் இடம்பெறும் என அறியத் தருகின்றன்.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/3549)

வெற்றுச் சாக்குக்கான

## கேள்விப் பத்திர அறிவித்தல்-1989

எமது யாழ் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் ஸ்ரான்லி வீதியிலிருக்கும் 'மத்திய விநியோகக் கிளையில்' (பீ எஸ் சேவிஸ் ஸ்ரேசனுக்குள்ளே) அ. ஆ. இ தரங்களில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் மேற்குறிப்பிடப்பெற்ற கிளையில் கிழமை நாட்களில் காலை 9.00 முதல் மாலை 4.15 மணிவரையில் பார்வையிட்டு, அதற்கான கேள்விப் பத்திரத்தை எமது பணிமனையிலும், ஸ்ரான்லி வீதியிலிருக்கும் ம. வி கிளையிலும் பெற்று, 22·09·89 காலை 10 00 மணிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக, பிராந்திய கணக்காளர் விற்பனைத்திணைக்களம் 250, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு, தபாலுறையின் இடது மூலையில் "வெற்றுச்சாக்குக் கேள்விப் பத்திரம் – 1989" என்று குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலமோ, அல்லது எமது பணிமனையிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியிலிட்டோ சேர்ப்பிக்கவும்.

சு. சண்முகரத்தினம்
பிராந்திய கணக்காளர்,
விற்பனைத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி-3564]


## ★ திருமண சேவை ★

**மணப் பெண்கள் தேவை**
B. Com ஆசிரியர், Accountant, Engineers ஆகியோருக்கும் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து ஆகிய இடங்களில் தொழில் புரியும் ஆண்களுக்கும் மணப் பெண்கள் தேவை.

**மண மகன்கள் தேவை**
7 இல் 8 இல் செவ்வாய் உள்ள பெண்களுக்கும் 37 வயதிற்கு மேற்பட்ட நல்ல சீதனம் உள்ள பெண்களுக்கும் Doctor, B. Sc, B. A பெண்களுக்கும் மண மகன்கள் தேவை.
சைவப் பெண்களுக்கும் ஏற்ற மண மகன்கள் தேவை.
★ இரண்டாம் தாரம் திருமணம் செய்ய விரும்புவோர் தேவை:
உடன் பதிவு செய்து பலனடையுங்கள்
சந்திக்கும் நேரம்:-
காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை

**சோதிடம்**
திருமணப்பொருத்தம், சாதகம் குறிப்பு கணித்தல், பலன் பார்த்தல் ஆகியவற்றிற்கு எமது சோதிடரைச் சந்தியுங்கள்.

**விற்பனைக்கு**
சிசில் குளிர்சாதனப் பெட்டி — 60 க. அடி உடன் விற்பனைக்குண்டு.

**கமல்ஸ் சேர்வீஸ் & ரேடிங்ஸ்**
நாகம்மா பில்டிங்ஸ்
டில்கா முதல் மாடி [பஸ் நிலைய முன்பாக]
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-3562]


# கல்வி அமைச்சில் புதிதாக

# தமிழ் மொழி அபிவிருத்திப் பிரிவு

## பணிப்பாளராக சபாநாயகம்

கொழும்பு ஆக. 26
கல்வி கலாசார தகவல் துறை அமைச்சின் கீழ் இயங்கும் கல்வி ராஜங்க அமைச்சில் தமிழ் மொழி அபிவிருத்திப் பிரிவு ஒன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

மதிய உணவுப் பகுதியில் கடமையாற்றும் கல்விப் பணிப்பாளர் திரு. வெ, சபாநாயகம் இப்பிரிவின் பொறுப்புப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார் இப்பிரிவிற்கு கல்வி அதிகாரிகளும் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

புதிய தமிழ்மொழி அபிவிருத்திப் பிரிவு இலங்கையிலுள்ள தமிழ் மொழி மூலம் இயங்கும் பாடசாலைகளில் மொழி, இலக்கியம் ஆகியன சம்பந்தமான அபிவிருத்திப் பணிகளை வழி நடத்துமென அறியப்படுகிறது.

இது போலவே, முஸ்லிம் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இப் பிரிவிற்கு திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சில் பணிபுரிந்த ஜனாப் காதர் மொகிடீன் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பிரிவு முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்தி சம்பந்தமாகப் பணியாற்றும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சில் ஏற்கனவே சிங்கள மொழிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே: (க)

### பண்ணிசைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக 26
நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானஉற்சவத்தை முன்னிட்டு யாழ் மாநகரசபை ஏற்பாடு செய்துள்ள பண்ணிசைப் போட்டிகள் இன்று சனிக்கிழமைகாலை ஒன்பது மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடை பெறும்.

இப் போட்டியில் 36 பேர் கலந்து கொள்கிறார்கள்.

பூங்காவனத்திருவிழாவன்று வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்: [த-3]

### விசேட கூட்டம்

காங்கேசன்துறை, ஆக 26
மயிலிட்டி அபிவிருத்திச் சபை உப - அலுவலகப் பிரிவில் மேற் கொள்ள வேண்டிய அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களை முடிவு செய்ய இன்று சனிக்கிழமை விசேட ஆலோசனைக் கூட்டம் ஒன்று தெல்லிப்பளை அலுவலகத்தில் நடை பெறவிருக்கிறது. [த 68]

### மட்டு. விஜயம்

மட்டக்களப்பு ஆக 26
வடக்கு - கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு மகேஸ்செல்வரத்தினம் கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு விஜயம்செய்தார்:

### கூட்டம்

யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை பத்துமணிக்கு நல்லூர் உற்சவகால சாரணர் காரியாலத்தில் நடைபெறும்: (த-3)


## ★ பிள்ளையார் ★



## கொழும்பு/யாழ்ப்பாணம்/கொழும்பு

பிரயாணிகளுக்கு ஓர் நற் செய்தி!

முற்றிலும் அதி நவீன

### குளிரூட்டப்பட்ட வர்ணத் தொலைக்காட்சி பொருத்தப்பட்ட 'பஸ்

பகல் சேவையில்

புறப்படும் நேரம்:-
யாழ்ப்பாணத்தில் இருந்து ஞாயிறு. செவ்வாய், வியாழன் காலை 7.00 மணி

கொழும்பில் இருந்து:—
வெள்ளவத்தையில் திங்கள், புதன், வெள்ளி காலை 5.00 மணி
கோட்டை புகையிரத நிலைய முன்பாக காலை 6.00 மணி

ஆசனப்பதிவுகளுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது:

★ கொழும்பு:-
**பிள்ளையார்**
No 5. லில்லி அவென்யூ.
வெள்ளவத்தை

★ யாழ்ப்பாணம்:-
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.

**R. B. புக்கிங் சென்ரர்**
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

COLOMBO BOOKINGS

(1) AJANTHA HOTEL Ltd. - Fort:
T. Phone: 432769, 28039.
(2) SIVASAKTHY STORE - Sea Street:
(3) INTER MOD BOOK SHOP,
250, Galle Road, Wellawatte.

(C/3245)


## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### சிவபாலா வருவாயே!

செந்தாமரை யான்தன்னுடன் வெண்டாமரை யாளும்
தேனேயெனப் பாலேயென மாறுதுடன் வைகும்
கொந்தார்மலர்த் தண்சோலைகள் கொண்டேயெழில் [மல்கும்
கோடாநெறி வேதாகம மேலோருறை நல்லூர்க்
கந்தாவென வந்தேமகிழ் வெந்தாயுன தன்பால்
காமாதிகள் தாமேயெமைச் சாராதொழிந் தோட
தந்தோமென நின்றுடிடு சிங்காரம யில்மேல்
ஞானசர வேலாசிவ பாலாவரு வாயே!

— மு. தியாகராசா

(இன்று நல்லைக் கந்தன் 21ஆம் திருவிழா)

## ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடந்த பீடாரோஹண விழா

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 23 ஆவது பீடாரோஹண விழா கடந்த புதன் கிழமை ஆதீனத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது:

காலை பன்னிருதிருமுறை பஜனையுடன் ஆரம்பமான விழாவில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன: ஸ்வாமிகளின் சமாதி ஆலயத்தில் பூஜை, வழிபாடுகள் சிறப்புற நிகழ்ந்து தேவார பாராயணமும் இடம்பெற்றது

தொடர்ந்து குருமகா சந்நிதானம் பீடாரோஹணத்தில் விற்றிருந்து அன்பர்களுக்கு அருளாசி வழங்கினார்: அதன் பின் மங்களவாத்திய சகிதம் ஸ்வாமிகளின் பட்டணப் பிரவேசம் கோலாகலமாக நடந்தது:

நண்பகல் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை விசேஷ நிகழ்ச்சியாக வயலின் சோலோ, மேளக்கச்சேரி என்பன இடம் பெற்றன; (அ)

## கண்டெடுக்கப்பட்ட அடையாளக்கார்ட்டுகள்

யாழ்ப்பாணம், ஆக 26
பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு 292/2 நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் ஒப்படைக்கப் பட்ட அடையாளக் கார்ட்டுகளில் ஏற்கனவே 70 அடையாளக் கார்ட்டுகளின் விவரங்கள் உதயனில் வெளிவந்து விட்டன. இன்று மேலும் 24 அடையாளக் கார்ட்டுகளின் விவரங்கள் இங்குபிரசுரமாகி உள்ளன.

71. 281400410X சண்முகராஜா சுப்பிரமணியம், 162, மடவலமடிகே.
72. 250711312V நடுவிலான் சின்னத்தம்பி, 521, மாங்குளம் வீதி, துணுக்காய்.
73: 373322580X செங்கன் கதிர்வேலு. டிடொக் ஹோம் தோட்டம், அப்கொட்.
74. 625610540X நகுலேந்தி யோகேந்திரராணி, உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு:
75. 670401677V தருமராசா கணேசலிங்கம், நல்லூர், பூநகரி:
76 433312147X இராசையா தர்மராசா, நாச்சிமார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்:
77. 390900856X பீரிஸ் குருகுலசூரிய ஜோசப், அராலி வடக்கு:
78 410412551X குணபால அப்புகாமி, 264, வட்டுக்கோட்டை மேற்கு:
79. 492481831V இராசநாயகம் பொன்னன், அராலி வடக்கு, அராலி:
80. 701022068V தோமஸ் கொலின் ஸ்டிபன், 12ஆம் வட்டாரம், புங்குடுதீவு:
81. 631301606V கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன், தும்பளை தெற்கு, பருத்தித்துறை:
82 333061015V செல்லையா விக்கினேஸ்வரன், 563, புலோலி.
83. 675551340V இளையதம்பி மாலதி, அனலைதீவு:
84 230170908X சுப்பிரமணியம் தர்மலிங்கம், உடுவில்:
85. 221662270V நாகலிங்கம் தங்கத்துரை, அராலி வடக்கு
86. 667871522X நாராயணசாமி பிரேமா, ஏகாம்பரம் வீதி, உப்புவெளி.
87 641233013V சண்முகம் ஜெகதீஸ்வரன், றக்கா ரோட், யாழ்ப்பாணம்:
88 307280337V கிரிஸ்ரின் இராயப்பு. அடப்பன் வீதி. யாழ்ப்பாணம்:
89. 471552178V முருகன் சின்னையா, 258/1, புலோலி தெற்கு. புலோலி:
90 587622629V மனுவல் பூவியற் மரினா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
91: 518120220V ஜெயதேவி இரத்தினம், 778, பிராம்பத்தை வீதி, சங்கானை கிழக்கு:
92, 707600144V உமையாள் இராசையா, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு:
93. 356161157V இராசரத்தினம் பத்மநாதன், தும்பளை:
94. 580363989V அருணாசலம் தவராசசிங்கம், யாழ்ப்பாணம்.

(தொடரும்)


## வேலையாட்கள் தேவை

சோடாப் பெட்டி ஏற்றி இறக்க கூலி ஆட்கள் தேவை.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31. மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3566)

## உங்களிடம் உண்டா?
## உடனடியாகத் தேவை

மன்னார், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி பகுதிகளில் ஒரு வீடு சமூக சேவையாளர் குடும்பத்திற்கு வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. முற்பணம் கொடுக்கப்படும். முதல் கடிதத்திலேயே சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர் நாயகம்
தபால் பெட்டி இல. 1253
கொழும்பு - 03
தொலைபேசி. 585851

(1655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

புவனம் கடந்து நின்ற ஒருவன் தி[ரு]வுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் அகிலாண்டேஸ்வ[ரி] மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மையின் ஒப்பற்ற வண்ண உயிரோவியம் அவள் அருளாட்சி செய்யும் ஆலய கோபுரத்தைப் பின்னணியாகக் கொண்டது.

பெற்றிட மில்க்வைற் மேலுறையிலுள்ள திருக்குறள் 25 அனுப்பிவைக்கவும்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

26 - 08 - 1989 சனிக்கிழமை





நல்லூர் மஹோற்சவம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் எதிரே சிறக்கு வீதியில் உள்ள ''மில்க்வைற்'' விளம்பர விற்பனைக்காட்சிச்சாலையில் ரூபா. 20/- க்கு மில்க்வைற் உற்பத்திப் பொருட்களை வாங்குவோருக்குப் பல அன்பளிப்புகள் காத்திருக்கின்றன.

அரிய சந்தர்ப்பம், தவறவிடாதீர்கள்.

''மில்க்வைற்''

## பனம்பழம் சேகரிக்கச் சென்ற பெண்மணி சூட்டுக்குப் பலி!

### தாழ்வுபாடு பகுதியில் சம்பவம்

மன்னார், ஆக. 26

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் அதிகாலைநேரத்தில் பனம்பழம் சேகரிக்கச்சென்ற பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கடந்த புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மரணமானவர் தாழ்வுபாடு வாசியான மெரினுகுறூஸ் (33வயது) என்பவர் ஆவார்.

**முஸ்லிம் வயோதிபரும் பலி**

வட்டக்கண்டல் பகுதியில் புதனன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் வயோதிபர் ஒருவர் பலியானார்.

இறந்தவர் உயிலங்குளத்தைச் சேர்ந்த முகையதீன் குஞ்சு (வயது 70) எனத் தெரிவிக்கப்பட்டது.

மறைந்திருந்த சிலரே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனக் கூறப்பட்டது. (ஒ-ரி)

## வடமராட்சியில் பாதிப்புற்ற மக்களுக்கு சர்வோதயஉதவி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 26

வடமராட்சியில் அல்வாய், நாவலடி, தம்பசிட்டி ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வோதயம் ஒரு கிழமைக்குப் போதுமான உணவுப் பொருள்களை வழங்கி வருகிறது.

இமையாணன் வல்வெட்டி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து இடம்பெயர்ந்து நல்லூரில் தங்கியுள்ளவர்களுக்கும் சர்வோதயம் உணவுப் பொருள்களை வழங்கியது.

ஒரு கிழமைக்குப் போதுமான அரிசி, மா. சீனி, பருப்பு, பால்மா போன்ற உணவுப் பொருள்களே வழங்கப்படுகின்றன.

அத்துடன் அப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு சர்வோதய யாழ் அலுவலகத்தில்வைத்தும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஒ-3)

## யாழ். பல்கலைக்கழகம்:

# மீள் பரீட்சையை இவ்வருடமே நடத்துக!

யாழ்ப்பாணம், ஆக. 26

அடுத்த வருடம் நடைபெறவுள்ள கலைத்துறை இறுதியாண்டு மாணவருக்கான மீள் பரீட்சையை இவ்வருடம் இரண்டு மாதங்களின் பின் நடைபெறவுள்ள இடைத் தவணைப் பரீட்சையுடன் இணைத்து நடத்துமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படிபரீட்சையில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் இது சம்பந்தமான மகஜர் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளனர்.

இப்போதைய காலச் சூழ்நிலையில் ஒரு வருடம் மீள் பரீட்சைக்காக காத்திருப்பதன் மூலம் தாம் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும், ஏனைய பல்கலைக் கழகங்களிலும், மருத்துவ பீடத்திலும் உள்ள நடைமுறைபோல் மீள் பரீட்சையினை குறுகிய காலத்தில் நடத்துமாறும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியான விஞ்ஞானத்துறை, கலைத்துறை, இறுதியாண்டுப் பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்கள் சார்பிலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மீள் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு மட்டும் பட்டமளிப்பு விழா அடுத்த ஆண்டிலாவது நடைபெற்றாலும் பரவாயில்லை. தாங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குவீர்களாயினும் எமது தொழில் அற்ற, இராணுவ நடவடிக்கைகளின் மத்தியில் வாழும் நிலைமைகளை உணர்ந்து மீள் பரீட்சையை இவ்வருடம் நடத்துமாறு உருக்கமாக வேண்டிக்கொள்கின்றோம்— என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ரி)

அன்றலர்ந்த மலர் வளையங்கள்,
கடதாசி மலர் வளையங்கள்,
ஓடர்களுக்கு ரோஜாப்பூ மலர் வளையங்கள்
என்பன செய்வதில் கைதேர்ந்தவர்கள்

பிறைற் ஹவுஸ்

(யாகப்பர் ஆலய அருகாமை)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[3568]

★ சிவாகி சாவகச்சேரி ★

89 DEC O/L
YR 10 வகுப்புகள்

ஆரம்பம்: 27- 08- 1989 ஞாயிறு 10. 30மணி

SC — J. R குரி    MATHS — செல்வா
ENG— பாலன்    TAM — சுந்தரலிங்கம்
SOCIAL — கருணாகரன்    COM — இரகுநாதன்

✱ முதன் முதலாக யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை (1696)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-08-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விமானத்தைக் காணவில்லை!

இஸ்லாமபாத், ஆகஸ்ட் 26

பாகிஸ்தான் விமானம் ஒன்று 51 பேருடன் காணாமற் போய்விட்டது என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்லாமபாத்தில் இருந்து புறப்பட்ட இவ்விமானத்தில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர் என்று சொல்லப்படுகிறது.

விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட 18 நிமிட நேரத்தில் விமானம் தொடர்பை இழந்ததாக அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

## அதிசயப் பூனைக்குட்டி

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 26

யாழ்ப்பாணம், மடத்தடியில் உள்ள ஒருவரது வீட்டில் பூனை ஒன்று அசாதரண உருவ அமைப்புடனான குட்டியை ஈன்றுள்ளது.

அதிசயமான அக்குட்டிக்கு 4 கண்களும், 2 வாய்களும் 2 மூக்குகளும் காணப்பட்டன. அந்தக் குட்டி ஒருநாள் உயிர்வாழ்ந்து இறந்து விட்டது. (ஓ)

## நிவாரணம் பெறுதவர் கவனத்துக்கு!

கந்தர்மடம், திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு. ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு மீளக் குடியமர்தல் முதலாவது கட்ட நிவாரணக் கொடுப்பனவுக்கான இறுதித் திகதி இம்மாதம் 28ஆம் திகதியாகும்.

முதலாவது கட்ட நிவாரணப்படிவம் பதிந்திருந்தும் இதுவரை வங்கி இலக்கம் கிடைக்கப்பெறுதவர்கள் உடனடியாக திருநெல்வேலிமேற்கு கிராமசேவையாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-3)

### புதிய மீளாய்வு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசின் பதில் கிடைக்கலாம் என்றும் கொழும்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

அக்டோபர் மாத முடிவிற்குள் படைகளை முற்றாக வாபஸ் பெறுவதோ, அன்றி வாரத்துக்கு 3 ஆயிரம் துருப்புக்கள் விதம் திருப்பி அழைப்பதோ சாத்தியமானதாகத் தெரியவில்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இக்கட்டத்தில், மேலும் பேச்சுக்கள் நடத்துவதற்காக இந்தியாவின் சிறப்புத் தூதர் ஒருவர் கொழும்பு வருவது கேள்விக்குரிய விடயமே என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார். (ஓ-எ)

### நிவாரணம்.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன.

எனினும் பூரணப்படுத்தப்பட்ட ஆயிரம் விண்ணப்பப் படிவங்களே யாழ். செயலகத்தில் மீள ஒப்படைக்கப் பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தபோது அவற்றுடன் இணைக்கப்பட்ட சில மரணச் சான்றிதழ்கள் மற்றும் விவாகச் சான்றிதழ்கள் போலியானவை என்பது தெரியவந்துள்ளது.

இதனால் நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-10)

### சுன்னாகம்.-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 9 மணிக்கு கீழ்க்கண்ட ஆவணங்களுடன் சுன்னாகம் கிளைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

தமது தேசிய அடையாள அட்டை, பணம் கட்டிய பற்றுச்சீட்டு, வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம். (ஓ)

## குளங்கள், நீரோடைகளில் சடலங்கள் மிதக்கின்றன!

### இதனால் மீன் சாப்பிடத் தயக்கம்!!

கொழும்பு, ஆக. 25

தென் பகுதியில் குளங்கள் மற்றும் நீரோடைகளில் எல்லாம் தினமும் சடலங்கள் மிதந்துசெல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஏற்கனவே ஆறுகளில் சடலங்கள் மிதப்பதாக மட்டுமே செய்திகள் வந்தன. இப்போது குளங்கள் நீரோடைகளும் சேர்ந்துள்ளன!

இதனால் குளங்களில் பிடிக்கப்படும் மீன் வகைகளை வாங்கிச் சமைப்பதை பொது மக்கள் கைவிட்டுவிட்டனராம்.

இதன் காரணமாக நன்னீர் மீன்பிடித் தொழில் மூலம் குடும்பம் நடத்திவந்த மீனவர்கள் தொழில் இன்றிக் கஷ்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## 52 விதவைகளுக்கு ஜெர்மன் நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், ஆக 26

கடந்த கால சம்பவங்களால் வடகிழக்குப் பகுதிகளில் விதவைகளான 52 பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பளிக்க ஜெர்மன் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளையடுத்து ஜெர்மனியில் உள்ள 'தயாகோனிஸ் செவேர்க்' என்னும் அமைப்பே இவ்வுதவியை வழங்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதலில் 29 பேருக்கு சிங்கர் தையல் மெசினும், மிகுதி 23 பேருக்கு பசுமாடுகளை பெற்றுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-3]

### வடக்கு......

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுள்ளனர்.

மொத்தம் ஒரு லட்சத்து 92 ஆயிரம் உணவு முத்திரை பெறுபவர்களுக்கு முதல் தொகுதியில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் நிதி மற்றும் பொருள் உதவிகள் வழங்கப் படவுள்ளன என்று அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. [அ-எ]

### இந்திய -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இலங்கைக்கும்-இந்தியாவிற்கும் இடையே அமைதிப்படை விலகல் சம்பந்தமான கருத்து வேறுபாடுகளை தீர்க்கச் சிறிது காலம் எடுக்கும்—

இது பற்றி பேச்சு நடத்த இலங்கைக்கு அதிகாரி ஒருவரை அனுப்புவதற்கு உரிய சமயம் இன்னும் வரவில்லை -என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ-9)

### சைப்பிரஸ்.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்தே ஆகவேண்டும்.

உங்களை நாம் பாதுகாக்க முடியாவிட்டால் ஜனநாயகத்தையும் எம்மால் பாதுகாக்க முடியாது. நாட்டின் இக்கட்டான நிலையில் நாம் இருக்கிறோம்.

**அதே நிலைமை**

தமிழ் ஈழம் கேட்டு எமது சகோதரர்களான தமிழ் இளைஞர்கள் யுத்தம் நடத்தினர். அதே நிலைமைதான் தெற்கில் இன்று காணப்படுகிறது.

கண்ணி வெடிகளுக்கு மத்தியிலும் தலைக்கு மேலாக ஹெலிக்கொப்டர்கள் பறந்த நேரத்திலும் துப்பாக்கிச் சூட்டுக்கு இடையிலும் வடபகுதி மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வந்தனர்.

ஆனால் நாமோ இங்கு ''முதலில் தாய்நாடு; பின்னர் தான் கல்வி'' என்ற சுலோகத்தைக் கேட்டு வருகிறோம். இதனால் இனி ஒரு தலைமுறை இருக்காது; எமக்கு எதிர்காலமே இல்லை.

**பொருளாதாரச் சீர்கேடு**

மற்றப் பக்கத்தில் நாட்டின் பொருளாதாரம் அழிந்து கொண்டு போகிறது.

பேச்சுக்களின் மூலமாக மட்டுமே தீர்வு காணப்பட முடியும். பிரச்சினைக்குக் காரணம் திறந்த பொருளாதாரக் கொள்கை அல்ல.

இந்த அரசு செய்வதற்கு நானும் பொறுப்பேற்கவேண்டும். இல்லையேல் அதிலிருந்து விலகிவிடவேண்டும்.

இந்தியா இலங்கையை ஆக்கிரமிக்கிறது என்று ஜே.வி.பி தலைவர் கூறுகிறார்.

இந்தியா எம்மை ஆக்கிரமிக்க வேண்டிய தேவையே இல்லை. இந்தியா தனது தேயிலையின் விலையை ஒரு ரூபாவால் குறைத்தால் போதும். இலங்கையின் கதையே முடிந்துவிடும்.

இந்தியாவுடன் நாம் அமைதி ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டதற்குக் காரணம் இலங்கை இன்னொரு சைப்பிரஸாகமாறுவதைத் தடுப்பதற்காகவே.

—இப்படி திரு. காமினி திசநாயக்கா சொன்னார். (ஓ-எ)

## விமானப் படை அதிகாரியின் சகோதரர்கொலை!

கொழும்பு, ஆக 26

இலங்கை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் சகோதரரான பீரிஸ் என்பவர் இனந்தெரியாத நபர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை பத்தரமுல்ல என்னும் இடத்தில் சுடுக்கொல்லப் பட்டார்.

இரண்டுவாரங்களுக்குமுதல் விமானப்படை அதிகாரி குமுது வியனசேயின் இரண்டு சகோதரர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டனர் என்பது தெரிந்ததே. (ஓ-எ)

## கிளிநொச்சியில் 'பரா' வெளிச்சமும் வேட்டுக்களும்

யாழ்ப்பாணம், ஆக, 26

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி முகாம் பக்கமாக நேற்று முன் தினம் வியாழன் இரவு பத்துமணியளவில்தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

'பரா' வெளிச்சக் குண்டுகளும் ஏவப்பட்டன.

இதேவேளை இரணைமடுச் சந்தி முகாமில்இருந்தும் ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

இதனால் அந்தப் பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். (ஒ-76)

## விண்கலம் அனுப்பும் படங்கள்

கலிபோர்னியோ, ஆக. 26

வொயேஜர்-2 விண்கலம் நேற்று நெப்டியூன் கிரகத்தைச் சுற்றி வரும் 'ட்ரைட்டன்' சந்திரனைப் படம் பிடித்து பூமிக்கு அனுப்பிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விண்கலம் 12ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

நெப்டியூன் கிரகம் அதனைச் சுற்றிவரும் ட்ரைட்டன் சந்திரன் ஆகியன பற்றிய புதிய, ஆச்சரியகரமான தகவல்களை வொயேஜர் - 2 விண்கலம் அனுப்பிக் கொண்டிருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஓ-எ-க]

## விசேட ஆணையாளர்

நெடுந்தீவு ஆக: 25

நெடுந்தீவுபிரதேசசபையின் விசேட ஆணையாளராக யாழ் உதவி உணவுத் திணைக்கள ஆணையாளர் திரு: எஸ்; நடேசபிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். (க - 111)

# மரண அறிவித்தல்கள்

## திரு. இராசநாயகம் [குழந்தைவேல்]

உரும்பிராயில் வசிப்பவரும், நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய வே. இராசநாயகம் (குழந்தைவேல்) 24- 08- 89 வியாழன் அன்று காலமாகி விட்டார். இவர் முத்தம்மாவின் அன்புக் கணவரும், இரஞ்சிதேவி, இரஞ்சிதமலர், இரஞ்சிதராணி, ஞானராஜா, ரவிராஜா (சுவிஸ்), யோகராஜா (சுவிஸ்), தங்கராஜா (சுவிஸ்), ஸ்ரீரஞ்சினி, ரூபி (உதயன்), ஆனந்தராஜா, தவரஞ்சிதம், மாலினி ஆகியோரின் அன்புத் தகப்பனும், சத்தியநேசன், இன்பநாதன், அருட்செல்வம், மோகனதாஸ், மரியநெற் ஆகியோரின் அன்பு மாமனும், கந்தையா சின்னத்துரை, நாகம்மா, செல்லம்மா, காலஞ்சென்ற மாகிறேற், ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். நிலோஜன், மென்டீஸ், டேமியா, பிறின்ஸி, சிமித், கைஷன், ரஜிதா, வினோ, மெரின்ஸ், ரமிந்தன், நிரோத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரின் நல்லடக்கம் 25- 08- 89 வெள்ளிக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நடைபெற்றது. இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/3442)

## திருமதி. கதிரவேலு நாகம்மா

கதிரவேலு நாகம்மா அவர்கள் 25- 8- 89 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு அம்மணிப்பிள்ளையின் அன்பு மகளும் கதிரவேலு [சீனிவாசகம்] அவர்களின் அன்பு மனைவியும் லீலாராணி (ஆசிரியை J/ திருநெல்வேலி R. C. T. M. S), சந்திரசிறி, சூரியகுமாரன்' ஜெயசிறி இராஜகுமாரன் [லண்டன்] ஆகியோரின் அன்புத்தாயாரும்' பொன்னம்மா, தர்மலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும, திருமதி செல்வராணி பரராஜசிங்கம், திருமதி அழகுராணி சிறிஸ்கந்தராசா, சுத்தானந்தன் [பிரான்ஸ்], சச்சிதானந்தன் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார், சுதன், மதன், தரன், மதுரா, மாதுளா ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பூதவராயர் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில்நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக27 -8- 89 ஞாயிற்றுக்கிழமை காலை 10; 00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.

க சூரியகுமாரன்.
[மகன்]

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கல்வியங்காடு.

(C/3247)

## திரு. சரவணமுத்து நடராசா

நந்தாவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சரவணமுத்து நடராசா காலமானார். இவர் இராசேஸ்வரியின் அன்புக்கணவரும், சற்குருநாதன், சற்குணதேவி (மலேசியா), குருநாதன்(சுவிஸ்லாந்து), சாந்தகுமாரி (சுவிஸ்லாந்து), தில்லைநாதன் (கனடா), செந்தில்நாதன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தகப்பனும், இராஜேந்திரா (மலேசியா), நந்தா (சுவிஸ்லாந்து), தருமராசா (சுவிஸ்லாந்து) ஆகியோரின்மாமனும், சுகந்தி[மலேசியா], நர்மதா [சுவிஸ்லாந்து] ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற, ஆறுமுகம் பெனடிற் (மலேசியா), காலஞ்சென்றஅம்மாகுட்டி (மலேசியா), சிவபாக்கியம், தங்கச்சியம்மா (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26 08- 89 சனிக்கிழமை காலை 11மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.

ந. சற்குருநாதன்.
[மகன்]

கொக்குவில் மேற்கு.

[1726]

## திருமதி டொறத்தி அருள்ஜோதி இராமநாதன்

(Rtd. Matron, General Hospital, Jaffna)

திருமதி டொறத்தி அருள்ஜோதி இராமநாதன் காலமானார். இவர் காலஞ்சென்ற Dr. இராமநாதனின் அன்பு மனைவியும், ஜோர்ஜ் செல்வகுமார் (கனடா), ஞான தனுஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற முத்து சாமிப்பிள்ளை - தையலாம்பாள் தம்பதிகளின் மூத்த மருமகளும், கிறிஸ்ரடாண் தம்பிராஜா (Rtd. Railway Head Guard) காலஞ்சென்றவர்களான திருமதிகள் ஜெயசோதி சின்னத்துரை (சிங்கப்பூர்), பரஞ்சோதி சுப்பையா (ஆசிரியர்), ஞானசோதி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புத் தங்கையும், திருமதி மங்கையர்க்கரசி நவரட்ணம், யோகநாதன் (கனடா), சரஸ்வதிதேவி மகேஸ்வரி, சந்திரசேகரம் (கனடா), இராஜநாதன் (கனடா), காலஞ்சென்ற நகுலேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை, இல. 339, K. K. S. ரோட், யாழ்ப்பாணம் இல்லத்தில் காலை 9-30 மணிக்கு நடைபெற்று துண்டி மெதடிஸ்ற் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்.

மு. சரஸ்வதிதேவி (தேவி)

339, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(1816)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

NESON'S
Funeral Undertakers
Caskets, Embalming, Funeral Coaches
No. 563, Hospital Road. Vembadi Junction, Jaffna

சஞ்சீவி சஞ்சிகை

26 - 08 - 1989 சனிக்கிழமை

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்!
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்.
நேசன்ஸ்
(வேம்படி சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# செயற்கை அரிசி - மா உற்பத்தி மூலம் எதிர்கால பட்டினி போக்க முயற்சி!

நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி நோர்மன் போர்லக் (Norman Borlaug) பசுமைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர்.

1983 இல் அமெரிக்க ரசாயன நிறுவனத்தின் ஒரு விஞ்ஞானக் கூட்டத்தில் பேசும் போது—

'அடுத்த 40 வருடங்களில் உலகெங்கிலும் அதிகரித்துக் கொண்டிருக்கும் மக்கள் தொகையின் தேவைகளுக்கு ஏற்ற வேகத்தில் உணவு உற்பத்தியை அதிகரித்தால்தான் மனித நாகரிகத்தைக் காப்பாற்ற முடியும்' என்றார்.

## 800 கோடி

கிறிஸ்துவுக்குப் பின்னர் 2015 ஆம் ஆண்டில் பூவுலகின் மொத்த சனத்தொகை எண்ணூறு கோடி ஆகப் போகிறது.

அதாவது இன்றைய சனத்தொகை இரட்டிப்பாகப் போகிறது.

இவர்கள் அனைவருக்கும் உணவு அளிக்க உலகின் உணவு உற்பத்தி மும்மடங்கு ஆக்கப்பட வேண்டும்.

இன்று உலகில் மொத்த சனத்தொகையில் அறுபத்தாறு சதவீதத்தோருக்கு மேற்பட்ட மக்களுக்கு சத்தில்லாத, பற்றாத உணவுதான் கிடைத்து வருகிறது.

பெரும்பாலான மக்கள் மூன்றும் உலக நாடுகளில் பட்டினி கிடக்கின்றனர்.

இந்தக் கணக்குப்படி பார்ப்பின், 2015 ஆவது ஆண்டில் 800 கோடி மக்களுக்கு உணவளிக்க இன்றைய உணவு உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரித்தால் மட்டும் போதாது.

## உணவு உற்பத்தி

சூரியனில் இருந்து வெளிப்படும் அல்ரு - வயலற் ஒளிக் கதிர்களின் தாக்கத்தில் இருந்து பூமியைக் காப்பாற்றுவது ஓஸோன் என்கிற படலம்.

பூமியில் காலநிலை மாற்றங்கள் ஒழுங்காக இடம்பெற இந்த ஓஸோன் படலமே உதவுகிறது.

இப்படலத்திற்கு ஆபத்து தற்போது ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் நச்சுவாயுக்கள் வளிமண்டலத்தை அடைந்து ஓஸோன் படலத்தைத் தாக்குகிறது.

இதனுல் ஓஸோன் படலத்தில் ஓட்டை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகப் பூமியின் காலநிலை மாற்றங்கள் சீராக இருக்க முடியாத நிலை ஏற்படும் ஆபத்து உருவாகியிருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## பூமி வெப்பம் அடைதல்

இம்மாறுதல்கள் மற்றும் பாதிப்புக்களால் பூமி வெப்பமடைந்து வருவதாகவும், கடல் நீர்மட்டம் உயரும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் சின்னஞ்சிறுதீவுகள் கடல்நீர் மட்டம் உயருவதால் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

கால நிலை மாற்றம் காரணமாக வரட்சி, பெருவெள்ளம் மற்றும் இயற்கை அழிவுகளை உலகம் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் இன்னும் முப்பது ஆண்டுகளில் 800 கோடி மக்களுக்கு எப்படி உணவளிப்பது?

## 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்

12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டான். அந்தக் காலத்தில் இருந்து இன்றுவரை உற்பத்தி செய்த உணவின் மொத்த அளவைவிட அடுத்த நாற்பதாண்டுகளில் உலக உணவு உற்பத்தி அதிகமாக இருக்கவேண்டும்.

இப்பிரச்சினைக்கு முதல் தீர்வு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதே. அதற்கான முயற்சிகள் அனைத்து நாடுகளிலும் இடம்பெறுகின்றன. பணக்கார நாடுகளில் ஆராய்ச்சி செய்து, அவற்றை ஏழைநாடுகளில் பரீட்சை செய்து பார்க்கிறார்கள். அதன் விளைவு தெரிய இன்னும் ஐம்பது வருடங்கள் செல்லும்.

அதுவரை விஞ்ஞானம் தான் உலக மக்களுக்குச் சோறு போடவேண்டும்.

## மகத்தான சவால்

இது ஒரு சவால். இது முடியாத காரியம், கைவிட்டு விடலாம் என்று ஒரு கோஷ்டியும் விஞ்ஞான சாதனைகள் மூலம் இது சாத்தியமே என்று இன்னெரு கோஷ்டியும் வாதாடுகிறது.

ஜனத்தொகை விரிவும் பட்டினியும் பற்றுக்குறையும் பரிணாம தத்துவத்தின், இயற்கையின் அம்சங்கள்; கையாலாகாதவர்கள் சாகட்டும், சாமர்த்தியம் உள்ளவர்கள் பிழைக்கட்டும் என்று ஓர் ஆணவம் நிறைந்த மேற்கத்திய சிந்தனை இருக்கிறத.

மற்றெரு முனையில் பிரான்ஸிஸ்பேக்கன் (Francis Bacon) சொன்னதுபோல விஞ்ஞானம் எப்படியாவது ஒரு வழி கண்டுபிடித்துவிடும்' என்ற அதீத நம்பிக்கையுள்ள கட்சி.

இவர்கள் சொல்வதெல்லாம், 'அண்மைக்காலத்தில் விஞ்ஞானம் செய்துள்ள அபார சாதனைகளைப் பாருங்கள்' விண்வெளி ரகசியத்தை உடைப்பதில், பிரபஞ்சத்தின் ஆரம்பங்களைக் கண்டுபிடிப்பதில்! அதுபோல இதற்கும் ஒரு வழி கண்டுபிடிக்கப்படும். மனிதன் தன் ஆடைகளைச் செயற்கையாக உற்பத்திசெய்யக் கற்றுக் கொண்டதுபோல தன் உணவையும் செயற்கையாக உற்பத்தி செய்யக் கற்றுக் கொள்ளும் நாள் வராமல் போகாது' என்கிறார்கள்.

## செயற்கை அரிசி?

இந்த இரண்டு முனைகளுக்கும் இடையில்தான் விடை இருக்கிறது என்று தோன்றுகிறது? அதாவது பட்டினியிலும் பலர் சாகப்போகிறோம்; அதே சமயம் விஞ்ஞான முறைகளில் உணவு உற்பத்தித் திறமையையும் அதிகரிக்கப் போகிறோம்.

எப்படி உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்?

ரசயான முறையில் சோதனைக் கூடத்தில் அரிசி, கோதுமை முதலான ஆதார உணவுப் பொருள்களைச் செய்து காட்ட இயலுமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் என்ன? கார்போஹைட்ரேட்டுகள், புரதங்கள் தானே? ஆதாரமாகப் பார்த்தால், இவை கார்பன், ஹைட்ரஜன், நைட்ரஜன்!

இயற்கையென்னும் ரசாயனக் கூடம் இவைகளை, தாவரங்களின் ஒளிச்சேர்க்கை (Photo Synthesis), மிருகங்களின் உடலில் உள்ள மெட்டபாலிஸம் (Metabolism) மாறுதல்கள் போன்ற மிகச்சிக்கலான முறைகளைக் கொண்டு உணவாக மாற்றுகிறது.

இதே முறைகளை நம் ஆராய்ச்சிச்சாலைகளில் கொண்டு வந்து மூலக்கூறுகளிலிருந்து மசால் தோசை செய்ய எத்தனை வருஷங்களாகும்?

இது அப்படி ஒன்றும் கற்பனைக் கனவல்ல. மூலக்கூறு உயிரியலில் இன்றைக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் பற்பல முன்னேற்றங்களில் இது சாத்தியமாகவே தோன்றுகிறது.

மேலும் மற்றெரு புரட்சி ஜீன் திருப்புமுறை (Gene Revolution) என்ற பெயரில் நடந்து கொண்டிருக்கிறது. அதாவது மூல அணுக் கூறுகளை (Molecule) வெட்டி ஒட்டும் வேலை.

அதன்படி, அரிசி, கோதுமை, உருளைக்கிழங்கு, வெள்ளரிக்காய் போன்றவைகளின் மொலிக்யூல் (மூல அணுக்கூறு)— ரகசியங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்திச் செயற்கை அரிசி, மா ஆகியவற்றை உற்பத்தி செய்வது.

இந்த ஆராய்ச்சியில் தற்போது விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இம் முயற்சி வெற்றியடைவதில்தான் உலகின் எதிர்காலம் தங்கியுள்ளது.

(எ - 4)

## கருத்துக் கலசம்

மயூரா

### வாய்மை எனப்படுவது...

வாயால் பேசப்படும் சத்தியம் — வாய்மை.

உள்ளம் உணர்ந்து உழைக்கும் சத்தியம் — உண்மை.

காயமாகிய (உடலாகிய) மெய்யினல் செய்கின்ற சத்தியம் — மெய்மை.

இப்படி மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினுலும் செய்யப்படும் சத்தியமே உண்மை என்பது தமிழர் வழக்கு. பொதுவாகப் 'பொய் சொல்லாமை' என்ற பொருளை இவை தந்தாலும் அவற்றுள் பொதிந்திருக்கும் தத்துவம் ஆழமானது.

'வாய்மை' என்பது என்னவென்றால் 'யாதொன்றும் தீமையில சொலல்' என்கிறார் வள்ளுவர்.

வாயினுல் யாருக்கும் தீங்கு ஏற்படக்கூடிய சொல்லைச் சொல்லாமல் இருப்பது வாய்மை ஆகிறது.

தீங்கு ஏற்படுத்தும் சொற்களைச் சொல்வது வாய்மையாகாது. ஆகவே எவருக்கும் தீங்கு ஏற்படக்கூடாது என்பதற்காகச் சிலவேளைகளில் — சத்தியத்திற்கு மாறாக — வாய்ச்சொல் பகர வேண்டியிருக்கிறது. இது வாய்மையாகுமா?

ஆம் என்கிறது வான்மறை.

இதே போன்று குற்றமில்லாத நன்மை பயக்கும் எனின் பொய் சொல்வதும் வாய்மையோடு சேர்ந்துவிடுகிறது.

'பொய்மையும் வாய்மையிடத்தே புரை தீர்க்கும் நன்மை பயக்கும் எனின்' என்று வள்ளுவரே உரைக்கிறார்.

புரை தீர்த்த நன்மை பயக்கும் என்பதை மனதினுல் உணர்ந்து - உண்மைக்கு மாறாக உரைப்பதும் வாய்மையாகி விடுகிறது.

இவ்வாறு வாக்கினுலும், மனதினுலும் சத்தியத்திற்கு மாறாக உரைப்பது சில சந்தர்ப்பங்களில் 'வாய்மை' ஆகி விடுகிறது.

ஆனுலும் அப்படியில்லாமல் வாய், மனம் ஆகிய இரண்டினுலும் சத்தியமே காத்து நிற்பது என்பது கஷ்டமானது.

இதற்கு மேலாக வாய், மனம் ஆகிய இரண்டோடு மூன்றுவதாக மெய்யையும் சேர்த்து மெய்யினுலும் மெய் காத்து நிற்பது என்பது அதைவிடக் கஷ்டமானது.

தனது மெய்க்கு - உடலுக்கு - ஊறு வந்தாலும் சத்தியம் காப்பேன் எனச் சாற்றி அதன்வழி விடாப்பிடியாக நிற்பது சாதனை தானே? மெய் வருத்தம் தரும் மெய்மை அது.

அரிச்சந்திரன், மகாத்மா காந்தி முதலிய சத்திய சீலர்கள் காத்த வாய்மை அதுதான்.

வாயால் வாய்மை பேசி, உள்ளத்தினுல் உண்மை உணர்ந்து, தனது மெய்யினுல் மெய்மை பேணுவது மெச்சத்தகுந்தது.

இவ்வாறு மெய்காத்து பொய் சொல்லாமல் இருப்பது போன்ற கீர்த்தி, பெருமை உலகில் வேறு எதுவுமே இல்லை.

★

# இதய குகை நடுவில் மனது லயம் பெற்று பரம சுகம் அடைவதே அநுபூதி நிலை!

ஆன்மா இறைவனுடன் ஒன்றுவது அநுபூதி எனப்படும். அப்படி ஒன்றுவதால் ஓர் அனுபவஞானம் உண்டாகும். கந்தரநுபூதி என்பது கந்தக்கடவுளுடன் ஒன்றுபட்டு அதனுல் விளையும் மெய் உணர்வாகும்.

'ஆசா நிகளந் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே'

என்று இந்நூலில் 43 ஆவது திருப்பாடலில் தெரிவிக்கப்படுகிறது. அநுபூதி அடைவதற்கு ஆசை தடையாக இருக்கிறது. இறைவனிடத்திலே கூட அன்புதான் வைக்க வேண்டும். ஆசை வைக்கக் கூடாது.

'ஈசனேடாயினும் ஆசையறுமின்கள்' என்று திருமந்திரம் கூறுகின்றது: நிகளம் - என்பது யானையைக் கட்டும் சங்கிலி - இதை விலங்கு என்றும் கூறுவர். இது இரும்பு வளையங்கள் பல சேர்ந்தது.

ஒவ்வொரு பொருளிலுமுள்ள ஆசை ஒவ்வொரு வளையமாகும். எல்லா ஆசைகளும் விடுபட்டு, ஆசைக் கோர்வையாகிய சங்கிலியில் இருந்து ஆன்மா விடுபட்டால் அது இறைவனுடன் ஒன்றுபட்டு விடும்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்று இதையே கூறுவர்.

துகளாவது - என்பது ஆசை பொடிப்பொடியாகப் போவதைக் குறிக்கிறது. இந்திராதி தேவர்களின் கால்களில் சூரன் இட்ட சங்கிலிகளை அறுத்து ஐயன் ஆசைச் சங்கிலியையும் விபூதியாக்கி விட்டான்!

ஆசையானது முற்றும் வலியிழந்தபின் தனக்குப் பேசா அநுபூதியாகிய மௌன நிலை எய்தியது என்று அருணகிரிநாதர் கூறுகின்றார். 'பேசா' என்றதை வாய் பேசாத என்று கொள்ளக்கூடாது.

'இதய குகை நடுவில் மனது லயம் அடைந்து உலகும் இறை உயிரும் ஒரு பொருள் என்றுணர்ந்து, நிராசை எனும் அமிர்தசஞ்சீவிரசம் பருகி; பதியிற் பதிந்திருந்து மௌனப் பெரு வெளியில் பரமசுகம் அடையும் நிலையே' பேசா அநுபூதி நிலை என்பது சுத்தானந்த பாரதியாரின் கருத்து.

## அறவாழ்வு

இறைவன் அறவாழ்வு வாழ்வோரிடத்தில் அன்பு வைக்கின்றன். அறவாழ்வின் மூலம் பக்குவப்பட்டோரிடத்தில் அருள் பாலிக்கின்றன்.

இரண்டும் சேர்ந்த நிலையே 'அன்பருள்'. 'நின்தன் பருளால் ஆசா நிகளம் துகளாகியது'. அதன் பின் 'பேசா அநுபூதி பிறந்தது' என்பது அருணகிரியார் நிலை.

ஆன்மாக்கள் அன்பின் வழியாக நடந்தால் இறைவன் அருளாரமுதைவாரி வழங்குவான். இன்ப நிலை தானே வந்து எய்தும். இது அருளாளர்களும், ஜீவன் முத்தர்களும் பெற்ற அனுபவப் புதையல்.

'பேசாத மோனநிலை பெற்றவர்க்கே நின்னருளாம்
வாசாம கோசர நதான் வாய்க்கும் பராபரமே' என்றார் தாயுமானுர்.

கந்தரநுபூதி என்ற சொல் மூன்று வகையாகப் பொருள்படும். அவையாவன, கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி; கந்தரால் அடையும் அநுபூதி, கந்தர்ன்கண் அடையும் அநுபூதி என்பனவாம்.

அருணகிரியார் வேலனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். 'அப்பனே! அடியேன் உமது பவளமணிய பாதமலரில் ஒரு மந்திர மலர் மாலையைச் சாத்துமாறு அருள வேண்டும்' என்றார்.

இந்த வேண்டுகோளின்படி ஒரு செஞ்சொல் மலர் மாலையை முருகனுக்குச் சாத்தினுர். இதை வெறும் இலக்கண அறிவினுல் மட்டும்



பாடினரில்லை. கந்தருடைய அநுபூதியைப் பெற்றே பாடினுர்.

## தாயுமானவர்

கந்தரநுபூதி வடிவத்தில் சிறியது, மகிமையில் பெரியது. இது மந்திர சாத்திரமாகும். இதன் பெருமையை உணர்ந்த தாயுமானவர்

'கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன,
எந்தையருள் நாடி இருக்கு நாள் எந்நாளோ' என்றார்.

அருணகிரிநாதர் 500 ஆண்டுகளுக்கு முன்னர் திருவண்ணுமலையில் திரு அவதாரம் செய்தார். இளமைப் பருவத்தில் சிற்றின்பத்திலே உழன்றுர். அதனுல் வறுமையும் குட்ட நோயும் அவரை வாட்டின.

இதனுல் வெறுப்புற்ற அவர் அருணை வட கோபுரத்தின் உச்சியில் ஏறிக் கீழே குதித்துத் தற்கொலை செய்ய முயற்சித்தார். அச்சமயம் முருகன் அவரைத் தடுத்தாட்கொண்டு

'சும்மாயிரு சொல்லற' என்னும் மௌன உபதேசத்தை அருளினுர்; சும்மாயிரு என்று உபதேசித்த மாத்திரத்தில், சுட்டிய நின்ற உலகம்யாவும் மறைந்து தானே அதுவாக எங்கும் நிறைந்து அவருக்குக் காட்சியளித்தது. கந்தரநுபூதி 12 ஆவது பாடலிலே இந்தக் காட்சியின் மாட்சியை

'சும்மாயிரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே'

என்று பாடுகின்றுர். அதாவது சொல்லொழிந்து சும்மாயிரு என்று சொன்ன மாத்திரத்திலேயே உலகப்பொருள் ஒன்றையும் அறியாது நின்றேன், இது என்ன அதிசயம்! என்பது பொருள்.

'சும்மா இருக்கின்ற திறமரிது' என்பர் ஞனியார் அன்றியும்

'சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்து சும்மாவிருக்கும்
எல்லையுட் செல்ல வெனை விட்ட வா'

என்று கந்தர் அலங்காரம் கூறும். அதாவது சொல்லுதற்கு இனி ஒரு பொருளும் இல்லை என, மனம் வாக்குக் காயங்களின் செயல்களெல்லாம் நீக்கப்பெற்று மௌனமாயிருக்கும் இடமாகிய அருள் நிலைக்கண் சென்று நிலை பெற்றிருக்க என்னை விட்ட முறைமை என்ன வியப்பாக இருக்கிறது - என்பதாம்.

சொல்லற்ற இடத்தில் பொருள் ஏது? எனவே 'சும்மாயிரு சொல்லற என்றலுமே' பொருள் ஒன்றும் அறிந்திலனே - இது காண்பான், காட்சி காட்சிப் பொருள் என்ற மூன்றும் அற்று இறைவனுடன் அத்துவதமாய் நிற்கும் பரிபூரண மோன நிலையாகும்.

இதை உன்னுந்தோறும் உள்ளம் குளிரும். உணர்வு மிளிரும். அஞ்ஞானம் தளரும், மெய்ஞ்ஞானம் வளரும். அநுபூதியாகிய மணிமாலையில் இது ஒரு மாணிக்க மணியாகத் திகழ்கிறது.

'சும்மாயிரு சொல்லற' என்று மௌன உபதேசம் பெற்ற பின்னர் அருணகிரியார் சிவஞானச் செல்வராயினுர். முத்தமிழால் வைதாரையும் வாழவைத்த 'முருகன்' முத்தைதரு' என்று முதலடி எடுத்துக் கொடுத்தான். அன்று முதல் பாடிய பாடல்களின் தொகுப்பே திருப்புகழ் எனப் பெயர் பெற்றது.

அருணையில் அருணகிரியாரின் 'திதத் தித்த' என்ற கந்தரந்தாதிப் பாட்டிற்குப் பொருள் கூறத் தெரியாமல் வில்லி புத்தூரர் தோல்வி அடைந்தார். எனினும் அவருடைய கர்வத்தை அடக்கி அவரைத் திருத்தினுர்.

பின்னர் சம்பந்தாண்டான் எனபவரோடு வாதம் செய்து 'அதல சேதனராட' என்ற பாடலைப்பாடி முருகவேளை மயிலின்மீது வரவழைத்து வெற்றியடைந்தார்.

இறுதியாகக் கிளி உருவில் பொன்னுலகஞ் சென்று கற்பக மலர் கொண்டுவந்தார். அக்கிளியுருவிலேயே ஆறுமுகன் திருத்தோளில் அமர்ந்து கந்தரநுபூதி இயற்றிப் பின்னர் அவனடியிற் கலந்து முத்தி பெற்றுர்.

'உருவாய் அருவாய்
உளதாய் இலதாய்
மருவாய் மலராய்
மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்
கதியாய் விதியாய்
குருவாய் வருவாய்
அருள்வாய் குகனே'
- கந்தர்அநுபூதி

- நா. க. சண்முகநாதபிள்ளை -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது ஈழத் தமிழருக்கு மிகப்பெரும் இழப்பாகவே முடியும்!

**அப்பாத்துரையாரின் புதிய ஆலோசனைகள்:**

'இதே சீர் இருத்தத்தை இன்னும் சற்று விரிவுபடுத்துவதானால், மெய்யுடன் உ, ஊ சேருமிடங்களில் வரும் குறியீட்டையும் ஒரே வழிப்படுத்தலாம். கூடுமானால் ஸு, ஷு, ஹு என்பவற்றிலும் ஸூ, ஷூ, ஹூ என்பவற்றிலும் கையாளும் வடிவத்தையே மேற்கொண்டுவிட்டால் (கு = க‌ு, கூ = க‌ூ) அச்சுக்களில் இருபதுக்கதிகமாகக் குறைவு ஏற்படும். சுழியாத 'உ' சுழியிட்ட 'உ' ஆகியவற்றைத் தலைகீழாக்கி உயிர்மெய்க் குறியீடுகளாக்கி விட்டால் ஆதாயம் இன்னும் மிகும். உருவமும் செயம் உடையதாகும். படிப்பவர்களுக்கும் எழுதுபவர்களுக்கும் எகரத்திற்கான கொம்புக் குறியீட்டை எழுத்துக்களுக்கு முன்னால் சேர்ப்பதற்குப் பதிலாகப் பின்னால் சேர்த்து 'கெ' என்பதற்குப் பதில் 'கெ' என்றெழுதுவதுகூட இயற்கை நெறியை ஒட்டிய சீர்திருத்தமேயாகக்கூடும் என்று எண்ணுகிறோம்.'

(ஷெ நூல்-பக்: 122-123)

**வீரா. இராசகோபாலன் தரும் ஆலோசனைகள்:**

மேலே குறித்தவற்றோடு வீரா. இராசகோபாலன் மேலும் சில ஆலோசனைகளைத் தமது '<u>தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் புரட்சி</u>' என்ற நூலிலே தந்துள்ளார். அவற்றிலிருந்து சிலவகை மாதிரிகள்.

......மாற்றம் வேண்டும என்பது தெளிவாகின்றது: முடிந்த முடியாத ஏதேனும் வர அரசினர் ஒரு குழுவை அமைத்தல்வேண்டும்.

(—தமிழ் எழுத்துச் சீர் திருத்தப் புரட்சி. பக்:19)

பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்களின் கருத்து ஏற்கப்பட்டதோ, கைவிடப்பட்டதோ என்பது தெரியாது. எனினும் தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தத்தினைச் சட்டமாக்கிவிட்டது. ஆனால் தமிழகத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் மேலே காட்டிய எல்லா மாற்றங்களும் கையாளப்படுவதில்லை என்பது மட்டுமே தெரிகின்றது. <u>னா, றா, ணா, னை, றை, ணை</u> என்ற சிறிய மாற்றங்களே கையாளப்படுகின்றன. மேலதிகமான சிக்கல்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்துவதால் தங்களின் வாசகர் தொகை குறையும் என்று அவை கருதியிருக்கலாம்.

**தட்டெழுதிக்கான (TYPE W ITE) எழுத்து மாற்றங்கள்**

கணனிகளும், புதிய அச்சுக் கோப்பு முறைகளும் அறிமுகமாகி வரும் இக்காலகட்டத்தில், தட்டெழுதியின் பயன்பாடு குறைந்துவரும் என்பது உண்மையே. அவ்வாறுயின் தட்டெழுதிக்காக எழுத்துச் 'சீர் திருத்தத்தைக்' கொண்டு வருவது கருத்தற்றதே. எனினும் வளர்முக நாடாயுள்ள எம் நாட்டில் இன்னமும்




(இவைபோன்றே உயிர்மெய்களிலே திருத்தம் மேற்கொள்ளலாம்)

ஹி, ஸி, ஷி, ஜி, க்ஷி:
ஹீ, ஸீ, ஷீ, ஜீ, க்ஷீ இவ் வட மொழி எழுத்துக்களுக்கு ஷெ மாற்றம் பொருந்தும்.
(தமிழ் எழுத்துச் சீர்திருத்தப்புரட்சி. பக்: 44,46,47,48)

தமிழ் தட்டெழுதிக்கே தட்டுப்பாடு நிலவுகையில் தட்டெழுதிக்கென்று எழுத்து மாற்றங்களை மேற்கொள்வதைக் கைவிடுவதா என்ற கேள்வி எழலாம். அஃது எவ்வாறுயினும் தட்டெழுதிக்கான எழுத்துமுறை மாற்றம் பற்றிச் சிந்தித்து அதற்கேற்பவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**கொடுமுடி.எஸ். சண்முகம் தரும் ஆலோசனைகள்:**




THE EXISTING TAMIL SCRIPT TO SUIT MODERN REPROGRPHY AND SCIENCE MACHINES, KODU - MUDI S. SHANMUGAM M E., D S. S., M I. E)

இங்கு தரப்பட்டுள்ளவை மூவருடைய ஆலோசனைகள் மட்டுமே. இன்னும் பலர் தத்தம் சிந்தனை சென்ற போக்கிலே ஆலோசனைகள் வழங்கி இருக்கலாம். இத்தகைய தனி ஆலோசனைகளிலும் கூட்டான சிந்தனையும் முயற்சியுமே வேண்டப்படுவனவாகும். இதுபற்றிப் பன்மொழிப் புலவர். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கருத்துச் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

'ஆய்தம் போக 30 ஒலி எழுத்துக்களே பழந்தமிழில் உண்டு. இதற்குமேல் வரி எழுத்தில் வருவான் ஏன்? 'க ஆல ஆங க அட அ ந த அ த அம இழ' (காலங் கடந்த தமிழ்) என்பதனைச் சுருக்க முயன்றதில் ஆ என எழுதாது ா எனவும் இ என எழுதாது ற எனவும் எழுதினர். இப்படியே பிறவும். ஆனால் நாளடைவில் குழப்பத்திலும், பெருக்கத்திலும் முடிந்தது. இவற்றைத் தவிர்ப்பதே நம் தொண்டு. இருப்பனவற்றை வைத்து முயல்வதே சிறப்பு.

'புதியன புகுத்தும்போது, ஒவ்வொருவர் ஒவ்வொன்று கூறுகின்றனர். இதுவே இப்பொழுதுள்ள பெருங்குழப்பம். இங்கேதான் 'கூடி முடிவு செய்தல்' என்ற கொள்கையைப் பின்பற்றவேண்டும்......

இவற்றுள் கொடுமுடி சண்முகம், திருவாட்டி சாலினி இளந்திரையன் ஆகியோருடைய ஆய்வுக்கட்டுரைகள் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கன. சாலினி இளந்திரையனின் ஆய்வு முடிவாக அவர் வெளியிட்டுள்ள 'தமிழ்த்தட்டெழுதி விசைப்பலகைப் படலத்தினை இங்கு மாதிரிக்காகத் தருகின்றேன்.

மேலே கட்டுரையில் காட்டிய திருத்தங்களுக்குப் பிறகு தமிழ்த் தட்டெழுதியின் விசைப்பலகை'



**எழுத்துமாற்றத்தின் வேறு இரு நிலைகளும் காரணங்களும்:**

தமிழிலுள்ள ஐ, ஔ என்ற ஈருயிர் எழுத்துக்களும் முறையே அஇ, அஉ என்பவற்றின் கூட்டொலி எனத் தொல்காப்பியர் கருதினார். அவர் பின்வந்த வீரசோழிய ஆசிரியரான புத்தமித்திரனார் அவற்றுக்கு மாற்றொலிகளாக முறையே 'அய்', 'அவ்' என்ற இரண்டையும் கொள்ளலாம் என்றார். பின்னவரின் கருத்துப்படி ஐ, ஔ கையாளும் இடங்களிலெல்லாம் அய், அவ் என்பவற்றைக் கையாண்டு ஐ, ஔவை உயிரெழுத்து வரிசையினின்றும் நீக்கிவிடலாம் என்ற கருத்தினையும் சிலர் கொண்டுள்ளனர்.

எனவே ஐ, ஔ என்ற ஈரெழுத்துக்களும் தமிழ் நெடுங்கணக்கிலே கட்டாயமாக இடம்பெறவேண்டுவனவே. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் 'சட்டமாக்கப்பட்ட பொழுது 'ஐ', 'ஔ' நீக்கப்படா என்று எம். ஜி. ஆர். உறுதியளித்ததும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதே.

(த.எ. சீ. தி புரட்சி. பக்:10)

2. ஆங்கிலத்திலே கையாளப்படும் ரோமன் லிபியை ஏற்றுக்கொண்டு தமிழ் நெடுங்கணக்கினை முற்றாகக் கைவிடு

> தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் இலங்கையிலும் அமுல் நடத்த ஏற்பாடாகி வருகிறது.
>
> அரசு மட்டத்தில் சட்டம் கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது: நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டமூலத்தைக் கொண்டுவரப்போவதாக தமிழ் மொழி விவகாரத்துணை அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அறிவித்து இருக்கிறார்.
>
> இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சீர்திருத்தத் தமிழ் நடைமுறையில் இருக்கிறது.
>
> இலங்கையில் அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதால் நாம் அடையப்போகும் நன்மைகள். தீமைகள் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன.
>
> தமிழறிஞர் சொக்கன் அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் உருவான விதம், இது பற்றிய தனது கருத்து ஆகியவற்றை விரிவாக இக்கட்டுரையில் விவரித்திருக்கிறார்.
>
> கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

ஐ, ஔவை நீக்குவதால் நன்மைக்குப் பதில் சிக்கலே மிகும் என்பது பலரதும் முடிபு.

1. (i) செய்யுளில் 'ஐ' சீரின் முதலில் வரும்போது பெரும்பாலும் நேரசையாகவே கொள்ளப்படும்.

நேர்/நேர்

உ+ம்:-
ஐயா எனவோங்கி ஐ/யா

(ii) செய்யுளிலே சீரின் அடையிலே மெய்யோடுகூடி உயிர் மெய்யாகும்பொழுது அது நிரையசைக்கு உறுப்பாகிவிடும்.

உ+ம்:-
அன்னந் தனைப்பிடித் தாயிழையார்
நிரை / நிரை
தனைப் / பிடித்

(iii) ஐக்குப் பதில் 'அய்' கையாளப்படின் அது எக்காலத்தும் நேரசையாகவே அமைவதால் செய்யுள்களிலே தளைதட்டும் நிலையை அஃது ஏற்படுத்தும்.

(iv) அன்றியும் ஐக்கிய ஓசைப்பண்பும் இல்லாது போகும்.

உ+ம்:- மன்னர் விழய்ய விழய்யாமை மன்னரான் மன்னிய ஆக்கந் தரும்.

(v) 'ஐ' வரும் இடங்களில் 'அய்' வந்தமைந்த சொல் புணர்ச்சிக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களிலே, உரிய சொல்லிற்குப் பதில் வேறொரு புதுச்சொல் உண்டாக வழி சமைக்கும்.

உ+ம்:-
பனை + அடி = பனையடி
பனய் + அடி = பனயடி
பனைக்குப் பதிலாகப் பனய் என்ற சொல் வந்துள்ளதைக் காண்க.

உ+ம்:-
கலை+ஞ்+அன் = கலைஞன்
கலய்+ஞ்+அன் = கலய்ஞன்
கலைஞனுக்குப் பதிலாகக் 'கலய்ஞன்' என்ற சொல் வந்தமை காண்க.

இத்தகைய பிழைபாடும் 'ஔ' வருமிடங்களிலும் ஏற்படலாம்.

தல் வேண்டும் என்பதோர் கருத்தும் நிலவுகின்றது. இதனால் விளையக்கூடிய நன்மைகளாக எதிர்பார்க்கப்படுகின்றன.

[i] 247 எழுத்துக்களுக்குப் பதிலாக 26 எழுத்துக்களைக் கற்பது மாணவரின் சிரமத்தைப் பெரிதும் குறைக்கும்.

[ii] தட்டெழுதியைப் பயன்படுத்துவதும் எளிதாகும்.

[iii] ஐரோப்பிய மொழிகளைக் கற்கையில் புதியனவாக எழுத்துக்களைக் கற்க வேண்டிய தேவை இராது. இந்தக் கருத்திற்கு எதிராகப்

## - சொக்கன் -

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை கூறுவன குறிப்பிடத்தக்கவையாகும்.

1. X, F, Z, B, G, D, Q, W என்ற எட்டெழுத்துக்களும் தமிழுக்கு வேண்டாதவை. ஆனால் ரோமன் எழுத்துமுறையில் இல்லாத எழுத்துக்களாகத் தமிழில், உயிர்நெடில்கள் 7, வல்லினத்தில் க, ட, ற என்ற 3, மெல்லினத்தில் ங, ஞ, ண, ன என்ற நான்கு இடையெழுத்தில் ழ, ள ஆகிய 2 ஆகப் பதினறு உள்ளன. இவ்வெழுத்துக்களுக்குப் புள்ளிகள், கோடுகள் முதலானகுறியீடுகளை ரோமன் எழுத்துக்களின் மேலும், கீழும் இட்டாலும் அது மயக்கத்தை எழுத்துப்பிழைகளையும் மிகுவிப்பதாகும்; எழுதுவதிலும் வாசிப்பதிலும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க நேரும். அன்றியும், தமிழில் சில எழுத்துக்களால் குறிக்க வேண்டிய சொல்லிற்குப் பல எழுத்துக்களைக் கையாள வேண்டிய நிலையும் உருவாகும்.

உ+ம்:-
இருக்கிறது - Irukkiratu.

மேலும் உயிரும் மெய்யும் ஒன்றுகக்கூடி உயிர்மெய்யாக உச்சரிக்கப்பழகிய எமக்கு இரண்டினையும் வேறுவேறுக நோக்கிப் பின் ஒன்றுகூட்டி உச்சரிப்பதும், எழுதும் பொழுது இரண்டாகப் பிரித்து எழுதுவதும் தேவை அற்றன: சிரமம் தருவன.

**தமிழில் இல்லாத பிறமொழி எழுத்தொலிகளுக்கு வேண்டிய தமிழ் எழுத்துருவாக்கம்:**

B, F, G முதலாம் ஆங்கில எழுத்துக்களின் ஒலிப்பினைப் புலப்படுத்தும் தமிழ் எழுத்துக்கள் இல்லாமையால் அத்தகைய எழுத்துக்களைத் தமிழுக்குப் புதியவாக அறிமுகம் செய்தல் வேண்டும், ஏனெனில் விஞ்ஞானம் தொழில்நுட்ப அறிவியல் சார்ந்த புதிய சொற்கள் பல வந்து சேரும்

தமிழ் தன்னுள்ளே சேர்த்து வளர்வது அவசியமாகும் என்ற குரலும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இந்தக் குரலுக்கு 1979 இலேயே பேராசிரியர் கா. இந்திரபாலா தக்க பதில் இறுத்து விட்டார். அவர் கூறுவதாவது:

'பிறமொழிகளுக்குரிய சில ஒலிகள் தமிழில் இல்லை என்பதற்காக அந்த ஒலிகளைக் குறிப்பதற்காக புதிய எழுத்துக்களைத் தமிழில் உருவாக்க வேண்டும் என்று கூறுவது பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு மொழிக்கும் இயல்பாகவே சில ஒலிகள் உள்ளன. சில இல்லை. பிறமொழிகளில் உள்ள ஒலிகள் எல்லாம் எமக்குத் தேவை என்று கூறமுடியாது. எங்களுக்கு முக்கியமானதாகத் தோன்றுகின்ற ஒலிகள் வேறு சில மொழிகளுக்கு இல்லாதிருந்தும் அவை முன்னேறியுள்ளன. உதாரணமாக இன்று ஜப்பானிய மொழி மிக முன்னேற்றமான விஞ்ஞானத் தேவைகளுக்குரிய மொழியாக மாறியுள்ளது: ஆனால் எங்களுக்கு அத்தியாவசியமானதாகத் தோன்றும் 'ல' என்ற ஒலியைக் குறிக்கும் எழுத்து ஜப்பானிய மொழியில் இல்லை'.

(—கலாவதி- 1979, மறுபிரசுரம் வாரமுரசொலி 02 - 07 - 89)

எமது இலக்கண ஆசிரியர் வடமொழிச் சொற்களைத் தமிழிலே கையாள வகுத்துத் தந்த தற்சம, தற்பவ முறைமைகளைக் கையாள்வதன் மூலம் பிறமொழி ஒலிக்கான எழுத்துக்கள் தமிழில் இல்லையே என்ற குறைபாட்டினை, ஏக்கத்தினை நாம் போக்கிக் கொள்வதே தக்கது என்று கூறத்தோன்றுகின்றது.

**மாற்றத்தை ஏற்பதா? விடுவதா?**

தமிழ் 'எழுத்துச் சீர்திருத்தம்' என்பது அந்தச் சொற்றொடருக்கான முழுப்பொருளமைதியுடனும் கையாளப்படவில்லை என்பதை முன்னரே குறிப்பிட்டேன். இக்காலத் தேவைக்கு ஏற்பச் சில எழுத்துக்களிலே சிறிய மாற்றங்கள்தாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (தட்டெழுதிக்கான எழுத்துக்களாகக் கூடிய மாற்றங்கள் செய்யப்பட்டதை நான் மறந்துவிடவில்லை.)

ஏறக்குறைய நாற்பதாண்டுகளுக்கு முன் 'இந்துசாதனம்' பத்திரிகையில் 'ஈ' என்ற எழுத்து 'இo' என அச்சிட்டதை யாரும் எதிர்க்கவில்லை. மாணவருக்குரிய பாலபாடங்களிலும் 'இo' கையாளப்பட்டது. ஆனால் இம்மாற்றம் கவனிப்பாரின்றியே இயற்கை மரணம் அடைந்துவிட்டது.

ஆனால் இன்று ஏற்பட்டுள்ள மாற்றம் அரசு அங்கீகாரம் பெற்றுத் தமிழகம் எங்கும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது. ஆகவே இம்மாற்றம் மேலும் சிலகாலத்துக்கு நிலைபெறுவதை எம்மால் தடுத்தல் இயலாது. 'நாடாளுமன்றத்தில் விரைவில் எழுத்துச் சீர்திருத்தம்' பற்றிய அறிக்கையை இந்துசமய கலாசார தமிழ் விவகார அமைச்சர் பி. பி. தேவராஜ் சமர்ப்பிப்பார் என்பதை நோக்கும் பொழுது எமது நாட்டிலும் இம்மாற்றம் விரைவில் செயற்படத்தொடங்கும் என்பதற்கு ஐயமில்லை

மாற்றங்கள் எப்பொழுதும் தீமைக்கே வழிகோலும் என்று நாம் அஞ்சவேண்டியதில்லை.

'காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாறிடுந் தோற்றம்'

என்பதை நாம் மறந்தால் முன்னேற்றப்பாதையில் நாம் வெகுதூரம் பின்தங்கிவிடுவோம்.

இன்று ஏற்படும் தமிழ் எழுத்து மாற்றத்தால் (சிறிய மாற்றத்தால்) சங்ககாலம் தொட்டு அண்மைக்காலம் வரை தோன்றிய பேரிலக்கிய இலக்கணங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள் யாவும் படிப்பாரற்றுப் பாழ்போகும் என்று நாம் பயப்படுவது வீண்.

'செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னோலேட்டிற் பல்துளைத்து வண்டு மணலுழுத வரியெழுத்துக்களையும் ஆராய்ந்து முந்து நூல்கண்டு பிரசுரித்த தமிழர் பரம்பரைக்குச் சில எழுத்து மாற்றங்களை அறிந்து கற்கவேண்டியனகற்பது சிரமமாக இருக்காது என்பதே உண்மை. உருசியமொழியையும் நோர்விஜியன் மொழியையும் ஓரிரண்டாற் கற்று உயர்கல்வியிலே தேர்வுபெறும் தமிழர் தம் ஆற்றலை நாம் ஏன் குறைத்து மதிப்பிடல்வேண்டும்.

அன்றியும் சங்க நூல்கள் முதல் இன்றுள்ள நவீன இலக்கியங்கள் வரை மிகப் பெருமளவு நூல்கள் தமிழகத்திலிருந்தே வெளியாகின்றன. அவற்றை எம் தேவைக்கேற்ப வழக்கில் உள்ள தமிழ் எழுத்துக்களிலே நாம் எம் நாட்டில் அச்சிட்டு வெளியிடுவதென்பதும் நடக்கக் கூடிய காரியமன்று.

எனவே பழையனவாயினும் சரி, புதியனவாயினும் சரியே எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்காத நம் பரம்பரை இவற்றை இழக்கவேண்டிய நிலையும் உண்டாகும். இதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

இவ்விடயத்தில் தாய் சேய்க்கு வழிகாட்டுவது என்பது முடியாத காரியம்.

கறந்தபால் முலையேறப் போவதில்லை. எனவே மாற்றங்களை நாம் வெறுத்தாலும் காலதேசவர்த்தமானத்தை நோக்கியாவது ஏற்றுக்கொள்வதே வழி. இல்லையேல் இழப்பு மாற்றம்கொணர்ந்தவர்களுக்கு அன்று: எமக்கே என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. ★


### ✱ குறிப்புக்கள்

★ 'ம' என்ற எழுத்தின் பழைய வடிவம் 'ப' என்ற எழுத்தின் நடுவில் (உள்ளே) புள்ளியிடலாகும். சென்ற வாரக் கட்டுரையில் 'ப்' என்ற எழுத்தே தவறுதலாக 'ம' வுக்குக் கையாளப்பட்டுள்ளது.

★ இந்து சாதனம் பத்திரிகை ஐம்பதுகளில் 'ஈ' யின் வடிவத்தை 'இ' என்ற சொல்லின் விசிறி முனையில் ஒரு வட்டத்தை ஆக்கி கையாள முனைந்தது.

✱ தமிழகப் பத்திரிகை சுதேசமித்திரன் கி, கீ முதலான எழுத்துக்களின் மேற் சுழிகளை தனி அச்சுக்களாக்கிக் கையாண்டது.

இந்த மூன்று அம்சங்களும் வரைபடமாகக் கீழே தரப்படுகிறது.



★ சென்றவாரக் கட்டுரையில் சொல்லாக்கத்துக்குப் பயன்படா எழுத்துக்கள் 49 என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதை 47 எழுத்துக்கள் என்று திருத்தி வாசித்துக் கொள்ளுங்கள்.

— (ஆ-ர்)

## பொது அறிவுப்போட்டி இல. 31

1. எளிதில் வெல்லமுடியாத விரோதி? ... ... ... ... ... ...காமம் / கோபம்
2. தந்தைக்குக் குருவான பிள்ளை? ... ... ... ... ... ... கண்ணன் / கந்தன்
3. நாம் ஒருமுறை கண்ணிமைக்கும் நேரம்? ... ... 1/40 விநாடி / 1/50 விநாடி
4. குழந்தைக் கவிஞர் யார்? ... சுப்பிரமணியபாரதியார் / அழ வள்ளியப்பா
5. கடலினும் பெரியது எது? ... ... ... ... ... ... ... பொறுமை / கடமை
6. பெண்களை மனத்தாலும் தீண்டாதவர்? ... ... ... ஸ்ரீ இராமர் / பீஷ்மர்
7. தத்துவ ஞானிகளில் ஒருவர்? ... ... ...அரிஸ்ரோட்டில் / ஜூலியஸ் சீஸர்
8. மனதைக் கொள்ளைகொள்வது? ... ... ... ... ... ... மலர்கள் / மழலைகள்
9. உலகில் மிகப்பெரிய ஜனநாயகநாடு? ... ... ... ... அமெரிக்கா / இந்தியா
10. இம்முறை உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நிகழும் நாடு? ... ... ... ... மொரீசியஸ் / மலேசியா
11. சொற்களைவிடச் சிறந்தது எது? ... ... ... ... .. மௌனம் / செயல்
12. இதற்கும் சுடும் தன்மையுண்டு? ... ... .. ... ... ... சொல் / நெருப்பு

பெயர்:- ..................................
விலாசம்:- ..................................
..................................

பொது அறிவுப்போட்டி இல: 31
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

...................... இங்கே வெட்டுக ......................

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது: உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 06 - 09 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உயிர்க் கடிகார ஆராய்ச்சியில் ஈடுபட்ட முதலாவது தமிழ்ப் பெண்மணி கீதா

உயிர்க்கடிகார ஆராய்ச்சிக்காக வெளிஉலகத் தொடர்பில்லாத அறைக்குள் புகுந்த முதல் இந்தியப்பெண் கீதா. 35 நாட்களுக்குப்பின் கடந்த ஜூன் மாதம் 8 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வெளி உலகுக்கு வந்தார்.

மனித மூளை மற்றும் உடலில் உள்ள உயிர்க்கடிகாரங்களின் செயற்பாடுகள் குறித்து மதுரை காமராஜ் பல்கலைக்கழக குரோனு உயிரியல் துறையில் டாக்டர் எம். கே. சந்திரசேகரன் தலைமையில் ஆய்வு நடைபெற்று வருகிறது.

இதனுல் உயிர்க்கடிகார ஆய்வு நடைபெறும் 6 நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற சிறப்பைப் பெற்றுள்ளது.

உயிர்க்கடிகார ஆய்வுக்காக மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட வெளி உலகத் தொடர்பில்லாத ஒரு அறைக்குள் டாக்டர் மாரிமுத்து என்பவர் முதன் முதலில் சென்ருர்.

அவருக்குப் பின் 6 பேர் இந்த அறைக்குள் சென்றுள்ளனர்.

தற்போது எஸ்: கீதா என்ற பெண் இந்த அறைக்குள் கடந்த மே 4 ஆம் திகதி மாலை 3 மணிக்குச் சென்ருர்.

இந்த ஆய்வுக்காக வெளி உலகத் தொடர்பில்லாத அறைக்குள் சென்ற முதல் பெண் டாக்டர் பாட்ரீசியா டி கோர்சி. இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

1962 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடந்த உயிர்க்கடிகார ஆராய்ச்சிக்காக வெளி உலகத் தொடர்பில்லாத அறைக்குள் புகுந்தார்.

இந்தியாவில் உயிர்க்கடிகார ஆய்வுக்காக வெளி உலகத் தொடர்பில்லாத அறைக்குள் புகுந்த முதல் பெண் கீதா தான்.

இவர் கோவையைச் சேர்ந்தவர். எம். எஸ். சி. எம். பில் படித்தவர். பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகக் கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதிதான் சேர்ந்தார்.

மாலை 5 மணிக்கு வெளியே வந்தார். அறையை விட்டு வெளியே வரும் வரை கீதா வெளியே வருவது குறித்து அவருக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

சிறிது நேரத்திற்கு முன் இண்டர்காமில் தொடர்பு கொண்டு வெளியே வரும்படி அழைக்கப்பட்ட பின்தான் வெளி உலகுக்கு வருவதை அவர் அறிந்தார். ★

## எய்ட்ஸ் குழந்தைகளுக்கு பரவுவதை தடுப்பது பற்றி ஆராய்ச்சி

எய்ட்ஸ் நோயினுல் பாதிக்கப்பட்ட ஒரு தாயிடமிருந்து, அவளது குழந்தைகளுக்கு எவ்விதம் அந்த நோய் பரவுகிறது என்பது பற்றி பிரிட்டிஷ் மற்றும் ஆபிரிக்க நாடான ஸயரே நாட்டின் டாக்டர்கள் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஆய்வு மூன்று ஆண்டுக் காலம் நடைபெறும்.

எய்ட்ஸ் நோய் கொண்ட தாயிடமிருந்து எந்த அளவுக்குக் குழந்தைக்கு அந்த நோய் பரவுகிறது: தாயிடமிருந்து அந்த வைரஸ் தாய்ப்பால் மூலம் குழந்தைக்கு வருகிறதா என்று அவர்கள் ஆராய்வர்.

இந்த விஷயம் போதுமான தாக ஆராயப்படவில்லை என்று இந்த ஆய்வுத் திட்டத்திற்குத் தலைமை வகிக்கும் எடின்பரோ பல்கலைக்கழகக் குழந்தை நலத்துறையைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் கட்டிங் தெரிவித்திருக்கிருர்.

ஸயாரே நாட்டின் தென் பகுதியில் ஓரிடத்தில் இந்த ஆய்வு நடத்தப்படும் எய்ட்ஸ் நோயினுல் பாதிக்கப்பட்ட சுமார் 100 தாய்மார்கள் இந்த ஆய்வுக்கு உள்ளாவர்.

இந்த ஆய்வின் ஒரு பகுதியாக குழந்தைகளுக்குப் புதிய ரக சின்னம்மை வாக்ஸின் (Vaccine) அளிக்கப்படும்.

இதன் மூலம் உடலில் ஏற்படும் எதிர்ப்புத்திறன் பின்னர் எய்ட்ஸ் நோய் முற்ருமல் தடுக்க உதவுகிறதா என்று ஆராய்வதே இதன் நோக்கம். ★

## பொன்மொழி

நல்ல மகிழ்ச்சியாக வாழ்வதற்கு முயல்வதைக்காட்டிலும் 'மகிழ்ச்சியாக நாங்கள் வாழ்கின்ருேம்' என்பதைப் பிறர் நம்பும்படியாகச் செய்வதற்காகத்தான் பலர் அதிகமாக முயற்சி எடுத்துக்கொள்கிருர்கள்.

— கோல்டு ஸ்மித்

## நச்சுச் சுழல்வாதம் என்ருல் என்ன?

கோழியில் இருந்து முட்டை வந்ததா? அல்லது முட்டையில் இருந்து கோழி வந்ததா?

இந்தவாதம் எல்லாருக்கும் தெரிந்த ஒன்றே.

இந்தவாதம் முடிவற்றது. இதில் உள்ள சிக்கல் இதுதான். இரண்டு கூறுகள் இருக்கின்றன.

முதலாவது கோழி: இரண்டாவது முட்டை.

இவற்றில் எது காரணம் எது காரியம் என்று நம்மால் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

கோழி காரணம்: முட்டை காரியம் – இது சரிதான். முட்டை காரணம். கோழி காரியம் – இதுவும் சரிதான்.

இரண்டு கூறுகளுக்கு இடையே நம்மால் காரண உறவினை நிலைநிறுத்த காரிய முடியாதபோது 'நச்சுச்சுழல்' தோன்றுகின்றது.

இப்படிப்பட்ட வாதத்தை அறிவியல்ல் 'நச்சுச் சுழல்' (Vicious Circle) வாதம் என்கிருேம்.

இம்மாதிரியான 'நச்சுச் சுழல்' வாதம் பொருளாதாரத்திலும் உண்டு.

மக்கள் பெருக்கத்திஞல் ஏழ்மை ஏற்படுகிறது என்றும் ஏழ்மையால்தான் மக்கள் பெருக்கம் என்றும் வாதாடப்படுகிறது.

இருதரப்பினரும் சரிதான்.

ஏழ்மையைப் பற்றிப் படிக்கும்போது, 'ஏழ்மையின் நச்சுச் சுழல்' என்று ஒன்று வருகிறது.

அறிஞர்கள் இதனைப் பின் வருமாறு சொல்கிருர்கள்:

ஒருவன் ஏழையாக இருப்பதால் ஏழையாக இருக்கிருன். இது எப்படி நிகழ்கிறது?

ஒருவன் ஏழையாக இருக்கிருன். எனவே அவனுக்கு நல்ல சாப்பாடு கிடைப்பதில்லை.

நல்ல சாப்பாடு கிடைக்காததால் அவனுக்கு உடல் பலமும் நலமும இல்லை. உடல் பலமும் நலமும் இல்லாததால் அவனது உழைக்கும் திறன் குறைகிறது. உழைக்கும் திறன் குறைவதால் அவனது ஊதியமும் குறைவாக இருக்கிறது; ஊதியம் குறைவாக இருப்பதால் அவன் ஏழையாக இருக்கிருன்.

மக்கள் தொகைப் பிரச்சினையை நாம் அணுகும் போது இருமுனைகளிலும் இருந்து நோக்க வேண்டும்.

மக்கள் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் ஏழ்மையை ஒழிக்கவும் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்த வேண்டும். எனவே ஏழ்மை ஒழிப்பே சிறந்த கருத்தடைச் சாதனம் என்று சொல்வோரும் உண்டு.

இவ்வாருக 'நச்சுச்சூழலில்' வாதத்தைத் துவக்கிய இடத்திற்கே வந்து சேர்ந்து விடுவோம்.

இவ்வாருன நச்சுச் சுழல்களை உடைத்தெறிவதைத் தான் பொருளாதாரத் திட்டமிடுதலில் முக்கியமான தாகக் கருதப்படுகிறது. ★

## வின்ஸ்டன் சேர்ச்சிலின் நிதானம்

சேர்ச்சில் நல்ல சிந்தனையாளர். சிறந்த நகைச்சுவையாளர். அதற்கு மேலாக வெறும் ஆர்ப்பாட்டங்களை அப்படியே நம்பிவிடக் கூடிய வரல்ல...

அதற்கு உதாரணமாக அவர் பிரதமராக இருந்த காலத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதைக் குறிப்பிடலாம்...

அந்தக் கூட்டத்தில் சேர்ச்சில் பேசப்போகிருர் என்றதுமே இங்கிலாந்தே அந்த திடலில் திரண்டதுபோல அவ்வளவு மக்கள் திரண்டிருந்தார்கள்.

அந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து சேர்ச்சிலின் ஆதரவாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி...

இவ்வளவு ஜனங்களும் சேர்ச்சிலின் ஆதரவாளர்களே என்று நம்பினுர்கள்.

இதே அபிப்பிராயத்தைக் கொண்டிருந்த கூட்டத்தலைவரும், 'நமது பிரதமர் மீது மக்களுக்கு எவ்வளவு அபிமானம் இருக்கிறது என்பதற்கு திரண்டிருக்கும் இந்த மக்கள் வெள்ளமே சாட்சி' என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனுல் சேர்ச்சிலோ அந்த கூட்டத்தைக் கண்டும், தன்னைப் புகழ்ந்து பேசப்பட்டதைக் கேட்டும் நிதானம் இழந்துவிடவில்லை!

எனவே சேர்ச்சில் பேசும் போது கூறினுர்...

'இங்கே திரண்டிருக்கும் மக்களைச் சுட்டிக்காட்டி இவர்களுக்கெல்லாம் பிரதமர் மீது மிகுந்த அபிமானம் இருப்பதிஞல்தானே இவ்வளவு திரளாக வந்து கூடியிருக்கிருர்கள்' என்று இந்தக்கூட்டத் தலைவர்கூட குறிப்பிட்டார்.

ஆனுல் எனக்குத் தெரியும்... இன்று இதே மேடையில் இந்த நேரத்தில் என்னைத் தூக்கிலிடப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தால் இதை விடவும் பன்மடங்கு மக்கள் இங்கே திரண்டிருப்பார்கள்'.

இவ்வாறு அவர் கூறியதும் தங்களை மீறிய நகைப்பில் அவை மூழ்கியது!

இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர் சேர்ச்சில்! இரண்டாம் உலகப் போரின்போது நேச நாடுகளின் (இங்கிலாந்து அமெரிக்கா, ரஷ்யா, உள்ளிட்ட நாடுகள்) படைகளுக்குத் தலைமை வகித்து போரிலே வெற்றிகண்டு உலகப் புகழை அடைந்தவர் இவர்.

ஆனுலும் போர் முடிந்து அடுத்து வந்த தேர்தலிலே சேர்ச்சிலை இங்கிலாந்து மக்கள் தோற்கடித்தார்கள். ★

## வியாசர் முனிவர் சொல்லாத— வில்லிபுத்தூரார் கூறியகதை!

சூதாட்டத்தில் தருமர் முதல் தடவை தோற்று, திரௌபதியும் அவமானப்பட்ட பிறகு, திருதராஷ்டிரன் அவர் இழந்த எல்லாப் பொருள்களையும் தருமரிடம் திருப்பிக்கொடுக்கிருன்.

ஆனுல் தருமர் மீண்டும் சூதாட எல்லாவற்றையும் இழந்து பன்னிரண்டு வருட வனவாசம், ஒருவருட அஞ்ஞாதவாசம் செல்லத் தயாராக இருக்கிருர்.

அப்பொழுது ஒரு நிகழ்ச்சி நடக்கிறது.

'காட்டுக்குப் போவதற்கு முன் நீங்கள் மீண்டும் ஒரு முறை சூதாட வேண்டும்' என்று ஒரு குரல் கேட்டது. யார் என்று திரும்பிப் பார்த்தால் திரௌபதி!

'எதற்காக?'

'நாம் இப்பொழுது அடிமைத்தளையில் இருக்கிருேம். நீங்கள் வெற்றி பெற்ருல் அது போகும்'.

'பணயம் வைக்க ஒன்றும் இல்லையே!'

'ஒன்று இருக்கிறது'

'என்ன அது?'

'உங்கள் புண்ணியம்.'

'சரி அப்படியே ஆடுகிறேன்' என்று ஆடுகிருர்.

முதல் ஆட்டத்தில் தோற்கிருர். இரண்டாவது ஆட்டம் இவர் ஆடவேண்டிய முறை. இவர் காய்களைக் கையில் எடுக்கிருர். அப்பொழுது திரௌபதி இவர் கையைப் பிடிக்கிருள்.

'கேசவா, நாராயணு என்னும் பகவானின் பன்னிரண்டு நாமங்களைச் சொல்லிவிட்டு ஆடுங்கள்' என்கிருள். அப்படியே சொல்லுகிருர், ஆடுகிருர், ஜெயிக்கிருர் அடிமைத்தளை நீங்குகிறது.

ஒரு முக்கிய கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் வில்லிபுத்தூரார் வியாசர் சொல்லாத இக் கதையைச் சொல்லியிருக்கிருர்.

மனிதன் பல கஷ்டங்களுக்குப் பிறகு கடைசி தசைக்கு வருகிருன். அப்பொழுது கடவுளை நொந்து கொள்ளத் தோன்றுமேயொழிய வணங்கத் தோன்ருது.

அப்படி வணங்குகிறவனுக்கு கடவுள் அவன் செய்யும் தீமையின் மூலமாகவே உதவி புரிகிருர்.

சூதாட்டம் தீய காரியம் தான். இருந்தும் தருமர் அதில் வெற்றிகொள்ள உதவி புரிகிருர்.

அதற்காக குதிரைப் பந்தயத்துக்குச் செல்லுகிறவர்கள் கேசவா, நாராயணு என்று சொல்லிவிட்டுப் பந்தயம் கட்டினுல், ஜெயிப்போம் என்று நினைத்தால் அவர்கள் கோவிந்தா தான்.

—புலவர் கீரனின் உரையில் இருந்து.

## புல்லர்கள் என்ற பெயர் வரக் காரணம்

மாமரம் பழுத்தால்தான் மறு மரத்திற்கு கொட்டை கிடைக்கும்.

வாழைமரம் குலை தள்ளிய பிறகுதான் அடிக்கன்று தோன்ற ஆரம்பிக்கும்;



நெல்லின் ஒரு பகுதிதான் விதை ஆகின்றது.

பிறருக்கு உதவுகின்றவன் மற்ருெரு வளர்ச்சிக்கு அடிகோலுகின்ருன்:

புல்லாலே பயன் ஏது? பெருமை ஏது? புல்லுக்கு விதை ஏது?

அதனுல்தான் கீழ்த்தரமானவர்களை 'புல்லர்கள்' என்கிருர்கள்.

சொன்னவர்: கண்ணதாஸன்

## ஞானி உருவாகும் விதம்!

ராஜா பர்த்ருஹரி ஒரு நாள் இரவு திடீரென விழித்துக் கொண்டுவிட்டார். பக்கத்தில் மனைவியைக் காணவில்லை!

அரண்மனை நந்தவனத்தில் வந்து பார்த்தார். அங்கே குதிரைக்காரனேடு அவள் குலாவிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் ராஜா பர்த்ருஹரி துறவுகோலம் பூண்டார். மனைவியைக் கடந்து நடந்தார்.

மனைவி கூறினுள். எனக்கு மிக்க மகிழ்ச்சி! ஒரு மகாராஜாவை இன்று மகாஞானி ஆக்கியது நான்தானே?

ராஜா பர்த்ருஹரி அமைதியாக நின்று சொன்னுர்,

'அது நீயல்ல குதிரைக்காரன்!'

அவள் இதைக்கேட்டதும் அலட்சியமாய் அவரைப் பார்த்துவிட்டு உள்ளே திரும்ப முனைந்தாள்.

அப்போது பர்த்ருஹரி சொன்னுர்,

'நில்! அவனை எப்போது நீ ஞானியாக்கப்போகிருய்?'

கண்ணதாஸன் குட்டிக் கதைகள் நாவலிலிருந்து அனுப்பியவை.

## உங்களுக்குத் தெரியுமா?

- பெட்ரோலுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகம் உபயோகிக்கப்படுவது காப்பி
- ஒரு மனிதனின் இதயம் நிமிடத்திற்கு 72 முறை துடிப்பம் என்பது தெரியும். இதே போல் குருவியின் இதயம் நிமிடத்திற்கு 800 தடவை துடிக்கும். சுண்டெலியின் இதயம் நிமிடத்திற்கு 600 டவைதயும். முயலின் இதயம் நிமிடத்திற்கு 150 தடவையும், குதிரையின் இதயம் நிமிடத்திற்கு 40 தடவையும் துடிக்கும்.
- பர்மாபகுதிகளில் காணப்படும் பச்சோந்திகளுக்கு முன் புறத்தில் கொம்பு உண்டு. ★

## உலகப் பொன்மொழி

மனிதன் வெற்றியிலே கற்பது சொற்பம். தோல்வியிலே கற்பது அதிகம்.

- ஜப்பான்

ஏழைகள் உணவைத் தேடுகின்றனர். செல்வர் பசியைத் தேடுகின்றனர்.

- இந்தியா

## பஞ்சாமிர்தம் பலாசுவமிர்தம்

## ஹிட்லரைக் கொல்லும் சதி வெற்றி பெற்றிருந்தால்....

1944 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி.........

சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லர் ரஸ்டேன்பேர் தலைமையகத்தில் தனது உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிருர்.

குண்டு ஒன்று திடீரென்று பலத்த சத்தத்துடன் வெடிக்கிறது.

அதிகாரிகள் பதறி அடித்துக் கொண்டு ஓடுகின்றனர்.

ஹிட்லருக்கு சிறிய காயம் ஏற்படுகிறது.

குண்டு வைத்த ஜேர்மன் ராணுவ அதிகாரி கேர்னல் ஸ்டபன்பேர்க் பெர்லிக்குத் தப்பிச் சென்று விட்டார்.

இருந்தும் ஹிட்லரின் துருப்புக்கள் ஸ்டபன்பேர்க்கையும் அவரது மூன்று சகாக்களான ஜெனரல் பிரிட்ரிச் ஒல்பிகச்ட், கேர்னல் மேர்ட்ஸ் லொன் கேர்ன்ஹீம், லெப்டினன்ட் லுட்விக் பெக் ஆகியோரையும் பென்ட்லர் ஸ்ட்ராஸ்ஸே என்னும் இடத்தில் வைத்துக் கைது செய்தன.

அந்த இடம் மேற்கு பெர்லினில் உண்டு. அங்கு வைத்தே அவர்கள் நான்கு பேரும் ஹிட்லரிஞல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குண்டு வைத்த அதிகாரியின் நினைவாக, நால்வரும் சுடப்பட்ட இடம் 'ஸ்டபன்பேர்க் ஸ்ட்ராஸே' என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நால்வரின் முயற்சி அன்று வெற்றி பெற்றிருந்தால், இரண்டாம் உலக மகா யுத்தம் ஓராண்டு காலத்திற்கு முன்னரே முடிந்திருக்கும்; லட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்று இன்றும் நம்பப் படுகிறது.

அந்த நான்கு இராணுவ அதிகாரிகளும் 'தேசிய வீரர்' களாக கடந்த மாதம் கிழக்கு மற்றும் ஜேர்மனி அரசுகளால் கௌரவிக்கப்பட்டனர். ★

## மாமியார் வீட்டு முறுக்கு எப்படி? கலைஞரின் நகைச்சுவை

கலைஞர் கருணுநிதி தன் நண்பர்கள் சிலருடன் காரில் பயணம் செய்துகொண்டிருந்தார்.

நண்பர்களில் ஒருவர் பத்திரமாய் வீட்டில் இருந்து கொண்டு வந்த பண்டம் ஒன்றை கலைஞரிடம் நீட்டினுர்;

அது வேருென்றுமல்ல ... முறுக்கு...

அதைக் கையில் வாங்கியபடி கலைஞர், 'ஏதய்யா, திடீரென்று முறுக்கு' என்று கேட்டார்.

அந்த நண்பரோ, 'என் மாமியார் தங்கள் வீட்டில் இதைச் செய்து எனக்காக அனுப்பிவைத்திருந்தார். அதைத்தான் எடுத்துவந்தேன்' —என்ருர்.


ஏனய்யா, மாப்பிள்ளைக்கு முறுக்கு இல்லை என்பதை மாமியார் தெரிந்துகொண்டு விட்டார் என்று சொல்லுமய்யா?

—என்று கலைஞர் கூறவே முறுக்குக் கொடுத்த நண்பரின் முகம் கோணியது. மற்றவர்கள் சிரித்தனர். கலைஞரின் நகைச்சுவை உணர்வு மிளிர்ந்தது.



கருணுநிதி

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்

Grant BJK&E PFL 1158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம்

## தமிழ் இலக்கண வினா - விடை

(க. பொ. த: உயர்தர மாணவர்களுக்குரியது)

தொகைநிலைத் தொடர்கள் என்றால் என்ன? தொகை நிலைத் தொடர்களின் வகைகளைத் தந்து விளக்குக.

சொற்கள் ஒன்றோடொன்று சேரும்போது அவற்றுக்கிடையே வருகின்ற உருபுகள் அல்லது இடைச்சொற்கள் மறைந்து ஒருசொல் போல் அமையுமாயின் அவை தொகைநிலைத் தொடர்கள் என அழைக்கப்படும்.

இவை,

1 வேற்றுமைத்தொகை.
2. வினைத்தொகை.
3. பண்புத்தொகை.
4. உவமைத்தொகை.
5. உம்மைத்தொகை.
6. அன்மொழித்தொகை

என ஆறுவகைப்படுத்தப்படும்.

### வேற்றுமைத்தொகை:

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்கையில் அவற்றுக்கிடையே வருகின்ற வேற்றுமையுருபுகள் மறைந்து வருமாயின் அது வேற்றுமைத் தொகையெனப்படும்.

1, 2 ஆம் வேற்றுமைத் தொகை:

உ+ம்: வீடு கட்டினன் (ஐ உருபு மறைந்து வந்தது) வீட்டைக் கட்டினன் என விரியும்.

3 ஆம் வேற்றுமைத் தொகை:

உ+ம்: வேலிபாய்ந்தான். வேலியால் பாய்ந்தான் என விரியும்)

(3ஆம் வேற்றுமை ஆல் உருபு மறைந்து வந்தது)

4ஆம்வேற்றுமைத்தொகை:

உ+ம்: கண்ணன் தம்பி (கு உருபு மறைந்து வந்தது) கண்ணனுக்கு தம்பி என விரியும்;

5ஆம்வேற்றுமைத்தொகை:

உ+ம்; ஊர் நீங்கினன் (இன் உருபு தொக்கு வந்தது) ஊரின் நீங்கினன் என விரியும்.

6ஆம்வேற்றுமைத்தொகை:

உ+ம்: என் புத்தகம் (அது உருபு மறைந்து வந்தது) எனது புத்தகம் என வரும்.

7ஆம்வேற்றுமைத்தொகை:

உ+ம்: மலையருவி (கண் உருபு மறைந்து வந்தது) மலையின் கண்ணருவி என வரும்.

### வினைத்தொகை:

சொற்கள் ஒன்றோடொன்று சேருகின்றபோது (வினையுடன் பெயர்) இடையே காலங் காட்டுமுருபுகள் மறைந்து ஒருசொல்போல் தொடரின் அது வினைத்தொகையென அழைக்கப்படும்.

உ+ம்: கடிநாய்.

இடைநிலைகள் மறைந்து குறிப்பாகக் காலம் காட்டுவதால் இது மூன்று காலத்திலும் கொள்ளப்படும்.

உ+ம்: சுடுசோறு, இது சுட்டசோறு [ட்] இறந்த காலம்.

சுடுகின்ற சோறு[கின்று]நிகழ் காலம்.

சுடும் சோறு[உம்]எதிர்காலம்;

### பண்புத்தொகை-

சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்போது பண்பை உணர்த்தும் மை போன்ற விகுதிகளும் ஆன, ஆகிய பண்புருபுகளும் மறைந்து [தொக்கு] வருமாயின் அது பண்புத்தொகையென அழைக்கப்படும்.

உ+ம்: செம்மலர், [மை விகுதியும் ஆகிய என்ற உருபும் தொக்கு வந்தது]செம்மையாகிய மலரென விரியும்.

### இருபெயரொட்டு பண்புத்தொகை:

இயற்பெயரோடு இறப்புப் பெயரொன்று சேர்ந்து இடையே வருகின்ற பண்புருபுகள் மறைந்து தொடருமாயின் அது இருபெயரொட்டு பண்புத்தொகை என அழைக்கப்படும்.

உ+ம்: ஆறுமுக நாவலர் (ஆகிய, என்ற பண்புருபு மறைந்து வந்தது) ஆறுமுகமாகிய நாவலர் என வரும்.

### உம்மைத்தொகை:

சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்போது வருகின்ற உம்மை இடைச்சொல் (உம்) மறைந்து தொடர்தல் உம்மைத் தொகையெனப்படும்.

உ+ம்: பால்பழம் (உம், மறைந்துவந்துள்ளது) பாலும் பழமும் என வரும்.

### உவமைத்தொகை:

சொற்கள் இணையும்போது, போல, போன்ற புனர, ஒப்ப, மான என்ற உவமை உருபுகள் தொக்கநின்று தொடர் உவமைத்தொகையாகும்.

உ+ம்: மதிமுகம்(போன்ற, என்ற உருபு மறைந்தது) மதிபோன்ற முகம் எனவரும்.

### அன்மொழித்தொகை:

மேற்சொன்ன தொகைநிலைத் தொடர்களில் வருகின்ற உருபுகள் மட்டுமன்றி அவை புறத்தே வேறொரு சொல் தொக்குநின்று தொடருமாயின் அது அன்மொழித்தொகை எனப்படும்.

உ+ம்: மணிமாலை பாடினுள் (மணிமாலையை அணிந்த பெண்பாடினுள் எனவரும்)

★

· ஆக்கம்: வேலணையூர் தாஸ் -

## சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய அற நூல்கள்

கி. பி. மூன்றும் நூற்றுண்டோடு முடிந்ததாகக் கூறிய சங்ககாலத்திற்கும் கி. பி. ஏழாம் நூற்றுண்டில் ஆரம்பித்த பல்லவராட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி சங்கமருவிய காலமெனப்படும். அது ஏறக்குறைய 300 ஆண்டுகளைக் கொண்டது.

காலத்தின் போக்கிற்கிணங்க இலக்கியம் தோன்றுகிறது என்பதற்கு சங்கமருவிய கால இலக்கியங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சங்ககாலத்தில் மிகவுயர்ந்த தமிழர் தம் பண்பாடு, சங்கமருவிய காலத்தில், மாற்றம் உற்று இருள் சூழ்ந்த காலப் பகுதியாக காணப்படுகிறது.

இதனால் வரட்சி பொருந்திய இலக்கியங்கள் தோன்றுவதற்கும் அறநெறி கருத்துக்களையும் எடுத்துக் கூறும் இலக்கியங்களின் உற்பத்திக் காலமாகக் கருதப்படுகிறது.

சங்க காலத்தைப்போல நாட்டின் நல்லாட்சி ஒன்றையே மனதிற் கொண்டு ஆட்சிபுரிந்த முடியுடை மூவேந்தரைப்போல சிறந்த அரசர்கள் சங்கமருவிய காலத்தில் காணப்படாமை அரசியலில் ஓர் அமைதியற்ற சூழ்நிலையை சங்கமருவிய காலத்தில் ஏற்படுத்த காரணமாயிருந்தது.

நாட்டின் அரசாட்சி வலுக்குன்றி காணப்பட்டதால் அந்நியரான வடநாட்டார் களப்பிரல் போன்றோர் தமிழ் நாட்டிற்கு வந்து அவர் தம் பண்பாட்டையும் அரசியல் முறையையும் பரப்பியதோடு அவர்கள் வாழ்க்கையில் மிக உன்னதமாகப் போற்றிய யாகங்களையும் கிரிகை முறைகளையும் தமிழ்நாட்டில் பரப்பத்தொடங்கினுர்கள்.

### ஒன்றே குலம் ஒருவனே தேவன்

இதனுல் சங்ககாலத்தில் இருந்தே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று வாழ்ந்துவந்தமக்கள் வாழ்க்கையில் வருணப் பாகுபாடுகள் தோன்ற அவர்கள் போற்றிய பிராமண சத்திரியர், சூத்திரர், வைசியர் போன்ற வருண முறைகளைத் தமிழ் மக்கள் கைக்கொள்ளத் தொடங்கினர்.

இக்காலத்தில் சமணமதமும் பௌத்த மதமும் தமிழகத்தில் தோன்றி வளர்ச்சி பெறத் தொடங்கியமையால் அம்மதங்கள் போற்றிய கொல்லாமை, அன்பு, தருமம், சத்தியம் என்பவற்றில் பிடிப்புக் கொண்ட அறநெறி கருத்துக்களைப் போற்றுகின்ற இலக்கியங்கள் தோன்றத் தொடங்கின.

பௌத்த மதமும் சமண மதமும் பழிபாவங்களிலிருந்து மக்களை மீட்பதற்காக அறநெறிக் கருத்துக்களையும் தரும கருத்துக்களையும் போதிக்கத் தொடங்கினர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றையே போற்றிப் புகழ்ந்தமையால் இக்கால இலக்கியங்கள் அறநெறிக் கருத்துக்களைக் கூறுகின்ற இலக்கியம் என்றும்,

சங்க காலத்திலே யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற முது தமிழுக்கு இணங்க உலகியல் இலக்கியத்தை சித்தரித்துச் சென்ற இலக்கியம் கால சூழ்நிலைக்கேற்ப அறநெறிக் கருத்துக்களைப் பெற்று செல்வதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு இக்காலத்தில் எழுந்த திருக்குறள். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களும் பதினெண்கீழ்கணக்கு நூல்களும் மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

### அறநெறிக் கருத்துக்கள்

இந் நூல்கள் முழுக்க முழுக்க அறநெறிக் கருத்துக்களையும் தரும கருத்துக்களையும் எடுத்துக் காட்டும் இயல்பினை நோக்கும் போது இக்காலத்தில் அறநெறிக் கருத்துக்கு எத்தகைய மதிப்பு இருந்திருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது.

சங்கம்மருவிய காலப் பிற்பகுதியில் வாழ்ந்தவரும், தமிழிலே மிகச் சிறந்த புலவர்களுள் ஒருவராகப் போற்றப்பட்ட காரைக்கால் அம்மையார் அறநெறிக் கருத்துக்களை அடியாகத் தொடக்கி வைத்த பக்திநெறி அவருக்கு

- அ. நிக்ஸன் -

இறைவன் மேலிருந்த எல்லையில்லாத அன்பையும் பக்திப் பிரவாகத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

அவர் தொடக்கி வைத்த பக்திநெறி பல்லவர் காலத்தில் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பொன்னைப் போல் போற்றப்பட்டுச் சைவமும் வைணவமும் தழைத்தோங்க காரணமாய் இருந்தார்கள்.

சங்கம் மருவிய காலப் பகுதிப் புலவர்கள் அறநெறிக் கருத்துக்களையும் பரப்புவதற்கு வெண்பா யாப்பினைக் கையாண்டார்கள்.

இச்சூழ்நிலையே சங்கம்மருவிய காலத்திற்குப் பிற்பட்ட காலமான பல்லவர் காலத்தில் பதிகங்களும் பிரபந்தங்களும் தோன்றுவதற்கும் சோழர் காலத்தில் காவியங்களாகப் பரிணமிப்பதற்குக் காரணமாயின.

காலச் சூழ்நிலைக்கேற்ப இலக்கியம் தோன்றுகிறதென்பதற்குச் சங்கமருவிய காலம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சங்கமருவிய காலத்தில் பெரும் புலவர்களால் இயற்றப்பட்ட, திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி காவியங்கள் இன்று வரை தமிழ்கூறும் நல்லுலகால் போற்றப்பட்டு வருகிறது.

★

## கணவனின் சம்பளத்தில் ஒரு பகுதியை மனைவி பெயரில் போட சட்டம் வருமா?

ஆணிற்குப் பெண் சமம் என்று தத்துவ விளக்கம் செய்து கொண்டு அவதரித்த அர்த்தநாரீஸ்வரரை நாம் வழிபட்டும்கூட, ஏன் முழுமனதாய் அதை நடைமுறையில் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம்?

சக்தி இல்லையேல் சிவன் வெறும் 'டம்மி' தான் என்பதைத் தானே சூசகமாய் 'சக்தி இல்லேன்னு சிவனேன்னு கிட' என்று சொல்லி எதிராளியைச் சமாதானப் படுத்துகிறோம்;

இந்த 'அர்த்தநாரீசுவர' மகிமையை வழிபடாத, ஏன் அப்படி ஒரு அவதாரம் இருக்கிறதென்பதையே அறியாத வெள்ளைக்காரக் கணவர்கள் வீட்டில் சமையல் செய்கிறார்கள்.

மனைவிக்கு 'பெட் காபி' தயாரித்துக் கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள். குழந்தைகளைக் குளிப்பாட்டி, துணி தவைத்து லானில் புல் வெட்டுகிறார்கள்.

ஆனால் இந்த அர்ந்தநாரிசுவரரை வழிபடும் நாம் மட்டும் சக்தியை வழிபடும் நாம் மட்டும் அதே சக்தியை மட்டும் சக்தியாக்கத் தயங்குவதில்லை.

'சமையல் செய்யும் கணவன்' 'தன் குழந்தைகளைக் குளிப்பாட்டும் கணவன்' இவர்கள்தாம் இன்றைய 'ஜோக்' எழுத்தாளர்களுக்கு உதவுகிறவர்கள். இந்த விபரீதத்தை என்னவென்பது?

ஒரு விசுவாசமிக்க வேலைக்காரியாக கொஞ்சமும் முகம் சுளிக்காமல் சமைத்ததையெல்லாம் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பார்த்து பார்த்துப் பரிமாறிவிட்டு, பாத்திரத்தில் மிச்சமிருப்பதைத் தின்று சந்தோஷமடையும் போகும் ஒரு சோத்துக் கூடைக்காரியாக,

கரிசனத்தின் மொத்த உருவான மனைவியாக, அன்பின் அரவணைப்பின் மொத்த உருவான அம்மாவாக இருக்கும் இந்த மனைவி என்ற பேதைக்கு,

அவள் வாழ்வின் அந்திமக் காலத்தில் என்ன பாதுகாப்பு இருக்கிறது!

வேலைக்குப் போகும் பெண்களுக்காவது சம்பளம், என்ற ஒரு கண்துடைப்பு 'சன்மானம்' கிடைக்கிறது.

வீட்டிலுள்ள தீவட்டிக் கொள்ளையர்கள்தாம் அன்றைய சாயங்காலம் வரவிருக்கும் அறுவடைக்காக வாசற்படியிலேயே தவமிருக்கிறார்களே!

அப்படியானால் இவள் வாங்கும் அந்தச் சம்பளம் இவர்களுக்குத் தானே சன்மானமாகிப் போகிறது?

அரசாங்கம் பெண்களுக்கு அவர்களின் நன்மையை உத்தேசித்து எத்தனையோ விதச் சட்டங்களை அமுல்படுத்துகிறது.

கணவன் தன் சம்பளத்தில் ஒரு பகுதியைத் தன் மனைவியின் பெயரில் ஒரு வங்கியில் மாதம் தவறுமல் செலுத்தி விட வேண்டும் என்று சட்டம் இயற்றவேண்டும்.

ஏன் அவர்களே சம்பளத்திலிருந்து பிடித்துக் கட்டிவிடலாம். அதைப்போல சம்பாதிக்கும் பிள்ளைகளும் தங்கள் சம்பளத்தின் ஒரு பகுதியைத் தன் தாயின் பேரில் வங்கியில் போட்டுவிட வேண்டும் என்ற சட்டத்தையும் அமுல் படுத்தவேண்டும்.

இப்படிச் செய்வதால் இந்த அசட்டு அம்மாவின் பெயரில் குட்டி போட்டுக் கொண்டிருக்கும் இந்த வங்கிகளின் கணக்கை உத்தேசித்தாவது அவளின் வாழ்வில் சந்தியா காலத்தில் அவள் கணவனும் பிள்ளைகளும் அவளை கனிவாய்க் கவனித்துக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறதல்லவா?

- சாரதா விஸ்வநாதன் -

## அன்றாட வாழ்வில்...

பூண்டில் பூண்டு ரசம் செய்யலாம். இது வாயுவைக் கண்டிக்கும். உடல் வலி, அசதி நீங்கி, உடல் பலமாகும்.

உணவுடன் பூண்டைச் சேர்த்து வாருங்கள் பூண்டு உங்கள் ரத்தத்தைச் சுத்தப் படுத்தவும் செய்கிறது.

தலைவலி ஏற்பட்டாலும் இரண்டு பல் பூண்டை மிளகு இரண்டுடன் சேர்த்து அரைத்து நெற்றியில் பற்றுப் போடுங்கள், வலி பறந்து விடும்.

இருமல் இருந்தால் நாக்கின் உட்பகுதியில் பூண்டுச் சாற்றைத் தடவுங்கள், குணமாகி விடும்.

பூண்டுச் சாற்றையும் இஞ்சிச்சாற்றையும் கலந்து அருந்தினுல் நெஞ்சுவலி குறையும்.

குழந்தை பெற்ற தாய்மார் பூண்டைப் பாலில் காய்ச்சி வடிகட்டி காலை, மாலை சாப்பிட்டால் நன்றாகத் தாய்ப் பால் சுரக்கும்.

குழந்தைக்குச் சளி பிடித்தால் ஒரு பூண்டை அனலில் சுட்டு, தாய்ப்பாலில் உரைத்துக் கொடுங்கள். சளி வெளியேறிவிடும்.

பூண்டின் தோலை உரித்து அதை அரைத்து பருக்கள், கட்டிகள் மீது தடவுங்கள். ஆச்சரியான முறையில் அவைகள் உடைந்து குணமாகும்.

### தக்காளிக் குளியல்

குளிக்கச் செல்லும்முன் தக்காளியை சாறு பிழிந்து உடல் முழுவதும் தேய்த்துச் சிறிது நேரம் கழிதநுக் குளிக்க வேண்டும்.

இதைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தால் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்கும்.

தோல் சம்பந்தப்பட்ட நோய்களும் நெருங்காது. இதற்குத் தக்காளிக் குளியல் என்று பெயர்.



## கூந்தல் நீளமாக, கருமையாக வளர

பெண்களுக்கு அழகைக் கொடுப்பதில் கூந்தலும் முக்கிய இடம்பெறுகிறது.

கூந்தல் நீளமாக வளர வேண்டும் என்று ஏதேதோ தைலங்கள், எண்ணெகளை எல்லாம் பெண்கள் உபயோகிக்கிறார்கள்.

கூந்தல் வளரவும், பளபளப்பாகவும் கருமையாகவும் விளங்க எத்தனையோ இலகுவான வழிமுறைகள் இருக்கின்றன;அவற்றில் செம்பருத்தித்தைலமும் ஒன்று.

### செம்பருத்தித் தைலம்

செம்பருத்திச் சாறும், நல்லெண்ணெயும் சமபாகம் எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு, தண்ணீர் வற்றும் வரை காச்சவேண்டும்.

எண்ணெய் நன்றாக ஆறிய பின் அவற்றை வடித்தெடுத்து ஒருபோத்தலில் பத்திரப் படுத்தி வேண்டியநேரம் உபயோகிக்கலாம்.

கூந்தல் வளருவதோடு பேன், பொடுகு முதலியனவையும் நீங்குகிறது.

இந்த எண்ணெய்யை உபயோகிப்பதால் கண்ணுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத் தந்து ஞாபகசக்தியையும் விருத்திசெய்கிறது. செய்வதும் சுலபம், சிக்கனமானதும் கூட.

## விஞ்ஞானி நியூட்டன் போதித்த ஆத்மீக உண்மை

புகழ்பெற்ற விஞ்ஞானியான ஐஸக் நியூட்டன் இவ்வுலகையும், அதன் அற்புதங்களையும் சிருஷ்டித்த, சிருஷ்டிகர்த்தராகிய கடவுள்மீது நம்பிக்கையும், பற்றுமுடையவராகவிருந்தார்.

அவருக்கு ஒரு நாஸ்திக நண்பர் உண்டு. அவரும் இவரைப்போல் ஒரு சிறந்த விஞ்ஞானி. இருவரும் விஞ்ஞானம் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் கலந்து கொள்வது வழக்கம்.

விஞ்ஞானத்தில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தமையால், நண்பர்கள் இருவரும் சர்வலோகமும், மனிதர்களும் நிலைத்திருக்கும் அற்புதத்தைப் பற்றி சம்பாஷித்து அடிக்கடி தர்க்கிப்பதுண்டு.

நியூட்டன் ஒருநாள் சூரியனைக் கோளங்கள் சுற்றி வருவதுபோன்ற ஒரு சிறு இயந்திரக் கருவியை அமைத்தார்.

சூரியனைக் குறிக்க பொன்னிறமான உருண்டை வடிவமுள்ள பெரியபந்து ஒன்று மத்தியில் அமைக்கப்பட்டிருந்தது,

அதைச் சுற்றிக் கோளங்கள் சுழலுவதைக் காட்ட சிறிய பந்துகள், கம்பிகளில் பொருத்தப்பட்டு, மத்தியில் உள்ள பெரிய பந்துடன் இணைக்கப்பட்டிருந்தன.

இப்பந்துகள், புதன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, முதலிய கோளங்களைக் குறித்தன. இயந்திரக் கைப்பிடியைத் திருப்புகையில் பந்துகள் சுற்றுவதற்கு வசதியாக பல் சக்கரங்களையும், பட்டிகைகளையும் கொண்டு இணைக்கப்பட்டுத் திறமையாக அமைக்கப்பட்டிருந்தது.

சூரியனைக் கோளங்கள் எவ்வாறு சுற்றிவருகிறதோ, அது போலவே இச்சிறு பந்துகளும் பெரிய பந்தை வெகு அழகாக அதன்தன் பாதையில் சுற்றி வந்தன.

நியூட்டன் தான் அமைத்த இயந்திரக் கருவியைத் தன் அறையில்ஒரு பெரிய மேசையின்மேல் வைத்து அதன் அருகில் உட்கார்ந்து புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார்.

அவருடைய நாஸ்திக நண்பரான விஞ்ஞானி அறையினுட் பிரவேசித்தார். நியூட்டன் அமைத்த இயந்திரக் கருவியை அவர் கண்ணுற்ற பொழுதே, அது இன்னதென்று அறிந்துகொண்டார்.

அவ்விஞ்ஞானி கருவியின் அருகில் சென்று இயந்திரக் கைப்பிடியைத் திருப்பினர். அக்கருவி அழகாகச் சுற்றுலதைக் கண்டு ஆச்சரியமுற்று பரவசமடைந்தார், நியூட்டனை நோக்கி -

எவ்வளவு அழகாகவும், மிகுந்த பண்பாட்டுடனும் இக்கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதைச்செய்தது யார்?, என்று அவ் விஞ்ஞானி கேட்டார். நியூட்டன் அவரை நிமிர்ந்து பாராது,

'இக்கருவியை ஒருவரும் அமைக்கவில்லை, என்று பதிலுரைத்தார். அவர் மறுபடியும் நியூட்டனைப் பார்த்து,

'என் கேள்வியை நீர் புரிந்து கொள்ளவில்லைப் போலிருக்கிறது; இக் கருவியைச் செய்தவர் யார் என்று கேட்டேன்'

நியூட்டன் எழுந்து நின்று தன் நண்பர் தோள்மீது கையைப் போட்டு, பின்வருமாறு அவரிடம் கூறினர்;-

இச்சிறு கருவியை உண்மையாகவே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மகத்துவமான ஆகாய விரிவைப்போல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறிய கருவியை உருவாக்கி அமைத்த ஒருவர் உண்டென்று நீர் நம்பினுல், இச் சர்வலோகமும், அதில் காணப்படும் சகல அற்புதங்களும் தானுகவே அமையாமல், அதனைச் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர் ஒருவர் உண்டென்று நம்பவேண்டும். ஆனுல் நீரோ மாறுபாடான எண்ணமுடையவராக, கர்த்தரிடத்தில் நம்பிக்கை அற்றவராக இருக்கிறீரே, நம்மையும் இச்சர்வலோகத்தையும் சிருஷ்டித்த கடவுள் ஒருவர் உண்டென்று இப்பொழுதாவது நீர் நம்பமாட்டீரா?

இதனைக் கேட்டதும் அந் நாஸ்திக விஞ்ஞானி தன் அறியாமையை உணர்ந்து, அதற்காக வெட்கப்பட்டார். அன்றுமுதற் கொண்டு அவர் கர்த்தரைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவர்மீது முழு நம்பிக்கை உடையவராக ஜீவித்தார்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' (ஆதி -: 1)

'சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

- இருபாலையூர் ஜெபநிதி பொன்னையா -




## மூன்றும் பிறை!

வெட்டிய பூசினிக் கீற்றினைப்போல் - அடி
வானிடை தவழுது மூன்றும் பிறை!
தொட்டிலில் உறங்கும் குழவியைப்போல் - வான்
கட்டிலில் வளருது அந்தப்பிறை!

நீலப்பட்டாம் வான் திரையில் - ஒளி
நித்திலம் வைரம் மணிப்பரப்பில்
கோலங்கள் காட்டிச் சிரிக்குதடி - பிறை
ஞாலத்தை மயங்க வைக்குதடி!

கற்பனை உலகினில் பவனிவரும் - உலக
கவிஞரைப் பித்தர் ஆக்குதடி!
அற்புதம் அந்தக் கவிஞரெலாம் - அதை
பொற்புறு மங்கையர் நெற்றியென்றார்!

மண்ணினைப் பொன்னென மாற்றிடுவோம் - அச்
சின்னப் பிறையின் அழகினிலே
எண்ணங்கள் கற்பனை கோடியெழும் - அந்த
வண்ணப் பிறையைப் பெற்றவளார்?

சிறுவர்கள் எங்கள் சிந்தையிலே - ஒரு
செந்தமிழ்க் கவிதையைத் தந்துவிட்டு
மறைகளின் முதல்வன் மகேசன் முடியில் - அது
பொறையுடன் புகலிடம் பெற்றதுவோ?

- செல்வி பூங்கொடி அருளம்பலம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலக திரைப்பட விழாவில் கறுப்பு இன நாட்டின் சாதனை!

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள சின்னஞ்சிறிய நாடு நைகர்.

சனத்தொகை 64 லட்சமே. ஒன்பது இனங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு வசிக்கிறார்கள். பெரும்பான்மையோர் இஸ்லாம் மதத்தவர்.

நாட்டின் உத்தியோக மொழி பிரெஞ்சு.

முதன்முறையாக நைகர் நாட்டில் தயாரிக்கப்பட்ட படம் அண்மையில் பாரிஸில் நடந்த மூன்றாம் உலகநாடுகள் திரைப்பட விழாவில் பாராட்டுப் பெற்றது.

படத்தைத் தயாரித்தவர் ஆராய்ச்சி மாணவியான மரியமா ஹிமா என்பவர். அவரது முயற்சி பற்றி இக் கட்டுரை விவரிக்கிறது.

நன்றி: பஞேஸ்

நைகர் நாட்டின் தலைநகர் நியாமி.

ஒரு நாள் மாலை அங்குள்ள புகோகிச் சந்தை அருகில் இளம் பெண் மரியமா ஹிமா நிற்கிறார்.

இனங்கள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டிருக்கும் அவர், அதன் இறுதிக் கட்டமாகத் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

அதற்கான கருப்பொருள் கிடைக்குமா? என்று அவர் கண்கள் சந்தைப்பக்கம் தேடுகின்றன.

அந்த நேரம் பார்த்துக் கார் ஒன்று விபத்தில் சிக்கி விடுகிறது.

அந்த இடத்திற்குச் செல்கிறார். விபத்து மோசமானது. அதனால் கார் திருத்தமுடியாத அளவு நொருங்கி இருக்கிறது.

'நாளைக் காலை வந்து பாருங்கள். காரின் ஒரு பகுதி கூட இங்கு இருக்காது'— இப்படிக் குழுமியிருந்தவர்கள் ஹிமாவிடம் கூறுகின்றனர்.

என்ன நடக்கிறது. அதைப் பார்த்து விடுவோமா! என்று ஹிமா தீர்மானிக்கிறார்.

அந்த இடத்திலேயே அவர் நடப்பதைப் பார்த்துக் கொண்டு நிற்கவே நொருங்கிய வாகனம் துண்டு துண்டாக மறைந்து விடுகிறது.

காரின் சக்கரங்களைக் கொண்டு போகும் நபரை ஹிமா பின் தொடருகிறார்.

சக்கரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த டயர், பல சப்பாத்துக்களாக உருப்பெறுகின்றன.

இதுவே ஹிமாவின் படத்துக்குக் கருப்பொருளாகின்றது.

கழிக்கப்பட்ட பொருள்கள் எப்படிப் புதிய பொருள்களாக மாறிவிடுகின்றன — இதுவே படத்தின் கருப்பொருள்.

சப்பாத்துக்கள் செய்து முடித்தபின் எஞ்சும் ரப்பர் எரிக்கப்படுகின்றது. அதனுள்ளே இருக்கும் வயர் எடுக்கப்படுகிறது.

ஆரம்ப சிறிய அளவில்...

ஆனல் புதிய பொருள்கள் Re-cycling உருவாக்கப்படும் தொழில் ஒன்று ஆரம்பமாகிறது.

புகோகியைச் சுற்றி இத்தொழில் நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கானேருக்கு இது வேலை வாய்ப்பு அளிக்கிறது.

கழிக்கப்பட்ட பொருளில் ஒன்றுகூட தூக்கி எறியப்படுவது இல்லை. அனைத்துமே பயனுள்ள பொருட்களாக வெளி வருகின்றன.

ஒரு டயர் 20 ஜோடி சப்பாத்துக்களாக மாறுகின்றது.

நைகரில் பழமொழி ஒன்று உண்டு, 'பாபு பன்ஸா' (Baapu Banza) என்பது அது. இதன் கருத்து ''ஒன்றுமே வீசக் கூடியவை அல்ல'—

ஹிமா தனது இரண்டாவது கழித்து விடப்படும் தகர டப்பாக்களைக் கருப்பொருளாக எடுக்கிறார்.

கொக்கோ - கோலா தகர டப்பா எப்படி தட்டுக்கள், கரண்டிகளாக மாறுகின்றன என்பதை அப்படம் காட்டுகிறது.

மூன்றாவது படத்தின் பெயர் 'தௌகொ' என்பது அதன் அர்த்தம் 'எண்ணெய் பரல்' என்பதாகும்.

கடந்த மேமாதம் பிரான்ஸில் நடந்த சுற்றுப்புறச் சூழல் பட விழாவில் இப்படம் திரையிடப்பட்டது.

எண்ணெய் பரலில் இருந்து செய்யப்படும் பொருள்களைப் படம் எடுத்துக்காட்டுகிறது.

லண்டன், வியன்ன, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் எல்லாம் ஹிமாவின் படங்கள் திரையிடப்பட்டன.

பிரெஞ்சு தொலைக்காட்சியும் அவரின் படங்களை வாங்கி ஒளிபரப்பியது.

'மக்களைச் சிந்திக்கவைக்க வேண்டும் என்பதே எனது இலட்சியம்' இப்படி ஹிமா சொல்கிறார்.

ஹிமாவின் முயற்சிக்கு பக்கபலமாக நைகர் அரசு டெலிவிஷன் இருக்கிறது. 16 மில்லி மீற்றர் கமரா ஒன்றை அது அவருக்குக் கொடுத்து உதவியது.

அக்கமராவும் பழையது. 'நானும் கழித்துவிடப்பட்ட பொருளை உபயோகித்தே படம் தயாரிக்கவேண்டியுள்ளது' என்று கூறுகிறார் ஹிமா.

ஹிமாவின் கலைப் பணிக்கு பிரான்ஸில் நடந்த மூன்றாம் உலக நாடுகளின் திரைப்பட விழாவில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. ★

## விசுவுக்குக் கிடைத்த விதவையின் பாராட்டு!

விசு தயாரித்த 'சகலகலா சம்பந்தி' படம் தமிழகத்தில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது......

அடிக்கடி நேரிலும் டெலிபோன் மூலமும் விசுவுக்குப் பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

டெலிபோன் அழைப்பு ஒன்று விசுவிற்கு வருகிறது.

ஒரு பெண்ணின் குரல்—

'வணக்கம், விசு சார் இருக்கிறாரா?'

'விசு தான் பேசுகிறேன்'

'சகலகலா சம்மந்தி படம் பார்த்தேன். உங்களை கை குலுக்கிப் பாராட்டுகிறதா அல்லது கை எடுத்துக் கும்பிடுகிறதா என்று எனக்குத் தெரியவில்லை...... காரணம் நான் ஒரு விதவை சார்......

'நீங்கள் கை குலுக்கவும் வேண்டாம்; கை எடுத்துக் கும்பிடவும் வேண்டாம். நீங்கள் ஒருவரைக் கை பிடித்து நன்றாக வாழ்ந்தாலே போதும்'—

டெலிபோன் தொடர்பு அறுந்து விட்டது'

சகலகலா சம்மந்திக்குக் கிடைத்த பாராட்டுக்களில் இதுதான் வித்தியாசமானது ஒன்று என விசுவே கூறுகிறார். ★

வெள்ளித்திரையில்

## படத்தின் தலைவிதி டைரக்டரின் கையில்; நடிகை அமலா கூறுகிறார்!

ஐரிஷ் அன்னைக்கும் வங்காளித் தந்தைக்கும் பிறந்த தமிழ் நடிகை அமலா.

இந்திய சமூகத்தின் புதிய தலைமுறை ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்

அவரின் பேட்டி இங்கு தரப்படுகிறது.

★ ஹிந்திப் படவுலகப் பிரவேசம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

உண்மையில் ஹிந்திப் படங்களில் நான் நடிக்க விரும்பவில்லை.

'புஷ்பக்' படத்தைத் தொடர்ந்து பம்பாய் படத் தயாரிப்பாளர்கள் என்னை நாடி வந்தது எனக்கு மகிழ்ச்சிகரமான ஆச்சரியத்தைத் தந்தது.

★ உங்களுடைய சில இந்திப் படங்கள் தோல்வி அடைந்து விட்டனவே!

எனது அபிப்பிராயப்படி இயக்குநரின் Medium ஆக சினிமா இருக்கிறது. கலைஞர்களின் பங்கு மிகக்குறைவே.

★ ஒரு படத்தின் வெற்றியும் தோல்வியும் இயக்குநருக்குரியது என்று சொல்கிறீர்கள்?

உருவாக்குபவர் இயக்குநர். நாம் வெறும் களிமண் தான். பொம்மை என்றும் நீங்கள் அழைக்கலாம்.

தனது விருப்பு, தேவைக்கு ஏற்ப எம்மை மாற்றி அமைக்க வேண்டியது இயக்குநரின் பொறுப்பு.

நான் வெறும் களிமண் என்று சொன்னதற்கு அர்த்தம் உண்டு.

★ எப்படிச் சொல்வீர்கள்? மோசமான கதை வசனம், நடிப்பதற்கேற்ற பாத்திரம் இல்லாமை - இத்தனைக்கும் இடையில் ஒரு கலைஞர் எப்படி தனது திறமையைக் காட்டமுடியும்?

நாம் நடிக்கிறோம், ஆனல் படத்தின் கதை, வசனம் எப்படி எல்லாம் போகும் என்று எமக்கே தெரியாது. இவை எல்லாம் இயக்குநரின் கைகளில் தான் உண்டு.

எடிட் செய்யும் போது ஏற்படும் சிறிய மாற்றம் ஒன்று போதும், படத்தின் தலைவிதியைத் தீர்மானிக்க. ★

## சினிமா பற்றி கே. எஸ். ஜி.

அன்று 'நாணயமான' தொழிலாக இருந்த சினிமா இன்று 'சூதாட்டம்' ஆக மாறிவிட்டது.

இப்படிக் கூறுபவர் பல தரமான படங்களைத் தந்த பிரபல கதைவசனகர்த்தாவும் டைரக்டரும் தயாரிப்பாளருமான திரு. கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

திரைப்படத்தொழில் மோசமடைந்துள்ளதற்குக் காரணம் வெறுங்கையினல் முழம் போடவந்த தயாரிப்பாளர்களும் எந்தவித பண வசதியுமில்லாத விநியோகஸ்தர்களும் தான்.

இதை ஒரு புனிதமான தொழிலாக மதித்து நடக்கும் தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும் இன்றைக்கும் கொடி கட்டிப் பறந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இப்படிச் சொல்கிறார் 'கற்பகம்' கோபாலகிருஷ்ணன்.

## 'வெள்ளிச் சிறுத்தை' விருது பெற்ற 'பிறவி' படம்

மலையாளப் படம் 'பிறவி'க்கு சுவிஸில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவில் வெள்ளிச் சிறுத்தைப்புலி விருது கிடைத்தது.

விழா நடுவர்கள் இப்படத்திற்கு விசேட விருது வழங்கும் படி சிபாரிசு செய்தனர். ★


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15 % |
| 6 மாதங்கள் | 15 % | 17 % |
| 12 மாதங்கள் | 18 % | 20 % |
| 24 மாதங்கள் | 21 % | 23 % |
| 36 — | 22 % | 24 % |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| [illegible] | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.). முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் மாசுபடியாது இருக்க வழி என்ன?

ஸஃது (றலி) என்பார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம்,

'இறைவனிடம் நான் வேண்டிக் கொள்ளும் வேண்டுதல் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டவைகளாகும்படி எனக்காகத் தாங்கள் பிரார்த்திக்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார்.

அப்பொழுது அண்ணர் அவரை நோக்கி,

'ஸஃதே நீர் ஹலான உணவையே உண்டு வந்தால்' உமது வேண்டுதல்கள் இறைவனிடம் அங்கீகாரம் பெறும். என்று கூறலாயினர்.

தபோதனர் ஒருவருக்கு ஒரு பக்திமான் சிறிது ஆகாரம் கொடுக்க அவர் அதை உண்ண மறுத்து விட்டார். அதற்குக் காரணமென்ன? என அந்தப் பக்திமான் அத்த போதனரிடம் வினவியதற்கு அவர்

நாங்கள் ஹலான ஆகாரத்தைத் தவிர வறு ஆகாரங்கள் உட்கொள்ள மாட்டோம். அதனுலேயே எங்கள் இதயம் மாசுபடியாது இருந்து வருகிறது. நாங்கள் இருந்த இருப்பிலேயே சூக்கும உலகக் காட்சிகளைக்கண்டு ஆனந்தப் பரவசம் அடைகிறோம். நீங்கள் உண்ணும் கலப்படமான ஆகாரத்தை மூன்று தினங்கள் நாங்கள் உட்கொண்டு விட்டால் சூக்கும உலகக் காட்சிகளைக் காண முடியாது எங்கள் உள்ளத்திலுள்ள பய பக்தி உள்ளத்தைவிட்டு அகன்று விடும்' என்றர்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பக்திமான்

நான் சதா பகற்காலமெல்லாம் நோன்பிருந்து வருகிறேன். மாதம் ஒன்றிற்கு முப்பது தடவை குர் ஆனை ஓதிமுடித்து வருகிறேன். என்றர்.

அப்பொழுது அந்தத்தபோதனர் 'நேற்றிரவு நான் குடிக்கும் போது நீர் பார்த்திரல்லவா' அந்தப்பானம் என்விடத்தில் நீர் முன்னூறு ரக் அத்துத் தொழுகையில் முப்பது தடவை குர் ஆன் ஓதி முடிப்பதை விட மேலானது' என்று கூறலானர்.

அன்றிரவு அவர் குடித்தது பாலாகும்.

— தொகுப்பு:
எம். எம். அபூபக்கர்



## மனிதா! உன்னை நினைத்து நீ அழு!!

தீய நண்பர்களைக் கைவிடுக. அவர்களின் உறவைத் துண்டி; சத்தியவந்தர்களுடன் (அஹ்லால் ஹக்களுடன்) இணைந்து வாழ்!

உலகமெனும் ஆழ்கடலுக்கு அஞ்சு; இதில் ஏராளமானோர் மூழ்கிப் போயினர்.

இந்த உலகை அடைந்து கொள்வதில், நீங்கள் இரவில் விறகு பொறுக்குபவன்போல் மாறிவிடாதீர்கள். அவன் கையில் என்ன கிடைக்கிறது என்பதை (விறகா? பாம்பா? என்பதை) அவன் அறிய மாட்டான்.

போதுமெனும் பொற்குணத்தைத் தேர்ந்தெடுங்கள். அது தீர்ந்து போகாத பொக்கிஷமாகும்.

ஓ, ஏழை மனிதா! உன்னை நினைத்து நீ அழு! உன் குழந்தை இறந்துபட்டால் பிரளய சகாப்தம் தோன்றி விட்டது போல் துடிக்கின்ருய்; ஆனுல், உன் சன்மார்க்கம் இறந்துவிட்டால் நீ ஏதும் கவலை கொள்வதுமில்லை; அதற்காக நீ அழுவதுமில்லை. ★

தொகுப்பு:
— பாத்திமா பஸ்ஞ பயாஸ்

# தரிசனம்

நமது வீட்டிலே வழக்கம் போலவே ஓர் இரவு குடும்ப ஜெபம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை, ஸ்தோத்திரப் பாடல்கள், வேத வாசிப்பு, ஜெபம் யாவும் முடிந்து ஆசீர்வாத ஜெபமும் கூறிமுடிக்கப்பட்டது.

எனது மனைவியைத் தவிர மற்ற நாம் யாவரும் ஜெப நிலையிலிருந்து எழும்பிவிட்டோம், மனைவிக்கு ஜெப வேளையில் நித்திரை வந்திருக்கலாம் என்ற சந்தேகத்துடன் தட்டி எழுப்பினேன்.

## - வண. சாம் செல்வநாயகம்

'கர்த்தரோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கிறேன் என்னைத் தட்டி எழுப்பிவிட்டீர்களே' என்று பதில் வந்தது.

'என்ன சம்பாஷித்தீர்கள் என்று கேட்ட பாழுது தான் கண்டுகொண்டிருந்த தரிசனத்தைப் பற்றிப் பின்வருமாறு விமர்சித்தார்:

தனக்கு முன்பாக ஒரு கரும்பலகை தோன்றியதாம். ஒரு அழகான கை வெண்சட்டியினல் கரும்பலகையின் மேல் எழுதியது. 'இயேசுவின் இரண்டாம் வருகை (199-') என்று மூன்று இலக்கங்கள் தெளிவாக எழுதப்பட்டது. நாலாவது இலக்கத்தை இன்னுரு கை மூடிமறைத்துக் கொண்டிருந்ததாம். அந்தக் கடைசி இலக்கத்தைப் பற்றிய விளக்கத்தை ஆண்டவரிடம் கேட்டு அறிவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் வேளையிலேதான் நான் தன்னைத் தட்டி எழுப்பிவிட்டேன் என்று கூறிக் கவலைப்பட்டார்.


இந்தத் தரிசனத்தின் தாற்பரியம் என்னவென்பதைச் சற்று ஆலோசிக்கவேண்டிய பொறுப்பை வாசகர் பக்கத்திற்கே விடுகிருேம்.

(யோவெ 2:28)இல் 'உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்' என்று கூறப்பட்டிருக்கிறது. 'அந்த நாளையும் (இயேசுவின் வருகையின்) அந்த நாழிகையையும், பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனுலும் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற கர்த்தருடைய வசனங்களும் அவருடைய வருகைக்காக உத்தம உள்ளத்தோடு காத்துக்கொண்டிருக்கிற விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படுகிற தரிசனங்களும் இன்று நடைபெற்றுவரும் உலக சம்பவங்களுமாகிய மூன்றும் ஏகமாய் 'கர்த்தரின் வருகை சமீபம்' என்று சாட்சி கூறுவதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது நமது கடமை ஆகும்.

'இதோ மணவாளன் வருகிருர். அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள். (மத் 25:9) என்று கூவி அழைத்து, தூங்கும் கன்னிகைகளை எழுப்பவேண்டியதும் நமது பிரதான கடமையாயிருக்கிறது.

இதோ மேகங்களுடனே வருகிருர். கண்கள் யாவும் அவரைக்காணும் (வெளி 1:7).



## இந்தப் புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்வது எப்படி?

பவுல் சொன்னுர்: நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினுலே பிழைத்திருக்கிறேன்.

கிருபையினுலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினுல் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிருேம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிருர். கலாத்தியர் 2·20, எபேசியர் 2:8-10.

## பிறவாமை காண அருள்வாய்!

வடி வேலெறிந்து
அலை நீரருந்தி
மலை கூறு செய்த வலியாய்
தடு மாறி நின்ற
பிர மாவையன்று
சிறை செய்த ஞான ஒளியாய்
விடை யேறுகின்ற
உமை பாகன் மைந்த
விழி யாறிரண்டு உடையாய்
நடை யாக நல்லை
பதி வந்து சென்னி
பணி வாரைக் காக்க வருவாய்!

எரி செய்து காம
னுறு சாம்பராக
நுதல் கண்விழித்த சிவனின்
பொறி யா யெழுந்து
பொய் கைகுளிர்ந்து
உரு வானகருணை யெழிலே!
அரு நேயனருண
கிரிநாதன் தமிழில்
கொண்டாடுகின்ற குகனே
அரு நோயின்று
திரு வாயில்முன்பு
அழுவாரைக் காக்க வருவாய்!

மல மீது நின்று
மய லேசுமந்து
ஒளியை மறந்து இருளில்
உல காசை காதல்
உற வின்பதுன்பம்
வரு பந்தமென் றலந்தோம்
மலை மீதுலாவி
மயில் மீதுநின்று
மறை யான ஞான ஒளியே
அலை யாமலுன்றன்
கழ லோடு ஒன்றி
பிற வாமைகாண அருளாய்...!

- நிம் மதி

## தொல்லை தீர்க்கும் நல்லை நகரான்!

எடுப்பு

நல்லைநகர் தன்னில் உறைகின்ருய் - எம்
தொல்லை தனைக் களைகின்ருய் (நல்லை)

தொடுப்பு

நாடி வரும் அடியவர்தம் - உள்ளம்
தேடி உன் அருளை நிறைக்கின்ருய் (நல்லை)

முடிப்பு

தினம் பாடுகின்ருேமுன் - புகழை
மனக் காட்டிருளை நீக்கிடுவாய்
வேல் கொண்டே வினை களைவாய் - திரு
நல் நகரில் மனை கொண்டாய். (நல்லை)

- வேலணையூர் கனகலிங்கம் கலாறஜனி

## பாவம் போக்கும் கந்தவேள்

காலால் தலையெழுத்தே மாற்றவல்ல கருணைநிதி
வேலால் சூரனையே இரண்டாகக் காட்டும் பாலன்
நூலால் புகழ்காட்ட அருணகிரி கண்டநாதன்
பாலால் அர்ச்சித்து பாவம் போக்கும் கந்ததேவன்.

தேவவள்ளி கொள்ள தெய்வயானை உடன்கூட
பாவ வினையறுப்பாய் பழம் நீயாக் காட்ட வந்தாய்
பூவாமணம் பரப்பி பூமிக்கே ஒளி என்ருய்
ஆய யார் இருக்கார் ஆற அறிவான கந்தா!

மு. சு. கதிர்காமத்தம்பி

## மயிலேறி விளையாடி வா!

மயிலேறி விளையாடி
வா - உன்
மலர்ப்பதம் தனை வைத்து
ஒயிலாக நீயாடி
வா - உன்
ஒராறு முகம் மலரக்
குயில்போல நீ பாடி
வா - உன்
குறமாது மனம் மகிழ
மயிலேறி விளையாடி
வா - பக்தர்
மனம் குளிர நீயாடி வா

தொல்லைதனைத் தீர்த்தருள
வா - எந்தன்
துயர் நீக்கி எனையாண்டு
நல்வாழ்வு நீயருள
வா - இந்
நானிலம் உனைப் போற்ற
வல்வினைகள் நீயகற்றி
வா - பக்தர்
வாட்டமெலாம் தவிர்த்திட நீ
நல்லைநகர் தனிலே
வா - உனை
நாவாரப் போற்றுகிறேன் வா

- கல்வயல் 'சுதா'



## மனம் சுத்தமாக...

ஒரு சிங்கக்குட்டி, பிறந்த உடனேயே ஒரு ஆட்டு மந்தையில் அகப்பட்டுக்கொண்டு விட்டது.

அது தன்னை ஆடு என்றே நினைத்தது. ஆட்டைப் போலவே நடந்து கொண்டது. அதைப்போலவே காட்டு மிருகங்களைக் கண்டு பயந்தது.

ஒருநாள் பக்கத்துக் காட்டில் இருந்துவந்த ஒரு கிழச் சிங்கம் கர்ஜித்தது. இதைக் கேட்ட சிங்கக்குட்டி தன்னை அறியாமல் தானும் கர்ஜித்தது. அதைப் பார்த்த கிழச் சிங்கம்,

'நீ யார்' ...? என்று கேட்டது.

'நான்ஒரு ஆட்டுக்குட்டி'..! என்றது அந்தச் சிங்கக்குட்டி.

'நீ ஆட்டுக்குட்டியல்ல சிங்கக்குட்டியே...!' என்றது கிழச்சிங்கம்.

அப்போதுதான், தான் ஒரு சிங்கக்குட்டி என்பதை அந்தச் சிங்கக்குட்டி உணர்ந்தது. உடனே ஓடிப்போய் அந்தச் சிங்கத்தோடு சேர்ந்து கொண்டது...!

இந்தச் சிங்கக்குட்டியின் நிலையில் தான் நாம் இருக்கிருேம்; ஆனந்தமே வடிவான பிரம்மம்தான் நாம் என்பதை மறந்து, பிறந்து, பிறந்து இளைக்கும் ஜீவன் என்று நினைத்து உழல்கிருேம்.

அந்தச் சிங்கக்குட்டிக்கு, 'நீ ஆடு அல்ல சிங்கம்தான்' என்று ஞாபகப்படுத்திய கிழச்சிங்கத்தின் நிலையில்தான் நம்முடைய ஆசிரியர்கள் இருக்கிருர்கள்.

ஆகவே மகான்களுடைய தொடர்பு நமக்கு ஏற்பட்டால்தான் நாம் யார் என்ற உண்மை நமக்கு விளங்கும்.

மனிதனுகப் பிறப்பதே அரிது: முத்தியின்மீது நாட்டம்கொள்வது இதைவிட அரிது. இதைவிட அரிது மகான்களின் தொடர்பு கிடைப்பது என்ருர் ஆதிசங்கரர்.

ஆகவே மகான்களைக் கண்டால் அவர்களை உடனே கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்: அவர்களை வணங்க வேண்டும்; அவர்களுக்குச் சேவைபுரியவேண்டும். அவர்கள் நம்மைச் சரிவர நடத்திச் செல்வார்கள்.

இன்னும் நல்ல விஷயங்களை திரும்பத் திரும்பக் கேட்க வேண்டும். பித்தளைக் குடத்தைத் தினம் புளிபோட்டுத் தேய்த்தால்தானே அதுபளிச் சென்று விளங்கும்...? எனவே நம் மனதை சுத்தமாக வைத்திருக்க நல்ல விஷயங்களைத் தினம் கேட்கவேண்டும். ★



டக் உறுதிமிக்கது, நீடித்துழைக்கும் திறமை வாய்ந்தது

விற்பனை நிலையங்கள்: 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

டக் - வலிமைமிக்க நம்பத்தகுந்த பாரம் ஏற்றி. நீண்டதூரம் பொருட்களை ஏற்றிச் செல்ல மிகவும் விரும்பப்படுவது டக். நடைமுறை அறிவடிப்படையான பொறியமைப்பில் கடுகடுப்பாக அமைக்கப்பட்டது.
டக் ஒருபோதும் உங்களை ஏமாற்றம் அடையச் செய்யாது. எல்லாவற்றிலும் மேலாக டக் மிகவும் குறைந்த எரிபொருளில் இயங்கக் கூடியது அருமையான சொத்து.
புதிய சிறப்புமிக்க டக்கில் அமைந்துள்ள ஒப்பிட்டுக் கணிக்க முடியாத தொழில்நுட்ப இலட்சணங்கள்:-

★ வலுமிக்க ஸ்ரியறிங்.
★ இரு சுற்றுத் தடுப்பு (பிறேக்) முறை.
★ குறைந்த 'கியரில்' இயங்கக்கூடிய 'டிபரென்சியல்'.
★ ஒரு நேர்விசைவல்லக் கண் (சிங்குரோமெஷ்) கொண்ட கியர் பெட்டி.
★ மேலதிக பாரத்தைப் பொறுக்கக் கூடிய, வலுப்பெறச் செய்யப்பட்ட 'செசிஸ்கம்', திருத்தி அமைக்கப்பட்ட 'சஸ்பென்சனும்'
★ துருப்பிடியாத தொப்பி மூடி. ★ 'எயர் ஹோண்'.
★ டூல்பெட்டி. ★ 5 மில்லியன் ரூபா பெறுமதிக்கு மேலான உதிரிப்பாகங்கள்.
★ 12 மாதங்களுக்கு/30,000 கி.மீ. ஓடும் வரை உத்தரவாதம்.
★ 3 இலவச சேவித்தல்கள்

முன்கையிருப்புக்கள் கிடைக்கும்.



இலங்கையில் பிரதான ஏஜென்ஸ் -
பிறீ லங்கா ரேடிங் கொம்பனி லிமிட்டெட்
409, காலி வீதி, கொழும்பு - 3.
தொலைபேசி: 575241 - 4. ரெலெக்ஸ்: 21147 பக்ஸ்: 575441

உதிரிப்பாகப் பகுதி:
168, நீர் கொழும்பு வீதி, பேலியகொடை.
தொலைபேசி: 530595, 530879.
உறுதிமிக்க நம்பத்தகு பாரம் ஏற்றி டக் லொறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் தீர்ப்பு!

குறுக்கதை

சந்நிதி முருகனுடைய திருவிழாக் காலங்களில் அவனைச் சாட்சியாக வைத்துத் தங்கள் பிள்ளைகளின் திருமணவைபவங்களை நடாத்தி மகிழ்வதில் அவன் பக்தர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான காரியம் தான்.

பெரிய பெரிய குடும்பத்தினர்கூட ஆவணிமுகூர்த்தத்தையே தெரிவுசெய்வர்.

இந்த வரிசையில் சுந்தரண்ணையையும் சேர்ப்பதில் தவறில்லை. ஏனென்றால் அவர் ஒரு முருகன் அடிமை. அவருடைய மகன் சந்திரன் கனடாவிலே நல்ல உத்தியோகம் பார்த்துக் கைநிறையச் சம்பளம் எடுக்கிறான்.

அவனுக்கு இந்தமுறையாவது கலியாணம் சரிவந்து முருகனுடைய சந்நிதியில் நடந்தேறவேண்டும் என்று அல்லும் பகலும் அவனை வேண்டினார்.

நல்ல சொழுத்த சீதனத்தோடை பேசி மகனுக்கும் அறிவிக்க, அவனும் கனடாவில இருந்து முகூர்த்தத்திற்கு முதல்நாள் வந்து சேர்ந்தான்.

தனக்கு வரப்போகும் மனைவியை ஒருக்காப் போய் பார்ப்போம் என்ற எண்ணம் சந்திரனுக்கு இல்லை. தாய் தகப்பன் பார்த்தால் சரியென்று இருந்துவிட்டான். ஆனால் சீதனம் வாங்கிறது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை. இருந்தாலும் தகப்பனோடு இதைப்பற்றி விமர்சித்து தகராறு வைத்துக் கொள்ள அவன் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

காலையில் ஏழுமணிக்கும் எட்டுமணிக்கும் இடையில் தாலிகட்டவேணும் என்று இரண்டுபகுதியும் முடிவெடுத்தார்கள்.

மாப்பிளை பகுதியாட்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்துமணிக்குப் புறப்பட்டுக் கோயிலை வந்தடைவது என்று சுந்தரண்ணை கண்டிப்பான தீர்மானம் நிறைவேற்றினார்.

பெண்வீட்டாரும் ஏன் தாமதிப்பான் என்ற நல்ல நோக்கோடு முதலிலேயே கோயிலைப்போய் அடைந்து விட்டார்கள். கோயிலில் எங்கு பார்த்தாலும் கலியாண வீட்டுக்கார்கள் தான்.

குறைந்தது இருபது முப்பது திருமணங்கள் நிறைவேற ஏற்பாடாகி இருந்தது. நேரம் எப்படிப் போனதோ தெரியவில்லை, நாள் நேரம் நெருங்கிவந்துகொண்டிருந்தது.

மணப்பெண்பகுதி மாப்பிளை பகுதியைக் காத்திருந்து காத்திருந்து ஏமாந்துகொண்டிருந்தார்கள். மணப்பெண்ணின் தாய் தகப்பனுக்கும் யோசனை தொடங்கிவிட்டது.

''எல்லாம் முருகனுடைய கையிலை தான்'' என்று மனதைத் தேற்றினார்கள். மற்ற மாப்பிளைமார் எல்லாம் திருமணம் நடக்கிற இடத்தில் போய் வரிசையாக இருந்து பெண்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தனர்

ஒருக்கால் போய்ப் பார்த்து வருவோமோஎன்று யோசித்தபடி காரிலை ஏறி ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்க தூரத்திலை மாப்பிளைக்கார் மட்டும் வருவது தெரிந்தது.

சற்று ஆறுதல் அடைந்தார்கள். கார்வந்தது தான் தாமதம் விஷயத்தைப் பிறகு கேட்பம் என்று ஒத்திப் போட்டுவிட்டு, உடனடியாக நேரம் நெருங்கிவிட்டபடியால் மாப்பிளையைக்கொண்டு போய் சந்நதியான் வாசலில் இருத்தினார்கள்.

ஏகப்பட்ட சனக்கூட்டம்; அத்தோடு கற்பூரப்புகை ஆளை ஆள் தெரியாமல் மறைத்துக் கொண்டிருந்தது. யாருக்கு யார் மணப்பெண் மாப்பிள்ளை என்று இந்த நெரிசலுக்குள் தீர்மானிக்க முடியாத நிலை.

காரிலை வந்து இறங்கிய கனடா மாப்பிள்ளையின் முகத்தைக்கூடப் பார்க்க நாள் நேரம் இடம் தரவில்லை. எல்லாப் மணப்பெண் பகுதியும் தங்களின் மணப்பெண்களுக்கு முகத்திரை போட்டபடி கொண்டு போய்ப் பக்கத்தில் இருத்தினார்கள்.

மணப்பெண்கள் எல்லாம் தாலி கட்டுற வரைக்கும் தலை குனிந்தபடி இருந்தார்கள். மாப்பிள்ளைமாரும் பெண்கள் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை

ஐயர் சரியானநேரத்திற்குப் பூசை செய்து முடித்து மாப்பிள்ளைமாரின் கையில் தாலியைக் கொடுத்துக் கட்டும்படி பணித்தார்.

ஐயரின் சகல காரியங்களும் நிறைவேற மாப்பிள்ளை மணமகள் இருவரும் கை கோர்த்தபடி வீதிவலம் வந்து கொண்டு இருக்கும்போது சனங்களுக்கிடையில் ஒரு பரபரப்புக் காணப்பட்டது.

என்ன விடயமென்று அறியச் சகலரும் ஆர்வமுடையவர்களாகக் காணப்பட்டார்கள்.

கோவிலை அடைந்தார்கள்.

இவங்களின்ரை சுத்தி வளைப்பாலை என்ரை பிள்ளையின்ரை தாலி கட்டுற காட்சியைக் கூடப் பாக்கக் குடுத்து வைக்கயில்லை என்று முருகனையே நொந்தபடி காரை விட்டு இறங்கினவருக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது.

அவரோடை வந்த சொந்தக்காரர் ஒருத்தர் நின்றவர்களுக்கு விடயத்தைச் சொல்லிக் கொண்டு இருந்தார்.

ஆனால் நாங்கள் கலியாணத்திற்கு அவசரமாகப் போகவேணும் என்று கேட்க மாப்பிள்ளைக்காரை மட்டும் கெதியாக விட்டுட்டு எங்களையெல்லாம் ஆறி ஆறிச் சோதனை போட்டுத்தான் விட்டவர்கள். அதனாலைதான் இந்த மாறாட்டம் எல்லாம்.

உடுப்பிட்டிப் பொம்பிளை பகுதியும் திருநெல்வேலி மாப்பிளை பகுதியும் ஒரு மாதிரி முருகன்ரை வாசலிலை நடந்ததென்று ஆறுதல் அடைந்து வீடுகளுக்குப் போய் விட்டார்கள்.

ஆனால் சுந்தரண்ணை விடுவதாக இல்லை. ஒன்று காசு பணம் இல்லாத ஏழைப் பொம்பிளை, அத்தோடு என்ன குலம் கோத்திரமோ தெரியாது. ஒரே இழுபறி தான்.

- காரவையூர் கம்ஸானந்தி -

'வேறொன்றுமல்ல, பொம்பிளை மாறுபட்டுப் போய்ச்சுதாம்' இது ஒரு அன்பர் உண்மை நிலையைக் கூறிவிட்டு முருகனின் நாடகம் இதுதான் என்று நகர்ந்தார்.

மாறிப்போனவர்கள் ஆர் ஆரெண்டு சகலரும் அறிய ஆவல் கொண்டனர்.

காசு பணத்தோடை சுந்தரண்ணைக்கு மருமகளா வர வேண்டியவள் திருநெல்வேலி மாப்பிள்ளைக்கும், சொத்துப் பணம் இல்லாத அச்சுவேலி ஏழை மணமகள் கனடா மாப்பிள்ளைக்கும், மனைவியாப் போய்ச்சுதுகள்.

இதெல்லாம் நடந்த கலக்கத்திலே இருக்கும் போது தான் சுந்தரண்ணையும் சொந்தக்காரரும் வேகமாக வந்து

'விட்டுட்டுவாடா சந்திரா' என்று எத்தினை முறை கத்தினார். ஆனால் அவன் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவன்ரை இலட்சியம் சீதனம் இல்லாமல் முடிக்கிறதுதானே. பெண்சாதியைக் கூட்டிக்கொண்டு போய்க் காரிலே ஏறினான்.

மணமகளின் தகப்பன் முருகனை எண்ணிக் கண்ணீர் விட்டபடி தன்ரை ஊர் சாஸ்திரி பொன்னம்பலம் கூறினது சரியா நடந்து போய்ச்சு என்று அவரையும் நினைத்தபடி சாஷ்டாங்கமாய் விழுந்தார் முருகனின் வாசலில்.

(யாவும் கற்பனை)

# அவென் நதியின் அன்னமான மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர்

- மானியூர் சி. குமாரசாமி எம். ஏ -

ஆங்கில மொழியில் மகா கவியாகவும் தலைசிறந்த நாடக ஆசிரியராகவும் வாழ்ந்த வில்லியம் ஷேக்ஸ்பியர் கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் பிறந்து 17 ஆம் நூற்றாண்டில் அமரரானவர். தமது 52 வயதுக்குள் 37 சிறந்த நாடகங்களையும் அனேக சிறு பாடல்களையும் (Sonnets) எழுதியவர்.

இங்கிலாந்திலுள்ள ஸ்ராட்போட் (Stratford-on-Avon) என்னுமிடத்தில் பிறந்த வில்லியம் சந்தர்ப்பசூழ்நிலையால் தமது 20 ஆவது வயதில் லண்டன் மாநகர் செல்ல நேர்ந்தது.

**ஆங்கிலக் கவிஞர் வரிசையில்**

அங்கு கூத்துக்கொட்டகைகளில் நாடகங்கள் நடிக்கப்பட்டதைப் பார்த்தார் அதில் சிறு பாத்திரங்களை ஏற்று தாமும் நடிக்கலானார். பின்னர் முக்கிய பாகமேற்று நடித்தவர் பிறருடைய நாடகங்களைத் திருத்தி எழுதினார்.

இறுதியில் தாமே சிறந்த இன்பியல் (Comedy) துன்பியல் (Tragedy) வரலாறுயல் (Historical) நாடகங்கள் 37 யாத்து உலகப் புகழ்பெற்றார்; இவரின் காலம் முதலாம் எலிசபெத் மகாராணியாரின் காலமாகும்.

இவர் உலகத்தையே தமது பாடசாலையாகக்கொண்டார், ஆரம்ப கல்வியைத் தவிர கலாசாலைப்படிப்பற்று இருந்தமையால் சிலர் இந்த நாடகங்களை ஷேக்ஸ்பியர் எழுதவில்லை என்ற சர்ச்சையைத் தோன்றுவித்தனர்.

துன்பியல் நாடகங்களான ஹாம்லெற், ரோமியோ அன்ட் ஜூலியட் யூலியஸ்சீஸர், மக்பெத் போன்றனவும் இன்பியல் நாடகங்களாவன மேர்ச்சன்ற் ஒவ் வெனிஸ், மெரி வைப்ஸ் ஒவ் விண்ட்சர் போன்றனவும் றிச்சாட், ஹென்றி போன்ற வரலாற்று நாடகங்களும் உலகப்பிரசித்தி பெற்றவை.

இவருக்கு 18 வயதாக இருக்கும்போது 24 வயதுடைய அன்காதவே (Anne Hathawaz) என்னும் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். தம்பதிகளுக்கு முதலில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. மேலும் குழந்தைகள் பிறந்தன.

தன் வாழ்க்கையிலுள்ள அனுபவங்களையே தமது நாடகங்களில் கையாண்டுள்ளார். விவாகமாகிப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் தான் இவருக்குப் பணமும் புகழும் ஒருங்கே சேர்ந்தன.

இறக்கும்போது இவருக்கு 52 வயது மட்டுமே! பெருஞ் செல்வந்தராயும் புகழ்மிக்கவராயும் வாழ்ந்த இவரை அவொன் (Avon) நதியின் அன்னம் என உலகோர் போற்றுகின்றனர்.

லண்டன் மாநகரிலுள்ள (Glope) குளோப் அரங்கில் இன்னும் இவரது நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. உலக மொழிகள் எல்லாவற்றிலும் இவரின் நாடகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்து தேசத்தின் 20 பவுண் காசுத்தாளில் ஷேக்ஸ்பியரின் புகைப்படம் பதிக்கப்பட்டுள்ளது. ஷேக்ஸ்பியரின் சில மகாவாக்கியங்கள் வருமாறு;


'நாடகமேடையே உலகம் அதில் மக்கள் எங்லாம் நடிகர்களே'

சிலர் பிறக்கும்போது பெருமையுடன் பிறக்கிறார்கள் சிலர் பெருமையைத் தேடிக் கொள்கிறார்கள் மேலும் சிலருக்கு பெருமை தானாகவே வந்தடைகிறது;

நஞ்சைத் தேடுபவர்கள் நஞ்சினை விரும்புவதில்லை

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 105




சொற்சிலம்பம் இல: 105
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 30 - 08 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. இதிகாசங்களில் ஒன்று 7. வலிமை இறுதிச் சொல்லை இழந்துள்ளது 8. கூம்புதல் 9. வேறுபாடு 11. கணவன் 13. 12 பொருட்கள் சேர்ந்தது 14. மேகம் 16. தண்ணீரில் மலர்வது 18. ரிஷி 20. நீர் 21. அமர்வதற்குப் பயன்படும்.

**மேலிருந்து கீழ்:**

1. மந்திர தந்திரங்கள் செய்பவன் 2. பெண் குழம்பியுள்ளாள் 3. அழகியை இப்படியும் கூறுவர் 4. அமர்க்களம் 5. அழகு 8. ஸ்ரீ இராமருடையபிள்ளையின் பெயர் 10. இதழ் விரியாது சிரிப்பது 12. சுவை 15. மான்இனத்தில் ஒன்று 17. கண்ணகியால் எரிக்கப்பட்டது 18. செல்வம் ஒரு சொல்லை இழந்து விட்டது 19. பழம் தலைகீழாகவுள்ளது.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்;

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்;

# ராகு - கேது மாற்றம் தரப்போகும் பலன்கள்

ஆவணி மாதம் 18 ஆம் திகதி (3 - 9 - 89) ராகு மகரத்திற்கும், கேது கற்கடத்திற்கும் மாற்றம் அடைகின்றன.

ராகு கேதுக்கள் ஒரு ராசியில் ஒன்றரை (1½) வருடங்களுக்கு இருப்பர். ராகு கேது என்பவர்கள் பாபக்கிரகங்கள்;

இவர்கள் சுபக்கிரகங்களுடனோ கேந்திராதிபதிகளுடனோ. சுபக்கிரக பார்வை பெற்று, சுப வீட்டில் இருந்தால் நற்பலன்களைச் செய்வார்கள்.

இவர்கள் சாயக் கிரகங்கள் (நிழல் கிரகம்) இவர்களுக்கு 12 பாவங்களில் (வீடு) ஒரு இடமேனும் ஆட்சியாக இல்லை. சொந்த வீடில்லை இவர்கள் இருக்குமிடத்தின் பலனையும், சேர்ந்திருக்கும் கிரகத்தின் பலனையும் சேர்த்துத் தருகின்ற வல்லமையுடையவர்கள்,

இவர்கள் இருக்கும் வீட்டின் அதிபதி; என்ன குணமோ, என்ன பலனைத் தரக் கூடியவரோ, அதையொட்டியே இவர்கள் பலன் செய்வார்கள்.

மகரத்தில் இருக்கும் ராகு. சனியை ஒட்டிப் பலனைச் செய்வார்கள். சனியைப் போன்றவர் ராகு. செவ்வாயைப் போன்றவர் கேது. 3, 6, 11ம் இடங்களில் இருக்கும் போது நற்பலனைச் செய்வார்கள்;

கோசாரரீதியாகப் பலன்களை அறியும் போது ஜனன ஜாதகத்தில் கிரகம் நின்ற நிலையையும், தற்காலம் சந்திர ராசிக்கு இந்தக் கிரகம் நிற்கும் நிலையையும் — இரண்டையும் ஒத்து வைத்துப் பார்த்தே - பலனை முடிவு செய்யவேண்டும்.

ஜனன ஜாதகத்தில் ஒரு கிரகம் பலம் உள்ளதாக இருந்தால் அந்தக் கிரகம் கோசாரத்தில் பலம் இழந்திருப்பினும் கெட்ட பலன்களைச் செய்யமாட்டாது.

தர்ம அர்த்த, காம, மோட்ச, எனப்படும் நால்வகை புருஷார்த்தங்களில் அர்த்த, காமமென்னும்இரண்டும், புவிவாழ்வுக்கும, தர்ம, மோட்ச என்னும் இரண்டும் பர வாழ்விற்கும் உரியன. ராகு புவிவாழ்விற்கும், கேது பரவாழ்விற்கும் உரியது.


உலகியல் துன்பங்களைத் தருவதில் ராகுவை விட கேது மிகவும் அபாயகரமானது: கருமித்தனம், இல்வாழ்வில் அதிருப்தி, மனைவியை இழத்தல், சிறைவாசம், சோகம், துறவு நிலை முதலியன கேதுவின் நிலையைப் பொறுத்து ஏற்படுகிறது.

ராகு சிற்றின்ப விவகாரங்கட்கும் கேது பேரின்பமான முக்தி நிலைக்குய் இகம், பரம் ஆகிய இருமுனைகட்கும் ராகு, கேதுக்கள் காரண கர்த்தாவாக விளங்குகின்றனர்.

## ராசி வாரியாகப் பலன்கள்




ராகு 10 இல் கேது 4 இல்:- முதலீடுகளில் முடக்கம் ஏற்படும். தொழில் இல்லாதவர்களுக்கு தொழில் வாய்ப்பு உண்டு. நினைத்த கருமங்கள் செவ்வனே நடக்கும். எதிர்பாராத லாபங்கள் வந்து சேரும். தேக சுகம், குடும்ப சுகம் நன்றாய் இருக்கும்.




ராகு 9 இல் கேது 3 இல்: எடுத்த கருமங்கள் தாமதமாகவே நடைபெறும். தொழில் துறையில் உள்ளோருக்கு மாற்றங்கள் ஏற்படும். புதிய பதவிகள் வந்து சேரும். முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டார். மனிதாபிமானத்துடன் வாழ்வார்.




ராகு 8 இல் கேது 2 இல்; நினைத்த கருமங்கள் நடைபெறமாட்டாது. கஷ்டமான பலன்களுக்கு இடையில் அதைச் சமாளித்து முன்னேற வாய்ப்புண்டு. தேக சுகம் பாதிக்கப்படமாட்டாது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். அதிர்ஷ்டம் வந்து போகும்.




ராகு 7 இல் கேது 1 இல்: தொழில் துறையில் நஷ்டங்கள் காணும். குடும்பத்தில் நிம்மதியிராது. இனத்தவர்களுடன் பகைமை ஏற்படும். தேக சுகம் பாதிப்படையும். ஜென்மத்தில் பலம் இருந்தால் மேலே சொல்லப்பட்டவையில் பாதி நற்பலன் உண்டு.




ராகு 6 இல் கேது 12 இல் சஞ்சார காலத்தில்; தொழில் துறையினருக்கு முன்னேற்றம் காணும். தேக சுகம், குடும்ப சுகம் சீராக இருக்கும். செலவுகள் கூடுதலாக இருக்கும், பழைய நிலுவைகள் வரவிற்கு இடமுண்டு.




ராகு 5 இல் கேது 11 இல்: ஜென்மத்தில் ராகு பலமிழந்திருந்தால், பொறுப்புக்கள் கூட இடமுண்டு. மறைமுக எதிர்ப்புக்கள், நிம்மதியின்மை, தேகசுகம் பாதிப்படையும், தொழில் துறையினருக்கு மந்தமாகவே இருக்கும். சர்ப்ப பயம், தேவபக்தியின்மை. (IRRELIGIOUS) வயிற்றில் நோய், கோளாறு முதலியன.




ராகு 4 இல், கேது 10 இல் சஞ்சாரம் செய்கையில் ஜென்மத்தில் ராகு பலமாயிருந்தால் தொழில் துறையில் முன்னேற்றம், புதுமனை கட்டுதல், தேகசுகம் சுமாராயிருக்கும். அயலாருடன் பகைமை, மன வேற்றுமை.




ராகு 3 இல் கேது 9 இல் சஞ்சாரம் செய்கையில் பல தொழில் துறையில் முன்னேற்றம். பொருளாதார விருத்தி, நினைத்தவை நடத்தல், சகோதர சகோதரிகளுக்கு தாக்கம் ஏற்படும். பலமுள்ள ராகுவாக இருந்தால் அறிவாற்றல் லாபமுள்ள தொழிலைச் செய்ய வாய்ப்புண்டு,




ராகு 2 இல் கேது 8 இல் பேச்சில் நிதானம், வன்மை இருக்கும், அச்சமற்ற தன்மை உண்டாகும். அரச உதவிகள் கிட்டும், செல்வம் சேரும், நீண்ட ஆயுள் உண்டு. கேது மிதுனம், கன்னி, விருச்சிகத்தில் இருந்தால் கூடிய பிரயாசை மூலம் பணம் கிடைக்கும்;




ராகு 1 இல் கேது 7 இல் மேடம், இடபம், கடகம் முதலாம் இடமாக இருந்தால் கஷ்டங்கள் ஏற்பட இடமில்லை. எதிரிகளை வெல்லக் கூடிய ஆற்றல் உண்டு. செல்வம் உண்டு.




ராகு 12 இல் கேது 6 இல் முயற்சியின் முடிவு வெற்றி. துணிச்சல் உண்டு. தேகசுகம் சுமாராகஇருக்கும். விவசாயத்தால் லாபம் உண்டு. குடும்ப அமைதி நிலவும்; குறிக்கோள் என்ற ஒன்று நிச்சயமாய் இருக்கும். ஜாதகர் எல்லாராலும் விரும்பப்படுவார்.




ராகு 11 இல் கேது 5 இல் நீண்ட ஆயுள், செல்வம், அறிவாற்றல், தொழில் செய்வதில் வல்லவர், வியாபாரம் பலிதமடையும். தீமை குறையும். ஞானமார்க்கத்தில் புத்தி செல்லும்.

- வை. சண்முகசுந்தரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ-பொலி (தெல்லிப்பளை)
91 A/L கலை, வர்த்தகம்
நடைபெறுகின்றன.
பொருளியல்:- திரு. லோகசிங்கம்
அளவையியல்:- திரு. S. S. மனோகரன்
வர்த்தகவியல்:- திரு. இரட்ணம்
கணக்கியல்:- திரு. தேவதாஸ்
தமிழ்:- திரு. தணிகாசலம்
இந்துநாகரிகம்:- திரு. மதியழகன்
அரசியல்:- திரு. செபராஜா
புவியியல்:- திரு. ரேபேட்

சஞ்சீவி சஞ்சிகை

நியூ-பொலி (தெல்லிப்பளை)
O/L DAY CLASSES
[இரண்டாம் பிரிவு]
கணிதம்:- திரு. சதீஸ்
விஞ்ஞானம்:- திரு. வசந்
சமூகவியல்:- திரு. தவா
தமிழ்:- திரு. தணிகாசலம்
ஆங்கிலம்:- திரு. மரியதாஸ்
சமயம்:- திரு. கிரி
வர்த்தகம்:- திரு. கேதீஸ், சத்தி
ஆரம்பமாகி உள்ளது.

26 - 08 - 1989 சனிக்கிழமை

# சொந்த மண்ணில் 'ஆஷஸ்' கிண்ணத்தை பறிகொடுத்த இங்கிலாந்து கிரிக்கெட் அணி!

ஆஷஸ் கிண்ணப் போட்டித் தொடர் 1882 ஆம் ஆண்டு ஆரம்பமானது.

1920 - 21 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் கிண்ணத்துக்கான போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தை 5-0 என்ற போட்டிகள் வித்தியாசத்தில் தோற்கடித்தது.

இத்தொடரில் நடைபெற்ற ஐந்து போட்டிகளிலுமே ஆஸ்திரேலிய அணி வெற்றியீட்டியது.

ஆஷஸ் கிண்ணத்துக்கான போட்டி ஆரம்பமாகிய 1882 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒருமுறை மட்டுமே ஆஸ்திரேலிய அணி 5-0 என்ற போட்டிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

தற்பொழுது இங்கிலாந்தில் நடைபெறுகின்ற ஆறு போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடரில் இதுவரை முடிவடைந்துள்ள 5 போட்டிகளில் 4 போட்டிகளை ஆஸ்திரேலியா வென்றுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

### 1948 க்குப் பின்னர்

1948 ஆம் ஆண்டிற்குப் பிறகு 4-0 என்ற ரீதியில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது இதுவே முதற்தடவை ஆகும்.

ஆறுவது போட்டியிலும் இங்கிலாந்து அணி தோல்வியுறுமாயின் மீண்டும் 5-0 என்ற வெற்றி நிலையை ஆஸ்திரேலியா எய்திவிடும்.

இதுவரை நடைபெற்ற போட்டிகளைக் கவனத்திற் கொள்ளும்போது நடைபெறவுள்ள ஆறுவது போட்டியிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றது.

அண்மையில் நொட்டிங்ஹாம் ட்ரென்ட் பிறிட்ஜ் மைதானத்தில் நடைபெற்ற 5 ஆவது டெஸ்ட்போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்சாலும் 180 ஓட்டங்களினாலும் தோல்வியுற்றது.

நான்காவது நாள் ஆட்டத்துடனேயே முடிவடைந்த இப்போட்டியில் பல சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மார்க்டெய்லர், ஜெப் மாரீஷ் ஆகியோர் வெகு சிறப்பாக ஆடி முதலாவது விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்களைப் பெற்றனர்.

**- இளங்கோ -**

ஆஷஸ் போட்டித் தொடரொன்றில் முதலாவது விக்கெட் இழப்புக்கான அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையான 323 ஓட்டங்களைப் பெற்று சாதனை புரிந்திருந்த இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜக் ஹொப்ஸ், வில்பிரட் ரோஸ்ட் ஆகியோரின் 77 ஆண்டு காலச் சாதனையை டெய்லர், மார்ஷ் ஆகியோர் 5 ஓட்டங்களால் முறியடித்தனர்.

ஜெப் மார்ஷ் 138 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே டெஸ்ட் போட்டியொன்றில் அவர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

அபாரமாக ஆடிய மார்க் டெய்லர் 219 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டித் தொடரில் இவர் பெற்ற இரண்டாவது சதம் இதுவாகும்.

டெய்லர் தான் பெற்ற 219 ஓட்டங்களுடன் ஆஷஸ் போட்டித் தொடர் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்களைப் பெறும் இரண்டாவது ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

இவர் 1948 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் ஆர்தர் மொறிஸ் என்பவர் பெற்ற 696 என்ற ஓட்ட எண்ணிக்கையை முறியடித்துள்ளார்.

### பிறட்மன் சாதனை

ஆஸ்திரேலிய அணியின் தலைசிறந்த வீரர்களுள் ஒருவராகவும் உலகப்புகழ்வாய்ந்த சாதனையாளராகவும் விளங்கும் சேர் டொனல்ட் பிறட்மன் 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் 974 ஓட்டங்களைப் பெற்றார்.

255 ஓட்டங்களைப் பெற்றால் மட்டுமே பிறட்மனின் சாதனையை முறியடிக்க முடியும்.

சகல போட்டிகளிலும் வெகு சிறப்பாக ஆடிவரும் டெய்லர் இச்சாதனையை முறியடிப்பாரா என்பதை ரசிகர்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஐந்தாவது டெஸ்ட்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்புக்கு 602 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

டெய்லர் 219, மார்ஷ் 138, டேவிட்பூண் 73, அலன்போர்டர் 65 ஓட்டங்களைப் பெற்றனர். நிக் குக் 3 விக்கெட்டுக்களையும், பிறேசர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் பெற்ற 65 ஓட்டங்களுடன் உலகின் இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களைப் பெறும் டெஸ்ட் வீரராக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் அலன்போர்டர் விளங்குகின்றார்.

முதலாவது இன்னிங்சில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது போர்டர் முன்னாள் இங்கிலாந்து வீரரான ஜெப்

## விளையாட்டுத் துறை

இதுவரை நடைபெற்ற ஐந்து போட்டிகளிலும் 720 ஓட்டங்களைப் பெற்றுள்ள டெய்லர் எஞ்சியுள்ள ஆறுவது டெஸ்ட் போட்டியில்

போய்கோட்டின் சாதனையை முறியடித்தார்.

### போய்கொட்

போய்கோட் 8,114 ஓட்டங்களைத் தனது டெஸ்ட் வரலாற்றில் பெற்றிருந்தார்.

தற்பொழுது அலன்போர்டர் 8146 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இந்தியாவின் தலைசிறந்த வீரர்களுள் ஒருவராக விளங்கும் சுனில் கவாஸ்கார் 10,122 ஓட்டங்களுடன் முன்னணியில் திகழ்கின்றார்.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிவரும் அலன்போர்டர் இச்சாதனையை முறியடிப்பாரா?

ஆஸ்திரேலிய அணியின் 602 ஓட்டங்களுக்குப் பதிலளித்த இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது.

றொபின் ஸ்மித் 101 ஓட்டங்களைப் பெற்றார். அல்டர்மன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடுமாறு பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 347 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்தது.

எனினும் ஆஸ்திரேலிய அணியினரின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அத்தெட்டன் 47, ஹெமிங்ஸ் 35 ஓட்டங்களைப் பெற்றனர். ஹியூஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் சிறந்த வீரராக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மார்க் டெய்லர் தெரிவு செய்யப்பட்டார்.

55 வருடங்களின் பின்னர் தமது சொந்த மண்ணில் ஆஷஸ் கிண்ணத்தைப் பறிகொடுக்கும் இங்கிலாந்து அணித் தலைவராக கவர் விளங்குகின்றார்.

ஆஷஸ் தொடரின் இறுதிப் போட்டி லண்டனிலுள்ள ஓவல் மைதானத்தில் 24 ஆம் திகதி ஆரம்பமாகியது. இப் போட்டி 29 ஆம் திகதிவரை நடைபெறும்.

(எ-6)

# மூளையின் கட்டைவிரல் நகம் அளவான பகுதியே மனிதனை ஆட்டிப்படைக்கிறது!

பொதுவாக மூளை விஷயத்தில் புத்திசாலிகள் ஆணா, பெண்ணா?

இது சரியான கேள்வியே அல்ல......... அறிவைப் பொறுத்தவரையில் இருவருக்கும் சமம் தான்.

மூளையினுடைய அளவைப் பொறுத்தவரையில் பெண்களுடைய மூளை சற்றே சிறிய வடிவமைப்புக் கொண்டது. ஆனால், அதற்காக அதனுடைய ஆற்றல் குறைவென்று கொள்ள முடியாது.

வானொலி (Radio) இருக்கிறது. ட்ரான்ஸிஸ்டரும் இருக்கிறது. ஆனால் இதில் எது சிறந்தது என்றால் எப்படி? ஆகவே அளவை வைத்து ஆற்றலை நிர்ணயம் செய்ய முடியாது.

> இந்தியாவின் பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் கே. ராமமூர்த்தி. மூளை சம்பந்தமான கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இங்கு தரப்படுகின்றது.

ஆனால் குறிப்பிட்ட திறமைகள் பெண்களிடையே பொதுவாக அதிகம். அதாவது கலைத்திறமை, கற்பனைவளம், Intution போன்றவை பெண்களுக்கு அதிகம்; அதேபோல் தர்க்கம், Reasoning போன்றவை ஆண்களுக்கு அதிகம்.

உதாரணமாக—ஒரு பெண்ணிடம் ஒரு விஷயம் குறித்து 'ஏன் இப்படிச் சொல்கிறாய்?' என்றால் 'அது அப்படித்தான் எனக்குத் தோன்றியது' என்பாள். அது சரியாக இருக்கலாம்! ஆனால், அதற்கான தர்க்கரீதியான காரணத்தை அவளால் சொல்ல முடியாது.

அதே சமயத்தில் ஓர் ஆண் தர்க்கப்படிதான் தனது காரியங்களை நடத்திச் செல்வான்.

இதெல்லாம் பொதுவிதி என்பதல்ல... ஆனால் பொதுவாகத் தென்படும் பொருத்தம்! இதற்கு விதி விலக்குகளும் இருக்கலாம்.

இதனால் தான் நமது இந்தியக் கலாசாரத்தின் 'அர்த்த நாரி' தோற்றத்திற்கு நிறைய அர்த்தங்கள் உண்டு.

ஒவ்வொரு ஆணுக்குள்ளும் பெண்மை இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஆண்மை இருக்கிறது.

ஆனால் அது எத்தனை சதவீதத்தில் வித்தியாசப்படுகிறது என்பதுதான் முக்கியம்!

★ மூளைக்கான உடற்பயிற்சிகள் எவை?

ஒரு விஷயத்தை நினைவுபடுத்திக் கொள்வது, எழுதுவது, பேசுவது போன்ற எல்லாமே மூளைக்கான உடற்பயிற்சிகள் தானே!

உதாரணத்திற்கு, கையைத் தூக்கி உடற்பயிற்சி செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்... அப்படிக் கையைத் தூக்கும் பணியைச் செய்வது மூளை தானே! இதனால் மூளைக்கும் உடற்பயிற்சி தானே!

அதனால்தான் யோகாசனம் ஆழ்நிலைத்தியானம் போன்றவை மூளையினுடைய செயல் திறமையை மேலும் வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இவை மூளையினுடைய செயல்திறன் பாதையை உற்சாகப்படுத்துபவை!

★ சதுரங்கம் (Chess) விளையாடுவதால் மூளை சுறுசுறுப்படைகிறதா?

சதுரங்கம், கணக்குப்போன்றவை மூளைக்கு நல்ல பயிற்சிகள்! வெறுமனே ஒரு பாடத்தை மனப்பாடம் செய்வதால் மூளை வளராது.

ஆனால், ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டால் - இது எப்படி, ஏன் என்று ஆராய்ச்சி செய்யக் கூடிய மனோபாவம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் அது மூளைக்கு நிச்சயமாகப் பலத்தையே தரும்.

எனவே சதுரங்கம் போன்ற விளையாட்டுக்கள் மூளைக்கு வேலை தந்து அதைச் சுறுசுறுப்படையச் செய்வனதான் என்பதில் சந்தேகமே இல்லை.

★ மூளையின் எப்பகுதி மனிதனை ஆட்டிப் படைக்கிறது?

நம்மை உபத்திரவப்படுத்துவது, கஷ்டப்படுத்துவது போன்ற ஆட்டிப்படைத்தல் பணிகளைச் செய்வதற்கு என்றே மூளையில் Hypothalamus என்ற ஒன்று இருக்கிறது.

இந்தப் பகுதி நம்முடைய கட்டை விரல் நகம் அளவே உடையது. இதில் தான் கோபம், தாபம், காமம் போன்ற உணர்ச்சிகள் உண்டாகின்றன. அப்படி Hypothalamus சுரப்பியைச் சுற்றி, உணர்ச்சிவசப்படுதலை உருவாக்கும் சிறிய மூளை (Emotional brain) என்ற பகுதி இருக்கிறது. இவையிரண்டும் இணைந்து விட்டால் மனிதனுக்குத் தலைகாலே தெரியாது.

அப்போது மனித குலத்துக்கே பல கெடுதல்களும் செய்வான். ஆனால், இந்தச் சிறிய மூளையைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரிய மூளைப்பகுதியை உபயோகப் படுத்தவேண்டும். Frontal lobe என்று சொல்லக்கூடிய இப்பகுதி மூளையின் பலத்தை அதிகரித்து இந்தக் கீழ் மூளையின் ஆதிக்கத்தைக் குறைத்தால் மனிதனுடைய வாழ்நாள் சந்தோஷமாக இருக்கும். அப்படிப்பட்டவன் பிறரையும் சந்தோஷப்படுத்துவான். அப்படிச் சிறிய மூளையைத் தனது பெரிய மூளையின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வராதவன் சுயநலவாதியாகவே இருப்பான்.

★ 'மனம்' மூளையுடன் தொடர்புடையதா?

### வைத்திய சஞ்சீவி

நிச்சயமாக! மூளையினுடைய லட்சக்கணக்கான வேலைகளில் ஒன்று மனது! இந்த மனது என்பதில் பல அளவுகள் உள்ளன. அதாவது கோபம், தாபம், மற்றவர்களுக்கு பச்சாதப்படுவது, காதல் வயப்படுவது, குழந்தையிடம் அன்பு செலுத்துவது, விஞ்ஞானம், ஞாபகசக்தி, சிந்திப்பது போன்ற பல்லாயிரம் துறைகள் மனதில் இருக்கின்றன. ஆனால், அத்தனை துறைகளும் மூளையில் இருக்கின்றன. அதனால்தான் 'மனது' ஏற்படுகிறது. ★

## பொது அறிவுப் போட்டி இல. 30

**சரியான விடைகள்:**

1. பாரி, 2. நெல்லிக்கனி, 3. கிளியோபட்ரா, 4. மனம், 5. 100 பாகை C, 6. வெள்ளைமாளிகை, 7. பாடல்கள், 8. கொடுப்பதைத் தடுப்பவன், 9. இன்சொல், 10. சுபத்திரை 11. அருச்சுனன், 12. வைகை.

சிங்கர்*
களிப்பு நிறைந்த
குளிரூட்டிப் போட்டி
இறுதி மாதாந்தச் சீட்டிழுப்பு 1989 ஜூலை 19 ம் திகதி சதாம் வீதி சிங்கர் காட்சியறையில் நடைபெற்றது.
வெற்றியீட்டிய 25 அதிஷ்டசாலிகள்

முதலாம் பரிசு :
ஆர். எம். எஸ். ரத்னாயக்க, 124, கம்பொலவெல, கம்பொல
திலகா வன்னியாராச்சி, 53/ஏ, வனரத்தன வீதி, தெஹிவளை

இரண்டாம் பரிசு :
ஏ. எஸ். பியசேன, பெரகல, கேகாலை
திருமதி நந்தா ஜயசூரிய, 19, வாடி வீட்டு வீதி, கம்பஹா
எச். ஏ. சிரிவர்தன, 'சித்துமின', ஹப்புவலான, மறந்தகஹமுல்லை, திவுலப்பிட்டி

மூன்றும் பரிசு :
டபிளியூ. கே. வனிகசிங்க, 136பி, ஜய மாவத்தை, கடவத்தை
டபிளியூ. என். பி. காமினி சமித்திரசோம, 'லக்மினி', 3185/42, 3ம் கட்டம், தகயகம, அனுராதபுரம்
எஸ். ஏ. டி. சுபசிங்க, 230, பலகடுவ, அலவத்துகொட, திருகோணமலை வீதி, கண்டி
பேர்ஸி பெரேரா, 33, வெதமுல்லே மாவத்தை, வராகொட வீதி, களனி, கிரிபத்கொடை
டபிளியூ. கஹவாராச்சி, வெலகெதர, அளுத்கம
எச். எச். பிரேமசிறி, சிறி பார்ம் கல்காவெல, கரந்தெனிய
ஏ. ஏ. ஹாமினி, தெல்வெல, கிட்டலாவலன, மீகம
எச். எம். மிஸ்பா, 95, சிங்கபிட்டிய, கம்பொல
பி. ஆர். பெரேரா, 43/23, பொன்ஜோன் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13
ஆர். ஈஸ்வரதாசன், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

சிங்கர்*
மாசற்ற மேன்மை

டியூரோல்®
டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157
'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®
தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.
Pfizer
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org